வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வீர மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 153 | பக்கங்கள் : 20




07 முத்திரைத்தாளில் உத்தரவாதத்தில் புரட்சிகள் நடப்பதில்லை



09 நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு வாய்ப்பான மக்கள் எழுச்சி சூழ்நிலை



11 பற்றி எரியும்... எரிவாயு பிரச்சினை



18 இடைக்கால அரசுக்கு இடமளித்து அரசாங்கம் பதவி விலகவேண்டும்



# அவசரகால சட்டத்தை நீக்குமாறு என்னை யாரும் மிரட்டமுடியாது

## 5 வருட மக்கள் ஆணைக்கமைய பதவியில் நீடிப்பேன் என்கிறார் ஜனாதிபதி கோட்டா

கொழும்பு, மே. 08

“நான் நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்ட ஜனாதிபதி. எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளேன். இந்நிலையில், நடைமுறையிலுள்ள இந்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு எவரும் எனக்கு அழுத்தமும் கொடுக்க முடியாது என்னை மிரட்டவும் முடியாது.”

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார். 19

# அவசரகாலச் சட்டம் ஏன்?

## அரசிடம் விளக்கம் கேட்கிறது மனித உரிமை ஆணைக்குழு

கொழும்பு, மே. 08

இலங்கையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமை குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மக்கள் போராட்டங்கள் பெரும்பாலும் அமைதியானதாக இடம்பெறுகின்றன. இவற்றை சாதாரண பொலிஸ் நடவடிக்கைகளின் கீழ் கையாளக்கூடிய நிலை உள்ளது. இவ்வாறான நிலையில் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தியதற்கான காரணத்தை விளக்குமாறு அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் 19

# கருத்து சுதந்திரத்தை மதிக்கவேண்டும் அரசு

## பிரிட்டன் தூதுவர் வலியுறுத்து



கொழும்பு, மே. 08

அமைதியான போராட்டத்துக்கான உரிமைகள் மற்றும் கருத்து சுதந்திரம் மதிக்கப்படவேண்டும் என இலங்கை அரசிடம் பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் 19

# தமிழகத்துக்கு செல்ல முயன்ற 12 பேர் கடற்படையால் கைது!

மன்னார், மே. 08

இலங்கையில் வாழ முடியாமல் இந்தியாவில் தஞ்சம் புக முயன்ற 12 பேர் நேற்று அதிகாலை மன்னார்க் கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பேசாலை மற்றும் மடுப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்ககள் மேலதிக விசாரணைக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# எதற்காக அவசரகால நிலை?

## கனேடிய தூதுவரும் கேள்வி



கொழும்பு, மே. 08

எதற்காக அவசரகால நிலைப் பிரகடனம் செய்யப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்வது கடினம் என கனேடிய தூதுவர் டேவிட் மக்கின்னன் தெரிவித்துள்ளார். 19

# ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மே. 08

இலங்கையின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அவசர காலச் சட்டம் நிச்சயமாக உதவாது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தெற்காசியாவின் பழமையான ஜனநாயக நாட்டில் இலங்கைப் பிரஜைகள் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமையை எவ்வாறு முழுமையாக அனு 19

# அவசரகால நிலை பிரகடனம் அமெரிக்கா தீவிர அவதானம்

கொழும்பு, மே. 08

இலங்கையில் மற்றொரு முறை அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை குறித்து கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமைதியான முறையில் போராடும் இலங்கையர்களின் குரல்களை செவி மடுக்கவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்றுக் காலை தனது உத்தியோகபூர்வ ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையர் 19

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சுயாதீன எம்.பிக்கள் ஆதரவளிப்பர்

கொழும்பு, மே. 08

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் பாராளுமன்றில் முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திக்கட்சி தலைமையிலான சுயாதீன எம்.பிக்கள் குழு தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர நேற்று தெரிவித்தார். 19

# இலங்கைக்கு எதிராக ஐ.நாவும் போர்க்கொடி!

கொழும்பு, மே. 08

“இலங்கை மக்கள், அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்துவது அவசர நிலைமை யல்ல.”

- இவ்வாறு இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மக்கள் முன்னெடுக்கும் போராட்டத்துக்குக் காரணமான விடயங்களைத் தீர்க்க முயல வேண்டும் எனவும் அவர் 19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

காலிமுகத்திடல் 'கோ ஹோம் கோட்டா' போராட்டம் பற்றி பலதடவை இங்கே குறிப்பிட்டிருக்கின்றேன்.

அண்மையில் கொழும்பு சென்று வந்த நண்பர் ஒருவரிடம் காலிமுகத்திடல் பக்கம் போனீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில் ஏற்கனவே தெரிந்ததுதான் என்றாலும், அதனை இந்தப் பத்தியில் இதுவரை எழுதாததற்கு பல காரணங்கள் உண்டு.

ஆனால் இப்போது அதுபற்றிய நேரடிச் சாட்சி ஒன்று கிடைத்துவிட்டதால் அதனை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

கொழும்பு சென்று வந்த அந்த நண்பருக்கு கொழும்பில் பல்வேறு தரப்பிலும் நண்பர்கள் உண்டு. நண்பர்கள் என்றால், 'மச்சாங்' போட்டு கதைக்கின்ற நண்பர்கள்.

நாம் மச்சான் என்பதை சிங்கள நண்பர்கள் 'மச்சாங்' என்று தான் அழைப்பார்கள்.

காலிமுகத்திடலில் நடக்கும் அந்த போராட்டத்தை வழி நடாத்துவதற்கென்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் வழிகாட்டல் குழுவில் பல்வேறு தரப்பிலிருந்தும் பிரதி நிதிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஒரு முன்னணி இடதுசாரிக் கட்சி ஒன்றின் முக்கியஸ்தரும் அந்த வழிநடத்தல் குழுவில் இருக்கின்றார்.

இவர் அவருக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்து, அங்கே நிலைமையை பார்க்க விரும்புவதாகக் கூறியிருக்கின்றார்.

அதற்கு அவர், மாலை ஏழு மணிக்கு எமது வழிநடத்தல் குழுவின் கூட்டம் இருக்கின்றது. அது முடிகின்ற வேளையில் அதாவது, எட்டுமணியளவில் வாருங்கள் என்றிருக்கின்றார். அங்கே அந்த வழிநடத்தல் குழுவின் அலுவலகமாக செயல்படும் ஒரு கொட்டகைக்கு வரச்சொல்லியிருக்கிறார் அவர்.

இவரும் வருவதாக ஒப்புக்கொண்டுவிட்டு, தொலைபேசித் தொடர்பை துண்டித்த பின்னர், அவர் மீண்டும் அழைப்பெடுத்து, 'மச்சாங்... இரவுச் சாப்பாட்டை என்னுடன் எடுக்கலாம்' என்றிருக்கிறார்.

இவர், எப்போதும் நேரம் தவறாமல் எதனையும் செய்து பழக் கப்பட்டவர். சரியாக எட்டுமணிக்கு அவர் கூறிய இடத்திற்கு அருகே போய் நின்றுகொண்டு தொலைபேசியில் அவரை அழைக்க, ஓர் ஐந்து நிமிடங்களில் வந்துவிடுவதாக கூறியிருக்கிறார் அவர்.

ஐந்து நிமிடக் காத்திருப்பின் பின்னர் அங்கே வந்து சேர்ந்த அவர் கையில், ஷங்கரில்லா ஹோட்டலில் வாங்கப்பட்ட 'பிற்ஸா' இருந்தது.

அருகே இருந்த கொட்கை ஒன்றிலிருந்து இருவருமாக பலதையும் கதைத்தவாறே இரவு உணவை உண்டு மகிழ்ந்தனர்.

இலங்கையில் மிக அண்மைக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட நட்சத்திர ஹோட்டல்தான் ஷங்கரில்லா. ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைத்தான் நாம் அறிவோம். ஆனால், ஷங்கரில்லா கட்டி திறக்கப்பட்டபோது இலங்கையின் முதலாவது ஏழு நட்சத்திர ஹோட்டல் என்ற அறிவிப்புடன் திறக்கப்பட்டது அந்த ஹோட்டல்.

முன்னர் இராணுவத் தலைமையகம் இருந்த காணியை வாங்கி கட்டப்பட்ட அந்த ஹோட்டல், காலிமுகத்திடலின் எதிரே கம்பீரமாக காட்சி தருகின்றது. இந்த ஹோட்டலின் எதிர்ப்புறத் திலேயே போராட்டக்காரர்கள் கடந்த பல வாரங்களாக முகா மிட்டு போராடிக்கொண்டிருக்கின்றனர்.

அந்த ஹோட்டலில் சாமானியர்கள் மாத்திரமல்ல, நமது மத்தியதர வர்க்கத்தினர்கூட ஒரு கோப்பி குடிக்கக்கூட அங்கு சென்று குடிக்க முடியுமோ தெரிவில்லை. அந்த ஹோட்டலில் இருந்து அவர் 'பிற்ஸா'வுடன் வந்து நண்பருடன் உண்டு மகிழ் கின்றார்.

இவர் ஓர் இடதுசாரி அரசில் கட்சியின் முக்கியஸ்தர் என்று முன்னரே குறிப்பிட்டிருந்தேன். அவர் அவ்வாறு கட்சி முக்கிஸ் தர் என்றாலும், இவரும் ஒரு சாமான்யர்தான். அவர் எப்படி இங்கே வாங்கி வந்தார் என்பது இவருக்கு மனதுள்ளே உறுத்திக் கொண்டிருந்த கேள்வி.

எதையும் துருவித்துருவி அறிந்துகொள்வதில் எனது நண்பர் கில்லாடிதான். அவர் போட்டுவாங்கிய தகவல்களை சொன்னார்.

இந்த போராட்ட வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்கள் மாத்திரமல்ல, இன்னும் ஏராளமான போராட்டக்காரர்களுக்கு அங்கே (ஷங்கரில்லாவில்) என்ன தேவை என்றாலும் தாராள மாக வாங்கலாம். வாங்கலாம் என்பதல்ல, எடுத்துக்கொள்ள லாம். அங்கேதான் வழிநடத்தல் குழு கூட்டங்களும் நடக்கின் றன.

இதில் எந்த ஆச்சரியமும் ஊர்க்குருவிக்கு இருக்கவில்லை. ஆனால், நண்பருக்கு ஆச்சரியம்.

அவர் கேட்டிருக்கிறார் அது சரி 'மச்சான்' இதுக்கெல்லாம் யார் காசு கொடுக்கின்றார்கள்? என்று.

அதற்கு அவர் சொன்ன பதில் இன்னும் ஆச்சரியமானது, 'சத்தியமாய் எனக்கு தெரியாது....'!

எனக்கும் தெரியாதுதான் வாசகர்களே. உங்களுக்கு யாராவது சொல்லி தெரிந்தால் எனக்கும் அறியத்தாருங்கள்!

**- ஊர்க்குருவி.**

# பதவி விலக வேண்டாம் என பிரதமருக்கு கடும் அழுத்தம்

கொழும்பு, மே. 08

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை ராஜினாமா செய்யக்கூடாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பஸில் ராஜபக்ஷ ஆதரவாளர்கள் கடும் அழுத்தங்களை கொடுத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

பதவியில் இருந்து விலகாது பாராளுமன்றத்தில் பெரும் பான்மை பலத்தில் பிரதமரை தீர்மானிக்க இடமளிக்குமாறும் அவர்கள் மஹிந்த ராஜபக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள்ள னர் என கூறப்படுகின்றது.

நேற்று முன் தினம் நடை பெற்ற அவசர அமைச்சரவைக் கூட்டத்தின் போது பிரதமரை பதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ அறிவித்தார் என தகவல் கள் வெளியாகின.

எனினும் பிரதமரின் ஊடகச் செயலாளர் அப்படியான கோரிக்கை விடுப்படவில்லை என்பதை பிரதமர் உறுதிப் படுத்தியதாக தெரிவித்திருந் தார்.

இதனிடையே கௌரவமாக பதவியில் இருந்து விலகி ஓய்வு பெறுவதற்காக பிரதமருக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வில் உள்ள காகங்களின் கூட் டம் தடுத்து வருவதாக பாராளு மன்ற உறுப்பினர் உதய கம்மன் பில கூறியுள்ளார்.

(அ)

# 2,500 மெற்றிக் தொன் பெற்றோல் நாளாந்தம் விநியோகிக்கப்படும்

கொழும்பு, மே. 08

நாளாந்தம் 4,000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 2,500 மெற்றிக் தொன் 92 ஒக்ரோன் பெற்றோல் ஆகியன விநியோ கிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கைக்கு வருகை தந்துள்ள கப்பல்களில் இருந்து மேலும் 40,000 மெற் றிக் தொன் பெற்றோல் மற்றும் மசகு எண்ணெய் நாளை தரையிறக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தனது உத்தியோகப்பூர்வ ருவிட்டர் தளத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.(அ)

# நிலை குலைக்கப்படும்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் இருந்து வெளிநாட்டு மூலதனம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. டொலர் கையிருப் பும் வேகமாகக் குறைவதாகச் செய்திகள் வருகின் றன. ஒன்றியத்தின் அடுத்த அரசியல் நகர்வு என்ன என்பதை வரவிருக்கும் பிரிக்ஸ், எஸ்சிஓ (SCO) கூட்டங்களின் மூலம் தெரியவரலாம்.

**காங்கிரஸின் காரியவாத நிலைப்பாடு!**

இந்திய மக்களை பாதிக்கும் இந்த நகர்வுகளை எல்லாம் பெரும்பாலான இந்திய எதிர்க்கட்சிகள் தமது எல்லைக்கு அப்பாற்பட்டது என பார்ப்ப தாகவே தோன்றுகிறது. காங்கிரஸ் கட்சியின் ப. சிதம்பரம், 'ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை இந்தியா கண்டிக்க வேண்டும்' என்று கட்டுரை எழுதுகி றார். இந்திய - சீன எல்லைப் பிரச்னையை உக்ரைன் - ரஷ்ய எல்லைப் பிரச்சினையுடனும், விலைவாசி உயர்வை இலங்கையுடனும் ஒப்பிட்டு ராகுல் காந்தி பேசுகிறார். தாங்கள் தேர்தல்களில் வெற்றிபெற முடியாமைக்கு காரணம் ஊடக பலமின்றி இருப்பதுதான் என்றும் கூடுதலாகச் சொல்கிறார். இதன் மூலம் யாருக்கு என்ன செய்தியை இவர்கள் சொல்கிறார்கள்? மற்ற நாடுகள் எல்லாம் நடுநிலை காப்பதன் அரசியல், சிதம்பரம் அறியாததா? இல்லை... நேருகாலம் முதல் இந்தியா சார்பற்ற கொள்கையைக் கொண் டிருப்பது மறந்துவிட்டதா? இல்லை... காங்கிரஸ் அதைக் கைவிடுவதாக அறிவிக்கிறாரா?


மாறும் சூழலுக்கு ஏற்ப காங்கிரஸ் மாறாமல் இன்னும் பழங்கால பண்ணையார்களையும் முதல் மூவர்ணத்தையும் கொண்டு கட்சியை நடத்துவது கைவிட்டுப்போன ஆதிக்கச் சாதிகளை விடுத்து அதற்கு வெளியில் உள்ளவர்களை அணி திரட்டா மல் தாய் அமைப்புடன் இணைந்து விட்டவர் களை மீண்டும் இழுக்க அரை இந்துத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடுவது மென்மைத்துவம், கூட்டாட்சி என வாய்ப்பந்தல் போட்டுவிட்டு இன்னும் டெல்லியில் இருந்து கொண்டு அந்தந்த மாநில தனித்துவத்தைப் புரிந்துகொள்ளாமல் எல்லா மாநிலங்கள் தொடர்பான முடிவுகளையும் எடுப்பது போன்றவற்றை மாற்றாமல், ஊடக பலம் இல்லாததுதான் காரணம் என ராகுல் சொல்வது வெறும் சாக்கு. பஞ்சாப்பில் ஆட்சிக்கு வந்த ஆம் ஆத்மி பகத்சிங், அம்பேத்கர் படத்தை வைக்கப்போவதாக அறிவிக்கிறார். அந்த மாநில மக்களை, சூழலை எந்த அளவுக்கு அவர்கள் புரிந்திருக்கிறார்கள் என்பதை அது காட்டுகிறது. ஆகவே, கால மாற்றம் கோரும் கொள்கை மற்றும் கட்சி மாற்றத்தைச் செய்து மக்கள் ஆதரவுடன் சொந்த பலத்துடன் ஆட்சிக்கு வருவது குறித்து காங்கிரஸ் சிந்திக்க வேண்டும். அதுவல்லாமல் வெளியில் இருந்துவரும் ஆதரவில் அவர்களின் ஊடக பலத்தில் ஆட்சியைப் பிடிக்க நினைப்பது இப்போதோ? எப்போதோ? என இழுத்துக்கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு இறுதிச் சடங்கு செய்வதோடு இவர்களோடு செல்பவர்களையும் புதைகுழியில் இழுத்துச் செல்லும் ஆபத்தும் இதில் இருக்கிறது.

(முற்றும்)

## இன்று உலக அன்னையர் தினம்:

# குடும்பத்தின் மிகப் பெரிய உழைப்பாளி

உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவருடமும் மே மாதம் வருகின்ற இரண்டாவது ஞாயிறு அன்னையர் தினமாக கொண்டாடப்படு கின்றது. நாம் நேரில் காண்கின்ற ஒரே ஒரு தெய்வம் எம் அன்னையே. எம்மை இந்த உலகிற்குகொண்டுவந்தவர் எம் அன்னை. அவருக்கு மதிப்பளித்து, வயதுசென்றாலும் அன்போடு அரவணைத்து நடத்தவேண்டும் என்பதை அனைவருக்கும் உணர்த்தும் விதமாக ஒவ்வொரு வருடமும் அன்னையர் தினம் கொண்டாடப்படுகின்றது. இந்த நாளை எம் வாழ்வில் யாராலும் மறக்கமுடியாது. ஈரைந்து மாதங்கள் கருவிலே எம்மை சுமந்து நல்லபடி யாக உலகத்தை காணச்செய்த அன்னைக்கு மகத்துவத்தையும், மதிப்பையும் கொடுக்கும் நாளாகத்தான் நாம் யாவரும் இந்தநாளை நினைவு கூரவேண்டும்.



முறையாக அன்னை யர் தினம் தோன்றுவ தற்கு அமெரிக்காவின் மேற்குவேர்ஜீனியா வின் கிராப்டன் நகரத்தில் வாழ்ந்து வந்த அனா ஜார்விஸ் என்ற பெண்ணே காரணமாய் இருந்தவர். அவரது முயற்சியால்தான் 1914 ஆம் ஆண்டில் இருந்து வருடம்தோறும் உலகம் முழுவதும் மேமாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் கொண் டாடப்படுவருகின்றது.

**- பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்**






# ரணிலின் வீடு முன்பாக எதிர்ப்புப் போராட்டம்!

## கலகமடக்கும் பொலிஸார் குவிப்பால் பதற்றம்

கொழும்பு, மே. 08

**முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் உள்ள அவரது வீடு முன்பாக போராட்டக்காரர்கள் திரண்ட நிலையில், அந்தப் பகுதியில் பெருமளவான கலக மடக்கும் பொலிஸார் களமிறக்கப்பட்டதால் பரபரப்பான சூழல் ஏற்பட்டது.**

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் முன்னிறுத்தப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை அரச தரப்பினருடன் இணைந்து ரணில் ஆதரித்தார். இது அரசை எதிர்த்துப் போராடி வருபவர்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தை நேற்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்த உள்ளதாக கூறி அவரது வீடு முன்பாக போராட்டக்காரர்கள் நேற்று காலை முதல் திரண்டனர்.

இதனையடுத்தே, அந்தப் பகுதியில் கலகமடக்கும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டதால் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு குறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தி, அது சம்பந்தமாக பாதுகாப்பு தரப்புகளுடன் கலந்துரையாடி, உரிய ஏற்பாடுகளை செய்யுமாறு பாராளுமன்ற சபாநாயகரிடம் ஆளும் கட்சி நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

# மீசாலை பகுதியில் பூசகரிடம் வழிப்பறி

யாழ்ப்பாணம், மே. 08

தென்மராட்சி - மீசாலை தட்டான்குளம் பிள்ளையார் ஆலயத்தின் பூசகரின் பணப் பையை பறித்துக்கொண்டு இளைஞர்கள் இருவர் தப்பி ஓடியுள்ளனர்.

மீசாலையில் உள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றுக்கு நித்திய பூசையில் ஈடுபடும் பூசகர் மற்றுமோர் ஆலயத்துக்கும் தினப் பூசைக்காக சென்று வருவது வழமையாகும்.

இவ்வாறு பூசையில் ஈடுபடும் ஆலயத்தின் நாளாந்த வருமானமும் மாத வேதனமாக 25 ஆயிரத்தையும் தனது பையில் வைத்துக்கொண்டு மீசாலை பிள்ளையார் ஆலயத்துக்கு மோட்டார் சைக்கிளில் வருகை தந்து ஆலயத் திறப்பை எடுத்த சமயம் இளைஞர்கள் இருவர் கைப் பையை பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடினர்.

இது தொடர்பில் பூசகர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# கிளிநொச்சி ஆலயத்திலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, மே. 08

கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் உள்ள ஐயப்பன் ஆலயத்துக்குள் சடலம் ஒன்று நேற்றுக் காலை பொதுமக்களால் அடையாளம் காணப்பட்டது.

43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான லாலசிங்கம் என்ற வர்த்தகரே இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டார்.

பொலிஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கையின் பின்னர் சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலை கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 2 சிறுவர்கள் உயிரிழப்பு!

## ஆற்றில் நீராடச் சென்றபோது விபரீதம்

கொழும்பு, மே. 08

ஆற்றில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

அக்கரைப்பற்று - இறக்காமம் - வாங்காமம் பகுதியில் உள்ள ஆறொன்றில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 சிறார்கள், நீரில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த ஆற்றில் நீராடச் சென்ற 2 சிறுவர்களும், நீரில் இழுத்துச் செல்லப்பட்டதை அடுத்து, பிரதேசவாசிகள் அவர்களை மீட்டு அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்தநிலையில், அவர்கள் உயிரிழந்தாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமியும், 6 வயதுச் சிறுவனும் இதன்போது உயிரிழந்ததாகவும், சம்பவம் தொடர்பில் இறக்காமம் பொலிஸ் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# அவசரகால சட்டத்தை உடனே இரத்து செய்க!

## எதிர்க்கட்சிகள், சிவில் அமைப்புகள் வலியுறுத்து

கொழும்பு, மே. 08

நாட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தியே ஜனாதிபதி இவ்வாறு அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார்.

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டவும், அத்தியாவசிய சேவைகளை தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரச தரப்பில் கூறப்பட்டுள்ளது.

எனினும், காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகை வளாக போராட்டக்காரர்களை அகற்றுவதற்காகவும், மக்களின் போராட்டங்களை ஒடுக்குவதற்காகவுமே அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என சமூக செயற்பாட்டாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதற்கு தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. தனது முடிவை ஜனாதிபதி உடன் மீளப்பெற வேண்டும் எனவும் அவை வலியுறுத்தியுள்ளன.

அதேவேளை, சமகால நிலைமைக்கு அவசரகால சட்டம் தீர்வாகாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அச்சங்கம் இதனை தெரிவித்துள்ளது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுக்கூடுதல் என்பன பொது மக்களின் அடிப்படை உரிமைகளாகும்.

இந்த நிலையில், தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் என்பனவற்றுக்கு, அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தக்கூடாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, அவசரகால சட்ட பிரகடனத்தை இரத்துச் செய்யுமாறு சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது. (அ)

# அத்தியாவசிய மருந்துப் பொருட்களை தட்டுப்பாடின்றி விநியோகிக்க திட்டம்



கொழும்பு, மே. 08

அத்தியாவசிய மருந்துப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி விநியோகிப்பதற்கு புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

கடந்த மாதத்தில் மாத்திரம் 106 மருந்துகள் மற்றும் 38 மருத்துவ உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 2 வாரங்களில் 17 மருந்து வகைகளையும், 81 மருத்துவ உபகரணங்களையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன கூறினார். (அ)

# ஓ.எல். பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்காதோர் தொடர்புகொள்க!

கொழும்பு, மே 08

2021 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை அனுமதி அட்டைகள், எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் மே 23ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை வரை சதாரணதரப் பரீட்சைகள் நடைபெறும் என கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பரீட்சார்த்திகளின் பரீட்சை அனுமதி அட்டைகள் மற்றும் பரீட்சை அட்டவணைகள் சம்பந்தப்பட்ட பாடசாலை முதல்வர்களுக்கும், தனிநபர் பரீட்சார்த்திகளின் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் தத்தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதனை தொடர்ந்து, இம்மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை அனுமதி அட்டைகளை பெறாத பாடசாலைகள் மற்றும் தனிநபர் பரீட்சார்த்திகள், பரீட்சைத் திணைக்களத்தின் கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு, பரீட்சைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. அத்துடன், பரீட்சைக்கான நேர அட்டவணை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள மான www.donets.lk இல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு சிக்கல்கள் மற்றும் பிற பிரச்னைகள் உள்ள மாணவர்கள் கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் கூடுதல் தகவல்களைப் பெறலாம்.

011-2784208, 011278453, 011-3188350 மற்றும் 011-3140314 அல்லது 1911 என்ற இலக்கங்களை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ளலாம். (அ)

# நாட்டில் கலவரம் ஏற்படும் ஆபத்து!

## எச்சரிக்கிறார் கஜேந்திரகுமார்



கொழும்பு, மே. 08

இலங்கை மக்களின் விருப் பங்களுக்கு அரசாங்கம் செவி சாய்க்காவிடின் நாட்டில் கல வரம் ஏற்படும் ஆபத்து உள்ள தாக தமிழ் தேசிய மக்கள் முன் னணி எச்சரித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப் பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம், தேர்தல் ஒன்றே நாட் டின் அரசியல் நெருக்கடியை தீர்ப்பதற்கான ஒரே வழி எனக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தேர்தல் நடத்தப்படும் வரை, மக்கள் நம்பிக்கையை பெறும் வரை இந்தச் சபையின் உறுப்பி னர்கள் வீதியால் செல்ல முடி யாது.

நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றவர் களே பொருளாதாரத்திற்கு ஏதா வது ஒரு வழிகையில் ஒத்து ழைப்பு வழங்குவதாக தெரிவிக் கின்றனர்.

மூன்றில் இரண்டு பெரும் பான்மை இருந்தபோது, அதில் அங்கம் வகித்த குறைந்தது அரைவாசிப் பேரை கொண்டே அரசாங்கத்தை அமைக்க முடி யும். நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்ற குற்ற வாளிகளை கொண்டு எவ்வாறு ஆட்சி நடத்த முடியும் ?

தேர்தல் ஒன்றை நடத்தாமல் அரசாங்கத்தை அமைக்க முடியாது. அதற்கே முன்னு ரிமை அளிக்கவேண்டும். தேர்தலை எவ்வளவு தூரம் பிற் போடுகின்றீர்களோ அந்த அளவிற்கு நாட்டின் அரசியல் நிலைமை மேலும் மோசமா கும். இந்தச் சபையானது மக்க ளின் விருப்பதை பிரதிநிதித் துவம் செய்யாத காரணத்தால் கலவரம் வெடிக்கும் நிலைமை உருவாகும்.

தற்போதும் கூட இராணு வத்தினரை அமைச்சுக்கும் அமைச்சின் செயலாளர் களாகவும் நியமிப்பதில் ஜனாதி பதி தற்போதும் ஆர்வம் காட்டு கின்றார். இந்த நிலையில் கலவரம் வெடிக்குமாயின், மக்க ளின் குரலுக்கு செவிசாய்க்காத அரசாங்கம் இராணுவத்தையே பயன்படுத்தும்.

அதுவே நடைபெறப் போகின்றது. ஜனாதிபதியும் இந்த அரசாங்கமும் அதனை நோக்கியே தள்ளுகின்றது - என் றார். (அ)



# அதிகாலையில் சிங்கப்பூர் பறந்தார் துமிந்த சில்வா!

கொழும்பு, மே. 08

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் துமிந்த சில்வா நேற்று அதி காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப் பாட்டம் நடத்தி வரும் நிலை யிலேயே துமிந்த சில்வா நாட்டை விட்டு வெளியேறி யுள்ளார். (அ)

# பொருளாதார நெருக்கடியால் மேசன் தொழிலாளர்களின் தொழில் பாதிப்பு

கொழும்பு, மே. 08

மேசன் தொழிலாளர்கள் தமது தொழில் பாதிக்கப்பட்டு உள்ளதாக கவலை தெரிவித் துள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கட்டடப் பொருட் களின் விலை அதிகரித்துள்ளது. சிமெந்தின் விலை 2700 தொடக்கம் 3,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக வும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் கட்டுமானப் பணிக்கு தேவையான இதர பொருட்களும் பல மடங்கு அதிகரித்த விலை காரணமாக தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ள தாகவும் அவர்கள் கூறினர்.

ஏற்கனவே ஒப்பந்தம் செய்துகொண்ட வேலைகளை யும் நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதற்கான பணத்தையும் தமது சொந்தப் பணத்திலேயே செய்து கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட் டனர்.

அத்துடன் ஒரு நாள் கூலி யாக 2000 ரூபா பணத்தையே கூலியாகப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அத்தொகையில் தமது குடும்ப வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதா கவும் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். (அ)

# போராட்டக்காரரை சிறிகொத்தவுக்கு அழைக்கிறார் ரணில் விக்கிரமசிங்க!

கொழும்பு, மே. 08

தனது வீட்டு வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர் களை, பேச்சு நடத்த வருமாறு ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

“எனது வீட்டுக்கு வெளி யில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டுள்ளவர்கள், விரும்பினால் கட்சி தலைமையகமான சிறி கொத்தாவில் திங்களன்று என்னை சந்திக்கலாம்.” - என குறிப்பிட்டுள்ளார். (அ)

# தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன



கொழும்பு, மே. 08

தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அள வில் முன்னெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள் ளது.

பொது நிர்வாக முடக் கல் போராட்டத்தின் பின் னர், தனியார் பஸ் சேவை கள் மீள ஆரம்பிக்கப்பட் டுள்ளபோதிலும், எரி பொருள் பிரச்னை காரணமாக, சேவைகளை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை, இந்த நிலை நீடிக்கக்கூடும் என அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.(அ)

# ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களையும் வழிமறித்தனர் போராட்டக்காரர்கள்!

## கூட்டமைப்பு எம்.பிகள் மட்டும் பயணிக்க அனுமதி

கொழும்பு, மே. 08

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர்கள் சிலர் பாராளுமன்றத்தை விட்டு வெளி யேறும் போது பொதுமக்களின் எதிர்ப்பை எதிர் கொண்டனர். எனினும், அந்த வரிசையில் வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இருந்த வாகனத்தை போராட்டக்காரர்கள் பயணிக்க அனுமதித்தனர்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வு ஒத்தி வைக்கப்பட்டதும், பொதுஜன பெரமுன பாராளு மன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறவில்லை.

பாராளுமன்ற சுற்று வட்டாரங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன் தினம் போராட்டத்தில் ஈடுபட்டதால், தம்மை நிச்சயம் வழிமறிப்பார்கள் என்பதை பெரமுன எம்.பிக்கள் அறிந்திருந்ததால் அவர்கள் உடனடியாக பாராளு மன்றத்தை விட்டு வெளியேறவில்லை.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர்கள் ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, ஹெக்டர் அப்புஹாமி ஆகியோர் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறினர்.

இதேவேளை, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகி யோர் ஒரு வாகனத்தில் வெளியேறினர்.

பாராளுமன்றத்துக்கு அருகில் உள்ள ஜயந்திபுர பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனங்களை மறித்தனர்.

இதன்போது, ஹரின் பெர்னாண்டோவுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் தர்க்கம் உருவாகியது. மனுஷ நாணயக்கார, ஹெக்டர் அப்புஹாமி ஆகியோர் நிலைமையை சமாளிக்க முற்பட்டனர்.



“நீங்க எல்லாம் ஒன்றுதான்.. இத்தனை நாள் டீல் பண்ணினது மட்டும்தான் மிச்சம். சஜித்தின் அம்மா திருக்குமார் நடேசனை சந்தித்தது ஏன்? ” என்று போராட்டக்காரர்கள் கூச்சலிட்டனர்.

இதன்போது, ஐக்கிய மக்கள் சக்தி எம். பிக்களின் வாகனங்கள் வழிமறிக்கப்பட்டிருந்தன.

இதன்போது, வழிமறிக்கப்பட்ட வாகனங் களில் ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்கள் இருப்பதை அவதானித்த போராட்டக் காரர்கள், அந்த வாகனம் பயணிக்க அனுமதித்த னர்.

இந்த சூழல் அரசாங்கத்துக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து செயற்பட வேண்டுமென்றும் போராட்டக்காரர்கள், கூட்டமைப்பு எம்.பிக்களிடம் கேட்டுக் கொண்டனர். (அ)

# ‘கோட்டா கோ கம’ கிளை பிரான்ஸிலும்

பாரிஸ், மே. 08

“கோட்டாகோகம” வெளி நாட்டுக் கிளை முதன்முதலாக பிரான்ஸில் இன்று ஞாயிற்றுக் கிழமை திறக்கப்படவுள்ளது.

பிரான்ஸின் தலைநகரான பாரிசில் அமைந்துள்ள ரிபப் ளிக் சதுக்கத்தில் “கோட்டா கோகம” கிளை இயங்கும்.

‘கோட்டா கோ கம’ கிராமம் முதலில் காலி முகத்திடலில் உருவானது. அதன்பின்னர் நாட்டில் ஏனைய பகுதிகளிலும் கிளைகள் உருவாகின. இந்நிலையிலேயே சர்வதேச மட்டத்துக்கும் தற் போது அது சென்றுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
08.05.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கச்சதீவு விவகாரம்?

பி.ஜே.பியின் தமிழ் நாட்டு தலைவர், அண்ணாமலை, கச்சதீவை, இந்தியா, 99 வருட குத்ததைக்கு பெறவுள்ளதாக தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் போதே அவர் இவ் வாறானதொரு தகவலை வெளியிட்டிருக்கின்றார். கச்சதீவை மீளப் பெற வேண்டுமென்று தமிழ் நாட்டின் பிரதான திராவிட கட்சிகள் இரண்டும், தொடர்ச்சியாக குரலெழுப்பி வருகின்றன. கச்சதீவு விவகாரத்தில் மத்திய அரசாங்கத்தை குற்றம்சாட்டி வருகின்றன. இவ்வாறானதொரு சூழலில் தான், தமிழ் நாட்டு, பி.ஜே.பியின் தலைவர் அண்ணாமலை, மேற்படி தகவலை யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிட்டிருக்கின்றார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான, கடல் எல்லை பிரச்னையை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே, அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி, 1974இல், கச்சதீவை இலங்கைக்கு வழங்கும் உடன்பாட்டை மேற்கொண்டார். இதனை ஆட்சேபித்து, கருணாநிதி, கச்சதீவுக்கும் தமிழ் நாட்டுக்குமுள்ள வரலாற்று தொடர்பை வலியுறுத்தியிருந்தார். தமிழ் நாட்டு அரசாங்கத்தின் கலந்தாலோசனையின்றியே, இந்திரா காந்தி இதனை மேற்கொண்டிருந்தார். 1991இல், யாழ் குடாநாடு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வீழ்ந்ததன் பின்னணியில், தமிழ் நாட்டு சட்டமன்றத்தில், கச்சதீவை மீளப்பெற வேண்டுமென்னும் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது.

2008இல், கச்சதீவு விவகாரத்தை, முதலமைச்சர் ஜெயலலிதா, இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார். தமிழ் நாட்டின் உடன்பாடின்றி, வழங்கப்பட்ட கச்சதீவு உடன்பாட்டை இரத்துச் செய்ய வேண்டுமென்பதே, ஜெயலலிதாவின் கோரிக்கையாக இருந்தது. 2014இல், இது தொடர்பான வழக்கில், மத்திய அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்த வழக்கறிஞர் முகுல் ரொகட்கி - உங்களுக்கு (தமிழ் நாட்டிற்கு) கச்சதீவு வேண்டுமென்றால், அதனை மீளப் பெறுவதற்காக யுத்தத்திற்குத்தான் செல்ல வேண்டுமென்று வாதிட்டிருந்தார்.

தமிழ் நாட்டின் இரண்டு பிரதான திராவிட கட்சிகளும், கச்சதீவை மீட்கவேண்டுமென்னும் அடிப்படையில் தொடர்ச்சியாக மத்திய அரசிற்கு அழுத்தங்களை பிரயோகித்து வந்திருக்கின்றனர். ஜெலலிலிதா இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மோடியிடமும் பிரத்தியேகமாக பேசியிருக்கின்றார். இவ்வாறானதொரு பின்னணியில்தான், கச்சதீவை குத்தகைக்கு பெறும் விடயமொன்று பொது வெளிக்கு வந்திருக்கின்றது.

இது சாத்தியமற்ற ஒன்றென்றும் கூறமுடியாது - ஏனெனில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை, சீனாவிற்கு, 99 வருட குத்தகைக்கு, கொடுக்க முடியுமென்றால் - ஏன், கச்சதீவை இந்தியா, 99 வருட குத்தகைக்கு பெற முடியாது? தற்போதுள்ள சூழலில், இந்தியா ஒன்றே, இலங்கைக்கு பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்றது. இந்த நிலையில், கச்சதீவை இந்தியா, குத்தகை அடிப்படையில், கோரினால், கொழும்பால் அதனை இலகுவாக நிராகரிக்கவும் முடியாது. கச்சதீவிற்கு அருகிலுள்ள யாழ். குடாநாட்டின், இரண்டு தீவுகளில் சீன நிறுவனமொன்று, முதலீட்டுத் திட்டமொன்றை மேற்கொள்ள முயற்சித்ததிலிருந்து, கச்சதீவின் மூலோபாய முக்கியத்துவமும் மாறிவிட்டது.


இந்திராகாந்தி, கச்சதீவை, இலங்கைக்கு வழங்கிய காலத்திலிருந்தது, போன்ற பாதுகாப்பு நிலைமைகள் இப்போதில்லை. அன்றைய நிலையில், கடல் எல்லை பிரச்னைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில், கச்சதீவு அணுகப்பட்டது. ஆனால் இப்போது அதே கடல் எல்லைகள் புதிய பாதுகாப்பு நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கின்றது. சீனா, அதிகம் இலங்கைக்குள் காலூன்றியிருக்கும்,

பின்புலத்தில், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான, கடல் எல்லைகள், இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும் மாறிவிடக் கூடிய சூழல் காணப்படுகின்றது. இந்த பின்னணியில்தான், கச்சதீவு விவகாரம் முன்னரைக் காட்டிலும் அதிக முக்கியத்துவத்துடன் நோக்கப்படுகின்றது.

**வாரசாரம்** - அரசியல் நிருபர்

# சுபீட்சத்தை நோக்கிய ஒரு பாதை





*மக்கள் என்னென்ன அல்லல்படுகிறார்களோ ஆனால், தனது ஆசனம் பாதுகாப்பாக இருப்பதில் ஜனாதிபதி திருப்தியாக இருக்கிறார். பாராளுமன்ற உப சபாநாயகர் தெரிவு, ஜனாதிபதிக்கும் அரசுக்கும் மேலும் தெம்பை ஊட்டுவது மட்டுமன்றி, சில நடவடிக்கைகளுக்கான உந்துதலையும் அளிக்கிறது. அவசரகால பிரகடனம் இதனை வெளிப்படுத்துகிறது.*

*மறுபுறத்தில், எதிர்ப்பு போராட்டங்களும் புதுப்புது வடிவுடன் பரவலாக வலுவடைகின்றன. பாராளுமன்ற அமர்வு இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு நிகழ்ந்த போராட்டம் குறிப்பான ஒரு கவனத்தை ஈர்த்தது. அங்கு, கீழ் உள்ளாடைகள் காட்சிப்படுத்தப்பட்டன. இது, இலங்கையின் தனித்துவமான பழுத்த அரசியல்வாதியான காலஞ்சென்ற காலி எம். பி. டபிள்யூ தகநாயக்காவை உடனே நினைவில் கொணர்ந்தது.*

*1944 சட்ட சபைத் தேர்தலில் பாராளுமன்ற அரசியலில் பிரவேசித்த தகநாயக்க, பாராளுமன்ற அரசியலில் சில தனித்துங்களுக்கு சொந்தமானவர். 1947 பாராளுமன்ற தேர்தலில் பொல்சிவிக் - லெனினிச கட்சியில் அவர் போட்டியிட்டபோது தனது தேர்தல் வெற்றிக்காக அவர் பணம் எதுவும் செலவிடவில்லை. வரவு செலவுத் திட்ட விவாதமொன்றில் பதின்மூன்றரை மணித்தியாலங்கள் உரையாற்றினார். அவர் ஆற்றிய உரைதான் இலங்கைப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மிக நீண்ட உரையாக இருக்கிறது. மிகக் குறுகிய காலம் இலங்கையின் பிரதமராகவும் பதவிவகித்தவர் தகநாயக்க.*

*எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அரசில் கல்வி அமைச்சராகவிருந்த அவர், 1959இல் பண்டாரநாயக்க சுட்டுக்கொல்லப்பட்டதும், தேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலகவால் பிரதமராக பதவியில் அமர்த்தப்பட்டார்.*

*இவையெல்லாம் போக, சிறிமாவோ பண்டாரநாயக்க அரசு காலத்திலும் 1964இல், அந்நிய செலாவணி பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டது. நிலைமையச் சமாளிக்கும் நடவடிக்கையொன்றாக, தனி நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு இரண்டு யார் துணி பங்கீட்டுத் திட்டத்தை சிறிமாவோ அறிமுகப்படுத்தினார். இதற்கு தனது எதிர்ப்பை தெரிவித்து, தகநாயக்க பாராளுமன்ற அமர்வுக்கு கௌபீனத்துடன் வந்தார்! எனினும், கௌபீனதுடன் அவர் பாராளுமன்ற சபையினுள் பிரவேசிக்க அப்போது அநுமதிக்கப்படவில்லை.*


*1971இல் பங்களாதேஷ் தோற்றம்பெற்ற வேளையில், பாகிஸ்தானுடனான அதன் யுத்தத்தில், பாகிஸ்தான் விமானங்கள் கட்டுநாயக்க விமானநிலையத்தில் எரிபொருள் நிரப்ப உதவியவர் சிறிமாவோ பண்டாரநாயக்க. இது, இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் நடவடிக்கையாகவுமிருந்தது. சேகுவேரா கிளர்ச்சியாளர்களிடமிருந்து இலங்கையின் பாதுகாப்புக்காக இந்திய பாதுகாப்புப்படை கட்டுநாயக்க விமானநிலையதுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த வேளையில்தான் பாகிஸ்தான் விமானங்கள் அங்கு எரிபொருள் நிரப்பின. இந்தியாவின் இப் பாதுகாப்பு உதவியை சிறிமாவோ இந்தியாவிடம் கோரியிருந்தார். அப்படியிருந்தும், இந்தியாவுக்கும், உருவாகும் பங்களாதேஷுக்கும் எதிராக சிறிமாவோ இந் நடவடிக்கையை மேற்கொண்டார். அப்போது, தமிழரசு கட்சியின் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் மாத்திரம் சிறிமாவோவின் இந் நடவடிக்கையை பாராளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தார்.*

*இப்போது, இலங்கையின் நெருக்கடிக்கு பங்களாதேஷ் மேலும் 2.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மருத்துவ உதவியை அளித்திருக்கிறது. இந்திய அரசினதும் தமிழக அரசினதும் உதவிகளுக்கு அப்பால், திராவிட முன்னேற்ற கழகம் 10 மில்லியன் இந்திய ரூபா உதவியை இலங்கைக்கு நல்குகிறது. தி. மு. க. வின் பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் தமது ஒருமாத சம்பளத்தை வழங்குகிறார்கள்.*

*ஆக, சுபீட்சத்தை நோக்கிய ஒரு பாதையில் நாட்டை இட்டுச் செல்வதற்கு நீண்ட காலத் தீர்வொன்றுக்கான சவாலை இலங்கை எதிர்கொள்கிறது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதர், அரசின் அவசரகால நிலைப் பிரகடனம் தொடர்பில் தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.*

*நீண்டகால சுபீட்சத்துக்கான இத் தீர்வு, இலங்கையின் இனப் பிரச்னையுடன் இணைந்தது என்ற யதார்த்தம் இவ் வேளையில் எல்லா தரப்பிலும் உணரப்படவேண்டியதும், அந்த உணர்வில் எல்லா தரப்பும் இதில் தம்மை ஈடுபடுத்துவதும் இந் நாட்டில் எல்லோருக்கும் இப்போது கிடைத்திருக்கிற ஓர் அரும்பெரும் வாய்ப்பு.* •

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# பயணப் பகிர்வு

பகிர்வு -28

**கணபதி சர்வானந்தா**

**நீ**ண்ட பயணங்கள் தரும் அனுபவங்கள் என்றும் அலாதியானவை. அதிலும் முதல் பணயம் தரும் அனுபவம் மறக்க முடியாததொன்றாய் அமைந்துவிடுகிறது. அதற்குச் சாட்சி பகர்வதாய் பல பயணக் கட்டுரைகளைப் பலர் எழுதியுள்ளனர்.

பொதுவாகத் தொடர் வண்டி என்று சொல்லப் படுகின்ற ரயில் வண்டியில் தான் பெற்ற அனுபவங்களை எனது பெரிய தந்தையார் எனக்குக் கதைகதையாகச் சொல்லி இருக்கிறார். அவர் அப்போது கொழும்பிலுள்ள அரச திணைக்களத்தில் அதிகாரியாகப் பணியாற்றியவர். அவருக்கு ரயில் வண்டியில் கட்டணம் இல்லாது பணயம் செய்ய "வாறண்ட்" என்ற ஒரு வசதியை அரசு வழங்கியிருந்தது. அதனால் அவர் பல சொகுசுப் பயணங்களை அனுபவித்தவர்.

இந்தியாவைப் போன்றதொரு ஒரு தொன்மை வாய்ந்த நாட்டில், பல்வேறு விதமான அனுபவங் களைத் தருவதாகவே ரயில் பயணங்கள் திகழ்கின்றன. இவ்வாறான ரயில் பயணங்களில் சந்தித்த பலர் காதலர்களாக மாறிக் கலியாணம் செய்திருப்பதாகச் செய்திகள் உண்டு. மறக்க முடியாத பயண அனுபவங்களை பதிவிடும் நோக்கில் இந்திய ரயில்வே திணைக்களம் ஒரு விசித்திரமான செயற்பாடு ஒன்றை 2016 இல் அறிமுகப் படுத்தியது. அதில் உங்கள் ரயில் பயண நினைவுகளை உங்கள் மனதிலேயே அசைபோட்டுக் கொண்டிருக்காமல், பல்லாயிரக்கணக்கான மக்களு டன் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று பயணிகளைக் கேட்டுக் கொண்டது.

ரயில் பயணங்களின் இனிமையான அனுபவத்தை பிரபலமாக்கும் நோக்கத்துடன், இந்திய ரயில்வே இந்த புதுச் சேவையை அறிமுகப் படுத்தியது. "என் ரயில் கதை" என்ற இந்த சேவையின் மூலம் பயணிகள் தங்கள் நினைவுகளையும் அனுபவங் களையும் சமூக வலைதளங்களில் MyTrain Story என்ற டசெயலியைப் பயன்படுத்திப் பகிரலாம் அல்லது trainstory@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கலாம். சக பயணிகள் படிக்கவும், தம்மைப் பற்றி நாமே எழுதும் ஒரு சுவையான அனுபவம் கிடைக்கவும் இந்த சேவை மிகவும் பயன்படும்.தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் "ரயில் பந்து" பத்திரிகையில் வெளியிடப்படும். சிறந்த கட்டுரைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் தேர்ந்தெடுக் கப்படும் முதல் மூன்று சிறந்த கட்டுரைகளின் ஆசிரி யர்களுக்கு, ரயில்வே அமைச்சர் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும் என்றும் திணைக்களம் அறிவித் திருந்தது.

"மக்கள் தங்களது ரயில் பயணங்களை பற்றி பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்பிகிறோம். புகைப்படங்கள், காணொளிகள் மூலமாகவும் மக்கள் அனுப வங்களை பகிரலாம். தினமும் இரண்டரை கோடி மக்கள் ரயில் சேவை களைப் பயன்படுத்துகிறார்கள். முதல் முறை மாநிலம் தாண்டிப் பயணம் செய்தது போன்ற பல சுவையான அனுபவங் களை மக்கள் இதில் பகிரக் கூடும்." என்று ரயில்வே திணைக் கள அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

பயணக் கட்டுரைகளைப் பற்றி இணையத்தில் படித்தவற்றை உங்களுடன் பகிர்வதாகக் கீழ் காணும் பதிவு அமைகிறது.

தமிழுக்குப் பயண இலக்கியம் என்பது புதுவரவு அன்று. சங்க காலம் தொட்டே பயணம் பற்றிய குறிப்புகளும், செய்திகளும் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. காப்பியங்களிலும் பல்வேறு பயணங்கள் விவரிக்கப் பட்டுள்ளன. பண்டைக் காலத்திலேயே தமிழரின் கடற்பயணம் தொடங்கி விட்டது. வெளிநாடுகளுடன் கொண்ட வணிகத் தொடர்பால் கடல் வழியாக கலங்களில் ஏறி பிற நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்யவும் அந் நாடுகளிலிருந்து கடல் வழியே வரும் பொருட்களை வாங்கிச் சேமிக்கவும் கடற்கரைகளில் பெரியதும் சிறியதுமாக பல துறைமுகங்கள் அமைக்கப்பட்டன. தரை வழியாகவும் கடல் வழியாகவும் பயணம் மேற் கொண்ட தமிழர்கள் பின்னாளில் வானவூர்தி வாயிலாகப் பயணத்தைத் தொடர்ந்தனர். ஒவ்வொரு கால கட்டத்திலும் தாங்கள் மேற்கொண்ட பயண அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள விரும்பி அவற்றைப் பதிவு செய்யத் தவறவில்லை.துவக்க காலத்தில் தங்கள் எண்ணங்களை ஏட்டில் எழுதி வைத்தனர். அச்சிடும் முறை வழக்கத்திற்கு வந்த பின் அந்த அனுபவங்கள் நூல்களாக வெளியிடப்பட்டன.

19 – 20 நூற்றாண்டுகளைப் பயண இலக்கியத்தின் பொற்காலம் என்று கூறலாம். 1988 முதல் 2008 வரையிலான காலப் பகுதியில் தமிழில் ஏறத்தாழ 600 பயண நூல்கள் வெளிவந்துள்ளன. பயண இலக்கியங்கள் மூலம் ஒரு இடத்தின் புவியியல் அமைப்பு, மக்களின் வாழ்வியல், பண்பாடு, நாகரீகம், நம்பிக்கைகள், விழாக்கள் போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம். அவை பயண வழிகாட்டிகளாகவும் விளங்குகின்றன. பயண இலக்கியங்கள் மக்களை மிகவும் கவர்ந்துள்ளதால் பத்திரிகைகள் பயணக் கட்டுரைகளைப் பெற்று ஆர்வத்தோடு வெளியிடுகின்றன. இணையத்திலும் பயண இலக்கியம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் பெருமளவில் எழுதப்படுகின்றன. அவற்றை விரும்பிப் படிக்கும் வாசகர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவையெல்லாம் பயண இலக்கியத்திற்கு ஒளி மிகுந்த எதிர்காலம் உண்டு என்பதை நிறுவுகின்றன.

சங்க இலக்கியத்தில் பயணச் செய்திகள், காப்பியங்களில் பயணக் குறிப்புகள், தற்காலப் பயண இலக்கியங்கள் எனப் பல வகை உண்டு.வெளியூர் அல்லது வெளிநாடு சென்று வந்த பயண அனுபவங்களைச் சுவையுடன் எழுதி அவற்றைப் படிப்போர் அப்பயணத்தைத் தாமே அனுபவித்தாற் போன்ற மகிழ்ச்சியையும், அனுபவத்தையும் பொது அறிவையும் பெறும்படி செய்வது பயணக் கட்டுரையின் நோக்கமாகும். "செங்கோன் தரைச்செலவு" தமிழில் பயண இலக்கியத்திற்கு முன்னோடியான நூல் என்று கருதப்படுகிறது. அடுத்து "தகடூர்யாத்திரை" என்றொரு பயண நூல் இருந்ததாகத் தெரிகிறது.தமிழ்த்தென்றல் திரு.வி.க எழுதியுள்ள இலங்கைச் செலவு என்ற கட்டுரையும் டாக்டர் மு.வ வின் பயண அனுபவங்களை விளக்கும் "யான் கண்ட இலங்கை"என்ற நூலும் தற்காலப் பயண இலக்கியங்கள் உருவாகப் பாதை அமைத்தவை என்று கூறலாம். பயண இலக்கியத்தின் தந்தை எனவும் உலகம் சுற்றிய தமிழன் எனவும் போற்றப்படும் ஏ.கே. செட்டியார் 1850 முதல் 1965 வரை வெளியான பயணக் கட்டுரைகளைத் தொகுத்து "தமிழ்நாடு பயணக் கட்டுரைகள்" என்ற நூலாக வெளியிட்டார். 19 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழின் முதல் பயண நூல் வெளியானது என்று குறிபிடப்பட்டிருக்கிறது.

# இந்தவார ராசிபலன் 08.05.2022 - 14.05.2022



மே 08 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை - 25

நல்ல நேரம்: 7.30 - 9.00   ராகு காலம் : 04.30 - 06.00   திதி : அதிதி




எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் விலகும். அந்நியர்களிடம் உங்கள் ரகசியங்களைப் பகிர வேண்டாம். குடும்பத்தில் மங்கல ஓசை ஒலிக்கும். செலவுகள் அதிகரிக்கும். சகோதர வகையில் நன்மைகள் உண்டாகும். கேளிக்கை, விழாக்கள் என்று சந்தோஷமடைவீர்கள்.புதிய நட்புகள் உங்களைத் தேடிவரும்.




தொழிலில் இருந்த தடைகள் விலகி லாபத்தை அடைவீர்கள், குடும்பத்தில் நன்மைகள் உண்டாகும். இதுவரை இருந்த சங்க டங்கள் இந்த வாரம் காணாமல் போகும். அரசு ஊழியர்கள் முன் னேற்றமான பலன்களைக் காண்பார்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு கள் நடப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்றுவீர்கள். புதிய லாபத்திற்கு வழிவகை உண்டு. எதிர்பார்த்தவற்றில் ஆதாயங் களை அடைவீர்கள்.




அரசு தரப்பிலான உங்கள் செயல்கள் நடந்தேறும், திடீர் பண வரவால் நினைத்ததை நிறைவேற்ற முடியும். உத்தியோகத்தில் நெருக்கடிகள் தோன்றும். வாரத்தின் பிற்பகுதியில் நீங்கள் எதிர்பார்த்த செயல்கள் வெற்றியாகும்.புதிய நட்புகளால் ஆதாயம் உண்டாகும். பெற்றோர்கள் பிள்ளைகள் வழியில் செலவுகள் உண்டாகி நெருக்கடியை ஏற்படுத்தும்.




செலவுகள் அதிகரித்து மனதில் குழப்பங்கள் மேலோங்கினாலும் எதிர்பார்த்த வரவுகளால் நிலைமைகளை சரி செய்வீர்கள். தடைபட்டிருந்த முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். பிள்ளைகளின் நலனுக்காக அசையா சொத்துகள் வாங்கும் முயற்சி வெற்றியாகும். வருவாய் அதிகரிக்கும். தந்தையின் வழியில் ஆதரவு உண்டாகும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடத்தும் முயற்சி பலனளிக்கும்.




தைரியமாக செயல்பட்டு உங்கள் செயல்களை செய்து முடிப் பீர்கள். எதிரிகளால் உண்டான நெருக்கடிகள் விலகும்.நினைத்ததை சாதித்து சந்தோஷமான மன நிலையை அடைவீர்கள். மனதில் குழப்பங்கள் தோன்றி மறையும். திடீர் செலவுகள் உருவாகும். யோசிக்காமல் சில செயல்களில் ஈடுபட்டு நெருக்கடிகளை சந்திப் பீர்கள்.




வீட்டில் சுப நிகழ்ச்சிகளுக்குரிய அறிகுறிகள் தோன்றும். பகை வர்களால் உண்டான தொல்லைகள் விலகி ஆதாயமடைவீர்கள். புதிய நட்புகளால் வாழ்க்கைக்குரிய நன்மைகளை அடைவீர்கள். பிள்ளைகள் வழியே செலவுகளை சந்திப்பீர்கள்.தொழிலில் இதுவரையில் இருந்த தடைகள் விலகி லாபம் காண்பீர்கள். வாழ்க்கைத்துணை வழியே உண்டான பிணக்குகள் விலகி மகிழ்வீர்கள்.




அரசு வழியில் எதிர்பார்த்திருந்த செயல்கள் இழுபறிக்குப்பின் வெற்றியாகும். குடும்பத்திற்குள் குழப்பங்கள் உண்டாகி சங்கடத்தை உண்டாக்கலாம்.கடுமையான முயற்சிகளுக்குப் பின் உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர்கள். திடீர் வரவுகளால் நெருக்கடிகளில் இருந்து மீள்வீர்கள்.குடும்பத்தில் உண்டான குழப்பங்கள் விலகும். புதிய இடம் வாங்கும் முயற்சி வெற்றியாகும். தொழிலில் இருந்த தடைகள் அகலும்.





பிள்ளைகள் பொறுப்புடன் செயல்பட்டு உங்களை மகிழ்ச்சியடைய வைப்பார்கள். புதிய வாகனம் வாங்கும் முயற்சி பலிதமாகும்.வீடு வாகனம் வாங்கும் முயற்சியால் பணம் செலவாகும். பூர்வீக சொத்துகளில் இருந்த பிரச்சனைகள் விலகும்.எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். திருமண முயற்சிகள் பலனளிக்கும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி நிறைவேறும்.




அந்நியர்கள் வழியே ஆதாயம் அதிகரிக்கும். கொடுத்த வாக் குறுதியை நிறைவேற்ற முடியாத நிலை உண்டாகும்.பிள் ளைகளுக்காக உங்களை வருத்திக்கொள்வீர்கள். எதிர்பாலினரின் ஆதரவால் சவால்களை சமாளித்து வெளியில் வருவீர்கள்.சொத் துகள் வழியே பிரச்சனைகள் தோன்றும் என்றாலும் சகோதரர்களின் உதவியுடன் அவற்றை முறியடிப்பீர்கள்.




குடும்பத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கும் என்றாலும் நட்புகளின் வழியே உதவிகள் கிடைத்து சமாளிப்பீர்கள்.தொழிலில் நெருக்கடிகள் தோன்றும் என்றாலும் செலவிற்கேற்ற வரவு உண்டாகும். தந்தை வழியே அனுகூலங்கள் ஏற்படும்.வீண் விரோதமும் எதிரிகளால் தொல்லைகளும் உண்டாகி அவதிக்குள்ளாக நேரும் என்றாலும் நட்புகளால் அவற்றையெல்லாம் சமாளிப்பீர்கள்.




முயற்சிகளில் வெற்றியடைவீர்கள். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.வேகமாக செயல்பட்டு நினைத்தவற்றை சாதிப்பீர்கள். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற சங்கடங்கள் உண்டாகும் என்றாலும் உங்கள் புத்திசாலித்தனத்தால் அதை சரிசெய்வீர்கள்.மாற்று இனத்தவரால் மனதிற்கினிய சம்பவங்கள் நடந்தேறும்.





குரு பகவானை வேண்டி வணங்கி செயல்பட நெருக்கடிகள் நீங்கும். முயற்சிகளில் இழுபறியான நிலைகள் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ப வரவும் இருக்கும். வாரத்தின் முற்பகுதியில் செயல்களில் நெருக்கடிகள் உண்டானாலும் பிற்பகுதியில் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். திருமணப்பேச்சு எழும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டாகும். அரசு வழியிலான முயற்சிகள் உங்களுக்கு சாதகமாகும்.

# முத்திரைத்தாளில் உத்தரவாதத்தில் புரட்சிகள் நடப்பதில்லை

## சென்னை மடல்

-பகவான் சிங்-



வெள்ளிக்கிழமை மாலையில் அமர்ந்து எனதருமை ‘ஈழநாடு’ வாசகர்களுக்கான ஞாயிறு காலை உணவை தயாரித்துக்கொண்டிருக்கிறேன், கூடவே, வழக்கறிஞரான கனடா நண்பர் ஒருவர் வாட்சப்பில் அனுப்பிய பாடல் ஒன்றையும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். லரீனா அப்துல் ஹக் மூன்று மொழிகளில் பாடிய பாடல் இது. மொஹமத் கமீலின் பேஸ்புக் பதிவிலிருந்து என் நண்பர் இதைக் கண்டறிந்திருக்கிறார். லரீனாவின் பாடல் எந்த அளவுக்கு மதியை மயக்கூடியது என்பது பற்றியும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டிருக்கிறார்: “மூன்று மொழிகளிலும் உச்சரிப்பின் தெளிவும் மயங்கவைக்கும் குரலிசையும்... இந்த அழகான பாட்டைக் கேளுங்கள்”. இணையமும் மின்சாரமும் கிடைக்கும் குறைவான கால அவகாசத்தில் லரீனாவின் பாடலின் வீடியோவையும் முடிந்தால் பாருங்கள். உங்களது தலைவர்களின் தொடர் அறிக்கைகள், பத்திரிகையாளர் சந்திப்புகள், மக்கள் நலனைவிட சுயநலம் மிகுந்திருக்கும் சிறுமை நிறைந்த செயல்பாடுகளின் இரைச்சல் ஆகியவற்றுக்கு மத்தியிலும் இது ஆத்ம சந்தோஷத்தைத் தரக்கூடியது.

“கோ சொல்லு போ சொல்லு, போதும் உங்கள் சால் ஜாப்பு கோ கியாமு போ கியாமு ரதா கெய்வா ஏதி கியாமு’ போராட்டம் வெல்லும் தோழர் அர்கலயதா ஜெயவிவர் கோத்தாவே வீட்டுக்கு பேர் எங்களுடைய பணத்தைத் திருப்பிக் கொடு போராட்டம் வெல்லும் தோழர் அர்கலயதா ஜெயவிவர்”, தமிழிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் இந்தப் பாடல் வருகிறது. காலிமுகதிடல் போராட்டக்காரர்களிடையே மட்டுமல்லாமல், உலகில் உள்ள இலங்கை மக்கள் எல்லோரிடமும் இந்தப் பாடல் பரவியிருக்கிறது. பொருளாதாரப் பிரச்னை, பசி, தட்டுப்பாடுகள் என்பன, இனம், மதம், மொழி கடந்து இலங்கை மக்கள் எல்லோரையும் எவ்வாறு ஒன்றிணைத்திருக்கின்றன என்பதையும், ராஜபக்ஷக்களைப் பதவியிறக்கும் புரட்சியில் எல்லோரும் கைகோத்திருப்பது பற்றியும் இந்தப் பாடல் பேசுகிறது.

துரதிருஷ்டவசமாக, லரீனாவும் அவரது மெய்மறந்த ரசிகர்களும், இந்தப் பாடலின் இசை மற்றும் உற்சாகத்தைத் தவிர, பாடலின் வரலாற்று முக்கியத்துவம் வடக்கைச் சேர்ந்த தலைவர்களை எட்டவில்லை என்பதை உணரவில்லை. இன்னும் மோசமான அம்சம் என்னவென்றால், இலங்கை முழுக்க வீசிக்கொண்டிருக்கும் அரசியல் பொருளாதாரப் புயலுக்கு மத்தியிலும் இந்தத் தலைவர்கள் தங்களுடைய சுருங்கிக்கொண்டிருக்கும் கூடுகளிலேயே பாதுகாப்பாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.

**அதே தலைவர்களால் ஆளப்படும் ஒரு தேசத்தில், நிதி உதவியால் மட்டும் நீண்டகால பொருளாதார சமநிலை வந்துவிடுமா?**

உங்களில் சிலருக்கு இந்தப் பாடலைக் காண விருப்பம் இருக்கலாம் என்பதால் அதற்கான இணைப்பை இங்கே தந்திருக்கிறேன்:

httaPs://m.facebbbk.cbm/stbry.aPhaP?stbry%fbid=aPfbid0tRuV8R+Nwuv9iaRh\;rYdf;\mXzLVzYgxbOOeJSh8ZaaPm53ODaP3hSezUaPaY9hwnWSDaPrLl&id=100004605184045.

கொழும்பைச் சேர்ந்த மூத்த தமிழ் பத்திரிகையாளரான எனது நண்பர், தந்தை செல்வாவின் பேரனான சா. செ. ச. இளங்கோவன் ஒரு தமிழ் ஊடகத்துக்கு அளித்த பேட்டியின் வீடியோவை எனக்கு அனுப்பியிருந்தார். வியாழனன்று பாராளுமன்றத்துக்கு முன்பாக நடந்த “கோத்தாவே வீட்டுக்குப் போ” போராட்டத்தில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு இளங்கோவன் அதில் வலியுறுத்துகிறார். இந்த மாணவர் போராட்டங்களுக்கு எதிராகக் காவல்துறையினர் நடத்திய தாக்குலின் புகைப் படங்களை என்னுடைய யாழ் நண்பர்கள் பார்த்திருக்கக்கூடும். அமைதியான முறையில் தொடர்ந்து நீடிக்கும் இளைஞர்களின் உற்சாகமும் ஆற்றலும் முக்கியமானது என்பதையும், கடந்த காலத்தின் இன பேதத்தால் ஏற்பட்டுள்ள சந்தேகமும் பயமும் நிரம்பியிருக்கும் வடக்கு மக்கள் உட்பட எல்லோருக்கும் அந்த உற்சாகம் சென்று சேரும்போது, இலங்கையின் சமூக -அரசியல் - பொருளாதார சூழலில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதையும் யாழ் நண்பர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அல்லது, தந்தை செல்வாவின் பேரனுக்கு, ‘தமிழ்த் தன்மை’ போதாது என்று நாம் முடிவு செய்துகொள்ளலாமா? கொழும்பில் ஆளும் நண்பர்களிடம் புன்னகையைப் பகிர்ந்துகொண்டு, யாழ்ப்பாணத்தில் உணர்வெழுச்சியுடன் உரை நிகழ்த்தும் பிற ஈழத் தலைவர்களின் தமிழுணர்வோடு ஒப்பிடும்போது இளங்கோவின் உணர்வுகள் தூய்மையும் எழுச்சியும் கொண்டவை அல்ல என்று நாம் நினைக்கலாமா?

போருக்குப் பின்னான தங்களுடைய 12 ஆண்டு செயல்பாடுகள் மூலம் இந்தத் ‘தலைவர்களால்’ சொந்த வளர்ச்சியை தேடியதையும் இலங்கையைப் பாதாளத் தில் தள்ளியதையும் தவிர வேறு எதையும் எட்ட முடிய வில்லை. சிங்கள இளைஞர்கள் இதைப் புரிந்துகொண்டி ருக்கிறார்கள். மாற்றத்துக்காகப் போராடுவது என்ற மிகவும் கடினமான சவாலை ஏற்றுக்கொண்டு செயல்படுகிறார்கள், தெற்கிலிருந்து இவர்க ளோடு பல தமிழர்களும் இணைந்திருக்கிறார் கள். கடந்த காலத்திலேயே தேங்கி நிற்கும் யாழ் மக்கள், இந்த எழுச்சியை, ‘காலிமுக கொண் டாட்டம்’ என்ற போர்வையில் மட்டுமே இழிவாகப் பார்க்க முடியுமா? நாளைக்கு இந்தப் போராட்டத்தின் வெற்றியில் பங்கு பெறவேண்டுமானால் யாழ் மக்களும் இந்த இயக்கத்தில் கலந்துகொள்ள வேண்டாமா?

ஒருவேளை கொழும்பில் நல்ல மாற்றம் வந்தாலும் அது தமிழர்கள் இருக்கும் வடக்குப் பகுதிக்கும் வந்து சேரும் என்பதில் எந்த உத்தரவாதமும் இல்லை என்பதால் இந்த ‘காலி முக கொண் டாட்டத்தை’ நாம் கண்டுகொள்ளத் தேவையில்லை என்று ஓர் அறிஞர் கூறுகிறார். உத்தரவாதமா? முத்திரைத்தாளில் உத்தரவாதம் கொடுத்து புரட்சிகள் நடப்பதில்லை. இந்த விவேகமான ரிஷிகள் வரலாறு படித்ததில்லையா? நாம் இவர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கவேண்டுமா அல்லது நம்முடைய சொந்த சந்ததியினரின் எதிர்காலத்துக்கான நீண்டகால அக்கறையால் நாம் செயல்படவேண்டுமா?




Democracy is a system in which a sheep chooses which wolf will eat it.

உங்களிடம் ஆதரவுடன் கைநீட்டுபவர்கள் எல்லோரும் உங்களின் துன்பங்களைக் கண்டு வருத்தப்படுபவர்களா? தனிப்பட்ட, அமைப்பு ரீதியான, தேசம் சம்பந்தப்பட்ட தன்னலமான நோக்கங்கள் இல்லாமலேதான் இந்த உதவிகள் வருகின்றன என்று நாம் நம்புகிறோமா? தயவு செய்து நினைத்துப் பாருங்கள். உண்மையில் சொல்லப்போனால், இந்த உதவிகளைப் பற்றிய இரண்டு முக்கியமான அம்சங்களை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். இப்போது இருக்கின்ற செயல்திறனற்ற, ஊழல் நிறைந்த அதே தலைவர்களால் ஆளப்படும் ஒரு தேசத்தில், வந்துகொண்டிருக்கிற நிதி உதவியால் மட்டும் நீண்டகால பொருளாதார சமநிலை வந்துவிடுமா? இரண்டாவது, அரசாட்சியில் இருக்கிற சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, எல்லோரையும் எல்லோருக்கான மனித உரிமைகளையும் மதிக்கும் ஜனநாயகத்தைக் கொண்டு வருவதற்கு இந்த நிதி உதவி உத்தரவாதம் தருமா?

சர்வதேச நிதியகமான IMFஇல் நிதி கேட்டு இலங்கை சமர்ப்பித்த கோரிக்கைக்கு இந்தியா ஆதரவு தருகிறது. உடனடியான மனிதநேய ஆதரவுக்காக சீனா தொடர்ந்து குரல் கொடுக்கிறது. தங்களுடைய நோக்கங்களைக் காப்பாற்றுவதற்காக இந்த இரு பிராந்திய சக்திகளும் இலங்கை என்கிற இந்த சிறிய தீவு தேசத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர போட்டி போடுகின்றன. இதில் இன்னொரு புரளியும் பரவலாக வந்திருக்கிறது. அரசியலைப் பொறுத்தவரை தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் ராஜபக்ஷக்களுக்குத் தொடர்ந்து ஒக்சிஜன் கொடுத்து இலங்கையின் சூழலை அப்படியே வைத்துக் கொள்ளவே இந்தியா விரும்புகிறது என்பதே அந்தப் புரளி. சீனாவுக்கு ஆதரவாக இருக்கமாட்டோம் என்று ராஜபக்ஷக்கள் உறுதியாக நிற்பதால் இந்த முடிவு என் றும் கூறப்படுகிறது. தமிழ்நாட்டின் பாஜக தலைவர் அண்ணாமலை நான்கு நாள் பயணமாக இலங்கை சென்று திரும்பியபிறகு, தன்னுடைய தலைவர்களான இந்தியப் பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரிடம் பேசி, இந்தியாவுக்குக் கச்சத் தீவை 99 ஆண்டு குத்தகைக்குத் தருமாறு இலங்கையை வற்புறுத்தியதாகவும் ஒரு செய்தி எழுந்திருக்கிறது. இது உண்மையா னால், ராஜபக்ஷக்களுடன் டெல்லி ஓர் ஒப்பந்தத்தில் இருக்கிறது என்பதற்கு இதுவும் ஓர் அறிகுறியாக இருக்கலாம்.

இப்போது இருக்கிற அரசுக்கு மாற்றாக, சமூக - அரசியல் சமநிலை மற்றும் நிலைத்த தன்மை உள்ள, இலங்கையை இந்தப் பிரச்னைகளிலிருந்து மீட்க சர்வதேச முயற்சிகளுடன் இணைந்து உற்சாகத்துடன் செயல்படுகிற ஒரு மாற்றுத் தலைமையை இந்தியாவால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதும் ஒரு காரணமாக இருக்கலாமா? பொருளாதார பிரச்னையால் பொது மக்களின் ஆதரவு குறைந்திருக்கும் நிலையிலும், தனிப்பட்ட கவர்ந்திழுக்கும் தன்மை மற்றும் அரசியல் கூர்ந்துணர்வு ஆகியவற்றில் மஹிந்தவுக்கு ஈடான ஒரு தலைவர் இங்கு இல்லை என்பதே மறுக்கமுடியாத, கவலையளிக்கும் உண்மை.

லரீனாவின் கோத்தாவே வீட்டுக்குப் போ என்ற அழகான பாடலோடு கொழும்பிலிருந்து ஒரு சோகமான செய்தியும் வந்தது, அதோடு ஒரு சுவாரஸ்யமான செய்தியும் வந்தது. பாராளுமன்றத்துக்கு வெளியில் காவல்துறையினரின் கண்ணீர்ப் புகை குண்டுகளோடு கலைக்கப்பட்ட மாணவர் போராட்டத்தின் எதிரொலியாக, ஜனாதிபதி அவசரநிலையை அறிவித்திருக்கிறார். இரண்டு மாதங்களில் இது இரண்டாவது அவசரநிலைப் பிரகடனம். ஏப்ரல் மாதம் முதல்முறை அவசரநிலை அறிவிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும் சூழல் இருக்கவே, ஐந்தே நாட்களில் அது விலக்கிக்கொள்ளப்பட்டது. இந்த முறை அவசரநிலைப் பிரகடனம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதையும் காலி முக போராட்டக்காரர்கள் இதனால் கலைந்து செல்வார்களா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். கொழும்பிலும் பிற இடங்களிலும் மக்களின் கோபம் அதிகமாகிக்கொண்டிருப்பதை சர்வதேச நிதி அமைப்புகள் எப்படி அணுகும் என்பதும், ஸ்டாலினின் உதவிக் கப்பல் இதனால் தாமதப்படுமா என்பதையும் பார்க்கலாம்.

## அன்பைப் போதிக்கும் ஆந்திராவின் குழந்தைகள்

சுவாரஸ்யமான செய்தி ஒன்று வந்தது என்று சொன்னேன். மஹிந்த பதவி விலக ஒப்புக்கொண்டார், அதை திங்களன்று அறிவிப்பார் என்பதுதான் அந்த செய்தி. இதில் உண்மை இருக்கிறதா என்பது திங்களன்றுதான் தெரியும். அப்படி நடந்தாலும், அது போராட்டக்காரர்களின் கோஷங்களில் ஒரு சிறிய பகுதியாகத்தானே இருக்கும்? கோட்டாவே வீட்டுக்குப் போ என்ற கோஷம் நின்றுவிடுமா?

உங்கள் காலை உணவு ஆறிக்கொண்டிருக்கிறது, நீங்கள் அதற்கு கவனம் தருமுன், ஆந்திரப் பிரதேசத்தின் தெனாலிக்கு அருகில் உள்ள இலவரம் என்ற குக்கிராமத்தின் மாணவர்களை உங்களிடம் அறிமுகப்படுத்த விரும்புகிறேன். பொதுமக்களிடம் நிதி திரட்டி, இலங்கையைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அனுப்புவதற்காக இவர்கள் புத்தகங்களையும் எழுதுபொருட்களையும் பார்சல் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இலங்கை ஆசிரியர் வீரதுங்க ஏகநாயக்கவுடன் இணைந்து, ஆந்திர ஆசிரியர் ஹரிகிருஷ்ணா இந்த உன்னத முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். ஆந்திராவின் குழந்தைகள் நமக்கு அன்பைப்பற்றிக் கற்றுக்கொடுத்து நெகிழ்ச்சியூட்டுகிறார்கள், இல்லையா?

மீண்டும் சந்திப்போம், வணக்கம்.

# நிலை குலைக்கப்படும் தெற்காசியா!




(கடந்த வாரத் தொடர்ச்சி)

இம்ரான்கான் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் இல்லையென்றால் ‘விளைவுகளை (Consequences)’ சந்திக்க வேண்டிவரும் என இந்த பிராந்தியத்துக்கான அமெரிக்க துணைச்செயலர் டொனால்டு லு பாகிஸ்தான் தூதருக்குச் செய்தி அனுப்புகிறார். ராணுவ தளபதி பஜ்வா, ‘ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போர் கண்டிக்கத்தக்கது அமெரிக்காவுடன் பாகிஸ்தான் நெருக்கமான உறவைப் பேணவே விரும்புகிறது’ எனத் தன்னுடைய சமிக்கையை வெளிப்படுத்துகிறார்.

இம்ரான்கான் அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயற்சி நடக்கிறது. அது மற்றவரை ஆட்சியில் அமர்த்தி இவரின் முன்னெடுப்புகளைத் தடுக்கும் என்பதால் இம்ரான்கான் ஆட்சியைக் கலைத்து மக்கள் ஆதரவுடன் மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சி செய்கிறார். அது சட்டத்துக்குப் புறம்பானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவே இம்ரான்கான் ஆட்சியில் இருந்து நீக்கப்பட்டு ஷரிப் குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வருகிறது. இந்திய ஆளும்வர்க்கம் பழைய பாசத்துடன் தனது பேராதரவை வழங்குகிறது.

## புதிய ஆட்சியும் போக்கும்...

புதிய ஆட்சி சிபெக் திட்டத்தை வேகப்படுத்தும் என்கிறார் ஷரிப். ‘அமெரிக்காவுக்குத்தான் நாம் அதிகமாக ஏற்றுமதி செய்கிறோம். அவர்களின் ராணுவ தளவாடங்கள் மேம்பட்ட ஒன்று’ என்கிறார் பஜ்வா. அதாவது முந்தைய அமெரிக்க - சீன நிலை தொடரும். பிந்தைய சீன ராணுவ ஒப்பந்தம், ரஷ்ய வர்த்தக ஒப்பந்தம் கிடப்பில் போடப்படும் என்கிறார்கள். ஐஎம்எஃப்பின் சீர்திருத்தங்களை இவர் நடைமுறைப்படுத்தலாம் என்றும் சொல்கிறார்கள். அடுத்து, ஆப்கானிஸ்தான் மீதான பாகிஸ்தான் குண்டுவீச்சில் பத்து பேர் பலி என செய்தி வருகிறது. பாகிஸ்தானின் ஆட்சி மாற்றம் ஆப்கானிஸ்தானில் சீர்குலைவை ஏற்படுத்தி, அது அந்த பிராந்தியம் முழுக்க எதிரொலித்து பழைய குழப்பகரமான நிலைக்குச் செல்லும் வாய்ப்புகள் தெரிகின்றன. இதை மற்ற நாடுகள் எப்படி எதிர்கொள்ளப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இம்ரான்கான், ‘இவர்கள் அமெரிக்காவுக்கு விலைபோய் விட்ட கைக்கூலிகள்’ எனக் கூறி பல வீதி எதிர்ப்பு போராட்டங்களை நடத்தி வருகிறார். அவருக்கு அங்கே மாபெரும் அளவில் மக்கள் கூட்டம் கூடுகிறது. அங்கு நிலவும் அமெரிக்க எதிர்ப்பை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி இவர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தி அடுத்து ஆட்சிக்கு வரும் திசையில் அவர் பயணிக்கிறார்.

இது வரப்போகும் தேர்தலில் பாகிஸ்தானின் வழைமையான குடும்ப, ராணுவ ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இந்த பிராந்தியத்தின் முக்கிய அரசியல் மாற்றமாக மாறுமா என்ற கேள்விக்குக் காலம்தான் பதில் சொல்லும்.





மிகைடாலர் அச்சடிப்பால் ஏற்கனவே எரிந்துகொண்டிருந்த விலைவாசி உயர்வு பிரச்சினையை உக்ரைன் போர் எண்ணெய் ஊற்றி கொழுந்துவிட்டு எரியச் செய்திருக்கிறது. அமெரிக்காவின் டாலர் வர்த்தகத்தை ஆயுதமாக்கும் நடவடிக்கையும் அதற்கு எதிரான ரஷ்ய - சீன நாடுகளின் சொந்த நாணய வர்த்தக மாற்று முன்னெடுப்பும் இதுவரையிலான உலக வர்த்தகக் கட்டமைப்பை உலுக்கி உடைக்க ஆரம்பித்திருக்கிறது.

இது உலகம் முழுக்க விலைவாசி உயர்வு, டாலர் கடன் கொடுப்பனவுப் பற்றாக்குறை பிரச்சினைகளை ஏற்படுத்தி உள்நாட்டுக் குழப்பங்கள், போராட்டங்களை நோக்கி நகர்த்தி வருகிறது. இலங்கை இவ்வாறான பிரச்சினையில் சிக்கித் தவித்து வருகிறது. அங்கே அவரவர் தங்களது நலனை முன்னிறுத்தி காய்களை நகர்த்தி வருகிறார்கள்.

பாகிஸ்தானில் நேரடியாகவே அமெரிக்கா தலையிட்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. புதிய ஆட்சி அமெரிக்காவுக்கு அணுக்கமாக நடக்க ஆரம்பித்திருக்கிறது. அது இந்த பிராந்தியம் முழுக்க நிலையற்ற தன்மையை ஏற்படுத்தும் சாத்தியமிருக்கிறது. சுயசார்பான பிராந்திய நாடுகளை முன்னிறுத்தி நகர்வுகளை செய்த இம்ரான்கான் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளார். அங்கிருக்கும் அமெரிக்க எதிர்ப்பு மனநிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி வரவிருக்கும் தேர்தலில் மக்கள் ஆதரவுடன் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் வீதி எதிர்ப்பு போராட்டங்களை நடத்தி வருகிறார்.

## விட்டுக்கொடுத்து பிடிக்க முனையும் இந்தியா!

இந்தியாவும் இம்ரானைப்போல ரஷ்யாவுடன் சொந்த நாணய வர்த்தகம், தள்ளுபடி விலையில் எண்ணெய் இறக்குமதி எனச் சென்றது. அவரைவிட ஒருபடி மேலே சென்று சீன நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக மாற்று என்றெல்லாம் பேசி அமெரிக்காவின் எதிர்ப்புக்கு உள்ளானது. இந்த நிலையில் ஏற்பாடு செய்யப்பட்ட 2+2 இந்திய - அமெரிக்க வெளியுறவுத் துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் கூட்டம், இது குறித்து விவாதிக்கும் என்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்தியா, அமெரிக்காவுடனான வர்த்தகம், அறிவியல், தொழில்நுட்பம், காலநிலை, உற்பத்தி சங்கிலி உள்ளிட்டவை குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் என செய்திகள் வந்தது.

அது, இந்தியாவின் நோக்கம்... சூரிய மின்னாற்றல் தொழில்நுட்ப உற்பத்தி சங்கிலி என்பதை குறிப்பால் உணர்த்தியது. சீனப் பொருட்களின் மீதான வரிவிலக்கில் சூரிய மின் தகடுகள் இடம்பெறாதது... அது இந்தியாவுக்குக் கொடுக்கப்படுமா? பதிலாக இந்தியா எல்லாவற்றையும் கொடுத்து சரணடையுமா? போன்ற கேள்விகளை எழுப்பியது.

அமெரிக்க ஆயுத நிறுவனங்களுக்கு மேலும் வாய்ப்பு, வான்வழி இணையக் கூட்டு ஆகியவை ஏற்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதாவது, ரஷ்ய ஆயுத சந்தை, விண்வெளி கூட்டை அமெரிக்காவுக்குக் கொடுத்து ஜியோவுக்கோ, ஏர்டெல்லுக்கோ வான்வழி இணைய செயற்கைக்கோள் கட்டமைப்பை ஏற்படுத்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தி ருக்கிறார்கள்.

எதிர்பார்த்த சூரிய மின்னாற்றல் தொழில்நுட்ப உற்பத்தி சங்கிலி கிடைக்கவில்லை. ரஷ்யாவின் எண்ணெய் இறக்குமதியைக் குறைத்து நிலக்கரி இறக்குமதியை ஒன்றியம் கூட்டி இருக்கிறது. அவர்களின் எதிர்ப்பு இல்லாத இந்திய உணவுப் பொருள் ஏற்றுமதிக்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஆட்சேபித்த அனைத்தையும் இந்தியா நிறுத்தி இருக்கிறது. ஆனால், ரஷ்யாவை இந்தியா கண்டிக்க மறுத்துவிட்டது. சுருக்கமாக, பொருளா தார பலன்களை விட்டுக் கொடுத்து அரசியல் நிலைப் பாட்டை இந்தியா தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் இதைப் பயன்படுத்த இப்போது சேமித்து (Hedging) வைக்கிறது. முழுமையான அடிபணிதலுக்குக் குறைவான எதையும் அமெரிக் கர்கள் ஏற்றதாக அவர்களின் ஆதிக்க அகராதியில் இல்லையே!



## இறுகும் இந்தியாவின் மீதான பிடி!

இந்தியாவில் நிலவும் மனித உரிமைப் பிரச்சினைகளை தாங்கள் கவனித்து வருவதாக எதிர்பார்த்தது போலவே பாஜகவை வழிக்குக் கொண்டுவர, இந்த ஆயுதத்தை அமெரிக்கா கையில் எடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல... சீனாவின் ஹோவாவெய் நிறுவனத்துக்கு என்ன நடந்தது என்பதை இந்தியா சற்று யோசித்துக் கொள்ளட்டும் என அந்நாட்டு பத்திரிகைகள் மிரட்டல் விடுக்கின்றன. அவர்கள் யாரை குறிவைக்கிறார்கள் என்பதை கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமானது அல்ல. அவர்கள் அம்பானி - அதானி மீது கைவைத்தால் இவர்கள் அமேசான் - வால்மார்ட் மீது கைவைப்பார்கள். இவர்கள் இருவரையும் வழிக்குக் கொண்டுவர எந்த காய்களை நகர்த்தி ஆட வேண்டும் என இந்திய எதிர்க்கட்சிகளுக்கு இதைவிட தெளிவாக புரியவைக்க முடியாது.

(02 ஆம் பக்கம் பார்க்க...)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு வாய்ப்பான மக்கள் எழுச்சி சூழ்நிலை



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை முன்னென்றும் கண்டிராத பொருளாதார அனர்த்தத்துக்கு இன்று முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. கூரையைப் பிரித்துக்கொண்டு வானளாவ தினமும் உயர்ந்துகொண்டே செல்லும் வாழ்க்கைச் செலவினாலும் அத்தியாவசிய பொருட்களுக்கு நிலவும் படுமோசமான தட்டுப்பாட்டினாலும் திணறும் மக்கள் வீதிகளில் இறங்கி செய்யத்தொடங்கிய ஆர்ப்பாட்டங்கள்,அவற்றுக்கு இன்று வரை ஒரு அரசியல் வழிகாட்டலோ தலைமைத்துவமோ கிடைக்கா விட்டாலும் கூட, ஒரு அரசியல் புரட்சியின் சில பரிமாணங்களை எடுத்திருக்கின்றன.இலங்கையின் இன்றைய இடர் நிலைக்கு அரசியல் சமுதாயம் முழுவதையும் குற்றஞ்சாட்டும் ஆர்ப்பாட்டக்காரர்கள் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை வேண்டிநிற்கிறார்கள்.

அத்தகைய மாற்றத்தை கோருகின்ற அவர்கள் முன்வைக்கின்ற அரசியல் முழக்கங்கள் நாட்டு மக்கள் மத்தியில் அரசியல் சிந்தனைகளில் வரவேற்கத்தக்க ஒரு மாற்றத்தை நிச்சயம் கொண்டுவரவேண்டும். அத்தகைய மாற்றம் இலங்கை இன்று முகங்கொடுக்கின்ற அரசியல்,பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கான அடிப்படைக் காரணிகளை இல்லாதொழிப்பதற்கு வழி வகுக்கவேண்டும்.

அந்த கோணத்தில் நோக்கும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கோரிக்கை அதிமுக்கியமான ஒன்றாகும். நாம் அனுபவிக்கின்ற பெருவாரியான நெருக்கடிகளுக்கு காரணமாக இருக்கின்ற இன்றைய ஆட்சிக்கட்டமைப்பின் நடுநாயகமாக விளங்கும் மட்டுமீறிய அதிகாரங்களுடன் கூடிய ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதன் மூலம் ஒப்பீட்டளவில் முன்னேற்றகரமான ஜனநாயக ஆட்சிமுறையொன்றுக்கு வழிவகுக்க வாய்ப்புக்கள் தோன்றமுடியும்.நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை வைத்துக்கொண்டு ஜனநாயக மாற்றம் எதையும் செய்வது அறவே சாத்தியமில்லை என்பது கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலகட்டத்தின் ஊடான எமது அனுபவமாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு இப்போது 44 வயது. அதை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கும் அதே வயது.1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கம் இந்த ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பைக் கொண்டுவந்த நாள் தொடக்கம் எதிரணி அந்த ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டும் என்றே வலியுறுத்தியது.இதில் அன்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் முன்னின்றன. ஆனால்,அக்கட்சிகள் அது தொடர்பில் முனைப்பான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. வெறுமனே தேர்தல்களின்போது தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்போம் என்று கூறுவதுடன் சுதந்திர கட்சி நின்றுவிட்டது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியின் படுமோசமான பாதகங்கள் குறித்து பெருவாரியான அரசியல் விவாதங்கள் பொதுவெளியில் இடம்பெற்றிருந்தாலும் கூட, அன்றைய காலகட்டத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டுமென்பது ஒரு வெகுஜனக்கோரிக்கையாக கிளம்பவில்லை. ஜெயவர்தனவுக்குப் ரணசிங்க பிரேமதாச 1989 ஜனவரியில் ஜனாதிபதியாக வந்ததையடுத்து அவருடன் ஒரு சில வருடங்களுக்குள் முரண்பட்டுக்கொண்ட முன்னாள் அமைச்சர்கள் காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி போன்றவர்கள் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிராக கிளம்பினார்கள். ஜெயவர்தன ஜனாதிபதியாக இருந்தபோது அமைதியாக இருந்த இவர்கள் பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில்தான் அந்த ஆட்சிமுறையின் பாதகங்களை கண்டுபிடித்தவர்கள் போன்று நடந்துகொண்டார்கள். அதனால் அவர்களாலும் கூட ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிராக வெகுஜன அலையொன்றை கிளம்பச்செய்யமுடியவில்லை.

1991ஆம் ஆண்டு பிற்பகுதியில் காமினியும் லலித்தும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் இருந்த தங்கள் சகாக்கள் சிலரையும் சிறிமாவின் சுதந்திர கட்சியையும் சேர்த்துக்கொண்டு ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக அரசியல் குற்றப்பிரேரணை (Impeachment Motion) ஒன்றைக் கொண்டுவரும் முறற்சியிலும்

## அரசியல் வர்க்கம் இந்த அருமையான வாய்ப்பையும் தவறவிடுமா?

ஈடுபட்டார்கள்.அன்றைய பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முஹம்மதின் அந்தரங்க ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்ட அந்த அரசியல் குற்றப் பிரேரணை முயற்சியை பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்தது உட்பட தனக்கேயுரித்தான பல தந்திரோபாயங்கள் மூலமாக பிரேமதாச முறியடித்தார்.

பிரேமதாச 1993 மே தினத்தன்று கொழும்பில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து ஜனாதிபதியாக பதவியேற்ற அன்றைய பிரதமர் டி. பி. விஜேதுங்க தனது ஒன்றரை வருடகால ஆட்சியில் முன்னைய இரு ஜனாதிபதிகளையும் போன்று ஆட்சிமுறையில் எதேச்சாதிகாரத்தனமாக நடந்துகொண்டார் என்று கூறுவதற்கில்லை.

1994 ஆகஸ்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் சுதந்திர கட்சி தலைமையிலான பொதுஜன முன்னணி வெற்றிபெற்று திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமரானர். மூன்று மாதங்களுக்கும் குறைவான காலமே அந்தப் பதவியில் இருந்த அவர் 1994 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒரு வருடத்துக் கும் குறைவான காலத்துக்குள் ஒழித்துவிடுவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்துக்கொண்டு ஆட்சியதிகாரத்துக்கு வந்த திருமதி குமாரதுங்க அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு உருப்படியான எந்த அரசியல் சீர்திருத்த நடவடிக்கையையும் முன்னெ டுக்கவில்லை.தனது இரண்டாவது பதவிக்காலத்தின் இறுதியில் (2005 ஆம் ஆண்டில் ) மேலும் ஒருவருட காலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் நீடிக்கமுடியாமல் தன்னை உச்சநீதிமன்ற தீர்ப்பொன்று தடுத்துவிட்டதே என்ற கவலையுடன்தான் அவர் பதவியில் இருந்து இறங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவருக்குப் பின்னர் 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்சவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாகவே உறுதியளித்தார்.குறிப்பாக , அந்த தேர்தல் பிரசாரங்களின்போது ஜனதா விமுக்தி பெரமுனவுடன்(ஜே. வி.பி.)செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் அவர் தனது முதலாவது 6 வருட பதவிக்காலத்துக்குப் பிறகு ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முடிவுகட்டுவதாக உறுதி யளித்திருந்தார்.அவரின் இரு பதவிக்காலங்களிலும் ஜனாதிபதி ஆட்சிமுறையை எந்தளவுக்கு வலுப்படுத் துவதிலேயே அவர் தீவிர கவனம் செலுத்தினார்.

உள்நாட்டுப்போரின் முடிவுக்குப் பிறகு 2010 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தனது இரண்டாவது பதவிக்காலத்துக்கு போட்டியிட்டு வெற்றிபெற்ற அவர் அந்த வருடம் அக்டோபரில் அரசியலமைப்புக்கான 18 வது திருத்தச் சட்ட மூலத்தை கொண்டுவந்து நிறைவேற்றினார்.அந்த நேரத்தில் சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மூன்றில் இரண்டு பங்கிற்கு நெருக்கமான ஆசனங்கள் பாராளுமன்றத்தில் இருந்தன.வேறு சில கட்சிகளும் அந்த பிற்போக்கான திருத்தம் நிறைவேறுவதற்கு ஆதரவளித்தன.

18வது திருத்தத்தின் மூலமாக சுயாதீன ஆணைக் குழுக்களைச் செயலிழக்கச்செய்து தனது அதிகாரங்களை மேலும் வலுப்படுத்திய மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியொருவருக்கு இருந்த இரு பதவிக்கால வரையறையையும் இல்லாமல் செய்து எத்தனை பதவிக்காலங்களுக்கு ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் தேர்தலில் போட்டியிடுவதற்கு வகைசெய்யும் ஏற்பாட்டை புகுத்தினார்.போர்வெற்றியையடுத்து தங்களால் முன்னெடுக்கப்பட்ட சிங்கள பௌத்த பெரும்பான்மையினவாத அரசியல் சிங்கள மக்கள் மத்தியில் தங்களுக்கு என்றென்றைக்கும் பேராதரவை உறுதிசெய்யும் என்று நம்பிய அவர் ஆயுள்காலம் வரைக்கும் ஜனாதிபதியாக பதவியில் நீடிக்கமுடியும் என்று நினைத்தார் போலும்.

ஆனால், தனது இரண்டாவது பதவிக்காலத்தில்



2 வருடங்கள் எஞ்சியிருந்த நிலையில் மூன்றாவது பதவிக்காலத்துக்கு மக்களிடம் ஆணையைப் பெறுவதற்காக 2015 ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலை மகிந்த நடத்தினார். தனது அமைச்சரவையில் மூத்த அமைச்சர்களில் ஒருவராகவும் சுதந்திர கட்சியின் செயலாளராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவிடம் தான் தோல்வி காண வேண்டியேற்படும் என்று அவர் நினைத்திருக்கமாட்டார்.

எதிரணியின் பொதுவேட்பாளராக களமிறங்கிய சிறிசேனவும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாகவே நாட்டுமக்களுக்கு வாக்குறுதியளித்தார்.ஆனால் முன்னைய இரு ஜனாதிபதிகளையும் போன்றே அவரும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமலேயே பதவியில் இருந்து இறங்கினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

# நதி நீர் ஊற்றெடுக்கும் மாகாணத்துக்கு மட்டுமல்ல நீர் ஓடும் நிலம் கொண்ட மாகாணத்துக்கும் உரிமையுண்டு

விருந்தினர் பக்கம்



**அ வரதராஜா பெருமாள்**
(முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர்)

*1988 - 1990ம் ஆண்டு கால வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆட்சியின் முதலமைச்சராக இருந்த காலத்தில் மாகாண ஆட்சிக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பாக நிகழ்ந்த பலவற்றில் நினைவில் நிற்பவைகள் சில. அவற்றில் ஒன்றை இங்கே பதிவிடுகிறேன்:*

*1989ம் ஆண்டின் நடுப்பகுதி. மத்திய மாகாணத்தின் முதலமைச்சர் செயலகத்திலிருந்து ஒரு கடிதம் வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலகத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக இருந்த கலாநிதி விக்கினேஸ்வரன் அவர்கள் முதலமைச்சர் அறையில் இருந்த என்னிடம் வந்து விடயத்தைக் கூறினார்.*

*அந்தக் கடிதத்தில், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மகாவலி நதி நீர் பெருமளவில் பயன்படுத் தப்படுத்தப்படுவதாகவும், மகாவலி நதி மத்திய மாகாணத்துக்கு உரியது என்றும், எனவே வடக்கு கிழக்கு மாகாணத்தில் பயன்படுத்தப்படும் மகாவலி நதி நீருக்கு வடக்கு கிழக்கு மாகாணம் ரோயல்டி வரி கட்ட வேண்டும் என்றும், அந்த வரித் தொகை தொடர்பாக இரண்டு மாகாண ஆட்சிகளுக்கும் இடையில் ஓர் உடன்பாடு எட்டப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.*

*அந்தக் கடிதம் இன்னமும் வடக்கிலேயோ அல்லது கிழக்கிலேயோ உள்ள மாகாண சபைகளின் ஆவணத் தொகுப்புகளில் இருக்கிறதா அல்லது கால சூழல் காரணமாக தவறிப் போய் விட்டதா தெரியவில்லை. அதனால் அந்தக் கடிதத்தின் சரியான வாக்கியங்களை இங்கு குறிப்பிட முடியவில்லை. இருந்தும் சாராம்சத்தை இங்கு குறிப்பிட்டுள்ளேன்.*

*கலாநிதி விக்கினேஸ்வரனுடன் அது பற்றி உரையாடிவிட்டு, அது தொடர்பில் மேலதிக நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட வேண்டியவற்றை பற்றி கலந்துரையாட அப்போது மாகாண ஆட்சியின் காணி, விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றிற்கு அமைச்சராக இருந்த கௌரவ திரு கணேசலிங்கம், அந்த அமைச்சின் செயலாளராக இருந்த திரு சிவ தாசன் மற்றும் பிரதம செயலாளரான திரு சிவராசா ஆகியோரை உள்ளடக்கிய ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்யக் கோரினேன்.*

*அந்தக் கூட்டத்தில் மத்திய மாகாண முதலமைச்சரின் கடிதத்தை ஒரு முக்கியத்துவமான ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்ற அபிப்பிராயமும், அவ்வாறு நதி நீருக்கு ஒரு மாகாணம் உரிமை கோர முடியாது என்ற அபிப்பிராயமும் என வெவ்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன.*

*அந்த மாகாண முதலமைச்சரின் கடிதத்தை புறக்கணிப்பது சரியல்ல எனவும் அதேவேளை மகாவலி நதி எந்த மாகாணத்துக்கு உரியது என்கின்ற விவாதம் வேறு திசைகளுக்கு நிலைமைகளை இட்டுச் சென்று விடுவதோடு மத்திய மாகாண முதலமைச்சர் ஆரம்பிக்க முயலும் விவாதப் பொறிக்குள் நாங்கள் அகப்பட நேரிடும் எனவும் எனது அபிப்பிராயத்தை தெரிவித்ததோடு, அதனை வித்தியாசியமானதொரு முறையில் அணுக வேண்டும் எனவும் அதற்கான எனது எண்ணம் எதுவெனவும் அக்கூட்டத்தில் இருந்தவர்களுக்கு கூறினேன்.*

*அதாவது, மகாவலி நதி கடலை நோக்கி ஓடுவதற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பெருந் தொகையான நிலமே பயன்படுத்தப்படுகிறது. மகாவலி வடக்கு - கிழக்குக்குள் வராமல் இருந்தால் நாங் கள் பன்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்காது. அது தானாகவேதான் வேறு வழியில்லாமல் வடக்கு - கிழக்கு மாகாணத்தினூடாக கடலை நோக்கி ஓடுகிறது. இந்நிலையில் மகாவலி மத்திய மாகாணத்தில் ஊற்றெடுத்து ஓடுவதனால் அதன் நீர் மத்திய மாகாணத்துக்கு சொந்தமென கூறப்படுமானால், மகாவலி ஓட்டத்துக்காக பயன்படுத்தப் படுகிற வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அவ்வளவு நிலப்பரப்புக்கும் மத்திய மாகாணம் தான் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு ரோயல்டி வரி கட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தி அது தொடர்பாக பேசுவதற்கு மத்திய மாகாண முதலமைச்சருக்கு நான் அழைப்பு விடுப்பதாக கடிதம் எழுதுவது பற்றி தெரிவித்தேன்.*

*அந்த எண்ணத்தின் வினோதத் தன்மையை ஏற்று ஏனையோரும் சிரித்தபடி அவ்வாறு முயற்சிப்போம் என ஒப்புக் கொண்டனர். அவ்வாறாக ஒரு கடிதம் மத்திய மாகாண முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது. அதற்குப் பதிலாக ஒரு கடிதமும் அதற்குப் பிறகு மத்திய மாகாணத்தில் இருந்து வரவேயில்லை.*

*இந்தக் காலகட்டத்தில்தான் புலிகள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் மிக நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். இரு பகுதியினரும் வடக்கு - கிழக்கு மாகாண ஆட்சியை வலுவிழந்த தாக்குவதற்கும் இல்லாதொழிப்பதற்குமான அனைத்து வகையான நடவடிக்கைகளையும் கைகோர்த்தபடி மேற்கொண்டிருந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மத்திய மாகாண முதலமைச்சரும் எம்மைச் சுரண்ட முற்பட்டாரோ என்னவோ தெரியவில்லை. ஆனால் நாம் அந்த விடயத்தை அப்போது பகிரங்க விவாத விடயமாக்கி விடாமல் பொறுமையோடும் அதேவேளை விவேகமாகவும் கையாள வேண்டும் என்ற அணுகுமுறையையே கடைப்பிடித்தோம்.*

*இவ்விடயம் அப்போது மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் மாகாண ஆட்சியின் அதிகாரிகள் மத்தியில் பேசு பொருளாராக இருந்த போதிலும் அதனை பத்திரிகைளில் பகிரங்க விவகாரமாக ஆக்குவதில் நாம் அக்கறை காட்டவில்லை. அன்றைய காலகட்டத்தில் வேறு பல நெருக்கடிகளும் ஆபத்துகளும் எமது தலைக்கு மேல் குவிந்து நின்றன. இருப்பினும், கடந்த பத்தாண்டுகளின் போது அன்றைய மாகாண ஆட்சி பற்றி அறிவதில் ஆர்வம் கொண்ட வர்கள் மத்தியில் இவ்விடயத்தை கூறி வந்திருக்கிறேன். இப்போது அதனை பகிரங்கத்தில் பதிவு செய்வதற்கு ஈழநாடு பத்திரிகை வாய்ப்பேற்படுத்தியமைக்கு மிக்க நன்றி. இவ்வாறாக பல துணுக்குகள் உள்ளன. எதிர்காலத்தில் வாய்ப்புகள் கிடைக்கையில் பதிவு செய்ய முயற்சிப்பேன் என கூறிக்கொள்கிறேன்.*

# நினைவை விட்டகலாத நண்பர் தராக்கி சிவராம் !

களஞ்சியம்
அனந்த பாலகிட்ணர்



இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முனைப்படைந்திருந்த காலப்பகுதி. வடக்கே அரச சார்பு வானொலி-தொலைக்காட்சி நிறுவனங்கள் மீது நம்பிக்கை இழந்த வடக்கு-கிழக்கு மக்கள் நேர்த்தியான தகவல்களைப் பெறுவதற்கு பிபிஸி, வெரித்தாஸ், இந்திய மாநிலச்செய்திகள் மற்றும் அகில இந்திய வானொலிச்சேவைகளையே பெரிதும் நம்பியிருந்த காலம்.

இரவில் பிபிஸி தமிழோசை ஒரு திருக்குறள் வாசகத்தோடு தனது ஒலிபரப்பைத் தொடங்கும் போது அன்றைய ஊரடங்கு வாழ்க்கைக்கு உட்பட்டிருந்த மக்களின் செவிகளை மிக உயர்ந்த தரத்திலான இலங்கை, இந்திய மற்றும் சர்வதேச தகவல்கள் வந்தடைந்திருந்தன.

குறிப்பாக பிபிஸியின் பிரபலமிக்க ஒலிபரப்பாளராக இருந்த ஆனந்திக்கு தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்க தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட எண்ணிலடங்காத நேயர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் காணப்பட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரன் தமது பாதுகாப்பு விடயங்களில் மிக அவதானமாக இருந்ததால் தம்மை சந்திக்க வருவோர் குறித்து நன்கு ஆராய்ந்தே முடிவுகளை எடுப்பார்.

பிரபாகரனைச்சந்திக்கும் அரிய வாய்ப்பை பெற்றவர்களில் ஒருவரே பிபிஸியின் ஆனந்தி.

ஒருதடவை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரச தரப்புக்குமிடையே பேச்சுவார்த்தையொன்று தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் இடம்பெற்றபோது ஆனந்தி கொழும்பிலிருந்து ஒரு கலந்துரையாடலொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அக்கலந்துரையாடலில் அன்றைய வீரகேசரி ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன், மற்றும் தராக்கி சிவராம் ஆகியோருடன் நானும் பங்குபற்றியிருந்தேன்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்புக்கூடத்தின் ஊடா கவே எம்மூவரது கலந்துரை யாடலும் பிபிஸி தமிழ் சேவைக்காக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

சுமார் அரை மணி நேரம் வரை ஒரு விசேட நிகழ்ச்சிக்காக அந்த ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்தது. அன்றே தராக்கி சிவராமை நேரில் முதல் தடவையாக சந்தித்தேன். தராக்கி என்ற புனைபெயரில் அவர் ஆங்கிலத்தில் எழுதி வந்த கட்டுரைகள் இலங்கை வாசகர்களிடையே மட்டுமல்ல. வெளிநாட்டு ராஜதந்திர வட்டாரத்தைச்சேர்ந்தோர் மத்தியிலும் பிரபலமானவை.

தர்மரட்ணம் சிவராம் போன்ற பிரபல அரசியல் மற்றும் பாதுகாப்புத்துறை கட்டுரையாளர் மற்றும் வீரகேசரியன் பிரதம ஆசிரியர் ஆ. சிவநேசச்செல்வன் ஆகியோருடன் ஒரு முக்கிய அரசியல் கலந்துரையாடலில் பங்குபற்றியபோது அவர்களுக்கு இணையாக எனது கருத்துக்களை வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது நான் கூறியவற்றையும் நல்ல முறையில் ஏற்று ஒரு சுமுகமான கலந்துரையாடலை மேற்கொள்வதில் சிவராம் சிறந்த ஒத்துழைப்பை வழங்கினார். இதன்மூலம் அவரது பரந்த பார்வையையும் தம்மோடு ஒரு நிகழ்வில் இணைந்திருப்போரை அரவணைத்துச் செல்கின்ற பண்பும் வெளிப்பட்டிருந்தது.

ளூரனெயல ழூடிளநசளநச பத்திரிகையில் நான் பணியாற்றிய போது எனது ஆசிரியராக இருந்த பிரபல பத்திரிகையாளர் அஜித் சமரநாயக்க, தராக்கி சிவராமின் நல்ல நண்பர். சிவராமைப்பற்றி என்னோடு பல வியடயங்களை சுவாரஸ்யமாகப் பகிர்ந்து கொள்வார்.

ஒருதடவை அஜித் சமரநாயக்க மற்றும் சிவராமுடன் இரவு நேர சந்திப்பொன்றை முடித்து விட்டு அஜித் சமரநாயக்காவின் வாகனத்தில் சிவராமுடன் வீடு திரும்பினேன். சிவராமும், அஜித்தும் அப்போது இரத்மலானையில் இருந்தார்கள். இரவு நீண்ட நேரமாகிவிட்டதால் " டேய் நான் உன்னை வீட்டு வாசலில் வந்து விடுகிறேன்" என்று கூறி அன்று என்னை வீட்டு வாசல் கதவு வரை வந்து விட்டதோடு கதவில் தட்டி எனது மனைவியாரிடம் என்னை ஒப்படைத்தார். மிகக் கறுப்பு நிறத்தவரான சிவராம் என்னை அழைத்து வந்து நின்றதைப்பார்த்த எனது மனைவி முதலில் சற்று அச்சம் கொண்டார். அப்போது எனது மனைவியிடம் "நான் இவரது நண்பர். ஒரு சந்திப்பில் பங்குபற்றினோம் நேரமாகிவிட்டது" என்று சிவராம் கூறினார்.

என்னை அந்த இரவு வேளையிலும் வீட்டு வாசல் வரை பாதுகாப்பாக கொண்டு வந்து விட்டுச்சென்ற நண்பர் சிவராம், சில மாதங்களுக்குப்பின்னர் பம்பலப்பிட்டியில் உள்ள ஒரு விடுதியொன்றிலிருந்து இரவு வேளை கடத்திச்செல்லப்பட்டு பின்னர் அவர் கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர பாராளுமன்றத்தை அண்டிய ஹிம்புலால என்ற இடத்துக்கருகே உள்ள புதர் காடொன்றில் (28.5.2022) சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அவர் கொலையுண்ட செய்தி என்னையும் சிவராமின் நண்பர் அஜித் சமரநாயக்கவையும் நிலதளர வைத்திருந்தது. பெருக்கெடுத்து வந்த கண்ணீரை துடைத்தவாறு இரத்மலானையில் சிவராமின் பூதவுடலுக்கு நானும் அஜித் சமரநாயக்கவும் அஞ்சலி செலுத்திய போது அன்றொரு நாள் இரவு எனது மனைவியிடம் என்னை பாதுகாப்பாக ஒப்படைத்துவிட்டு, "நான் இவரது நண்பர். பயப்பட வேண்டாம்" என்று சிவராம் கூறியவையே அவர் மறைந்து பதினேழு ஆண்டுகள் கடந்த ஏப்ரல் மாதம் 28-ந்திகதியோடு பூர்த்தியான நிலையில் எனது நினைவில் நிழலாடுகின்றது.

# பற்றி எரியும்... எரிவாயு பிரச்னை....!

**பொதுமகன்,**
வேலணை கிழக்கு.



நீண்ட காலமாக எரிவாயு அடுப்பைப் பாவித்தோம். ஆனால், எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் - எரிவாயு தட்டுப்பாட்டால் மண்ணெண்ணெய் அடுப்பை பாவிக்கின்றோம்.

ஆனால், சமையலுக்கு உரிய மண்ணெண்ணெய் பெறுவதற்கு சிரமங்களை எதிர்நோக்குகின்றோம். வேலணை பகுதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு குடும்ப அட்டைக்கு 5 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்குகின்றார்கள். நீண்ட வரிசையில் காத்திருந்து அதைப் பெற வேண்டியிருக்கிறது. எரிவாயு அடுப்பு பாவித்த போது மிக இலகுவாக எமது வேலைகளை செய்ய முடிந்தது.

யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல முழுஇலங்கையையும் மீண்டுமொருமுறை பற்றி எரிய வைத்துள்ளது எரிவாயு பிரச்னை. எரிவாயு பயன்பாடு 90களின் பிற்பகுதியிலேயே நாட்டில் பாவனைக்கு வந்தவிட்டபோதும், அதனை தலைநகரில் மட்டுமே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. பின்னர் மெல்ல மெல்ல மற்றைய நகரங்களில் எரிவாயு பாவனை பரவியபோதும், வசதி படைத்தவர்களின் வீடுகளிலும் - நட்சத்திர விடுதிகளிலுமே எரிவாயு பயன்பாடு இருந்தது.

வடக்கு மாகாணத்தை -குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை போர் முடிவுற்ற பின்னர் - 2010ஆம் ஆண்டிலேயே எரிவாயு பயன்பாடு ஆரம்பமானது. கடந்த ஒரு தசாப்த காலத்தில் யாழ். மாவட்டத்தின் பெரும்பான்மை யான வீடுகளை எரிவாயு பாவனை ஆக்கிரமித்து விட்டது. பாரம்பரியமாக மக்கள் பயன்படுத்தி வந்த விறகு அடுப்புகள் அத்துடன் பல இடங்களில் காணாமல் போயின.

## எரிவாயு தேவை குறைந்துள்ளது



**க. மகேசன்**
யாழ். மாவட்ட அரச அதிபர்

கடந்த வருட இறுதிப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட டொலர் நெருக்கடியால் நாட்டுக்குத் தேவையான எரிவாயுவை கொள்வனவு செய்வதில் பெரும்இடர் நிலை ஏற்பட்டது. இதனால், நாடு முழுவதும் எரிவாயு விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டது. கேள்விக்கு ஏற்ற நிரம்பல் இல்லாமையால் பொதுமக்களின் தேவையை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும், 2021 ஆம் ஆண்டின் ஒகஸ்ட் மாதத்தில் 81,915 சிலிண்டர்களும், செப்ரெம்பரில் 56,322, ஒக்ரோபரில் 54,336, நவம்பரில் 60,409, டிசெம்பரில் 14,084 சிலிண்டர்களும் விநியோகிக்கப்பட்டன. ஜனவரியில் 33,930, பெப்ரவரியில் 44,644, மார்ச்சில் 22,372, ஏப்ரலில் 14371 எரிவாயு சிலிண்டர்களும் யாழ். மாவட்டத்துக்கு கிடைக்கப்பெற்று விநியோகிக்கப்பட்டன.

லிட்ரோ நிறுவனத்தால் ஒவ்வொரு மாதமும் யாழ்ப்பாணத்துக்கு என்று விநியோகிக்கப்பட்டன. தற்போதைய சூழ்நிலையில் எரிவாயுவுக்கான கேள்வி சற்று குறைந்துள்ளது. எரிவாயு தட்டுப்பாடு - கிடைப்பனவில் கிடைக்கும் இடர் நிலை காரணமாக பலர் மாற்றுவழிகளை நாடியுள்ளார்கள். வர்த்தகம் சார் நடவடிக்கைகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே விநியோகஸ்தர்களால் எரிவாயு மட்டுப்படுத்தப்பட்டளவில் விநியோகிக்கப்படுகின்றது. இதனால் பொதுமக்களுக்கான எரிவாயு விநியோகம் சற்று மட்டுப்படுத்தப்பட்டளவில் இடம்பெறுகின்றது.

இலகுவான பாவனை - தடையின்றிய கிடைப்பனவு - கட்டுபடியாகக்கூடிய விலை - நவீன வாழ்க்கை முறை - குறைந்தளவு நேரப் பயன்பாடு என்பவையும் - பாரம்பரிய சமையல் முறையில் நிலவிய குறைபாடுகள் - கிடைப்பனவு கடினம், பாவனை சிக்கல்களாலும் எரிவாயு பாவனை கிட்டத்தட்ட யாழ்ப்பாணத்தின் அனைத்து வீடுகளிலும் ஆதிக்கம் செலுத்தியது.

நடுத்தர வர்க்க மக்களும் இலகுவாக வாங்கக் கூடிய விலையில் கிடைத்தமையால் எரிவாயு பயன்பாடு மேலும் உச்சம் பெற்றது. பொருளாதார நெருக்கடிக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் எரிவாயு சிலிண்டரின் விலை 1,550 ரூபாயாக இருந்தது. பொருளாதார நெருக்கடியின் பின்னர் எரிவாயுவின் விலை 2,900 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், விலை உயர்த்தப்பட்ட பின்னர் அறிவிக்கப்பட்ட விலையில் யாழ்ப்பாணத்தில் எரிவாயுவைப் பெறுவது என்பது மிகக் கடினமானதாகவே இருக்கிறது.

ஆனாலும், இன்றும் கறுப்பு சந்தையில் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு கிடையாது. இரு மாதங் களுக்கு முன்புவரை கறுப்பு சந்தையில் 6,000 ரூபாய்க்கு விற்பனையான எரிவாயு - தற்போது தங்கு தடையின்றி 8,000 ரூபாய்க்கு விற்பனையாகின்றது. இது ஒரு புறமிருக்க 4,000 ரூபாய்க்கு விற்பனையான வெற்று சிலிண்டரின் விலை 450 வீதத்தால் உயர்வடைந்து 18,000 ரூபாய்க்கு விற்பனை யாகின்றது. இந்த விலையுயர்வுகள் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோரின் கவனத்தை பெற்றுள்ளன. இதனால், களவாடப்படும் - வழிப்பறி பொருட்களில் ஒன்றாக எரிவாயு சிலிண்டரும் மாறியுள்ளது.

எரிவாயு விநியோகத்தை கண்காணிப்பதற்கு யாழ். மாவட்டத்தில் கடந்த மாதங்களில் தனியாகக் குழு அமைத்தபோதும், அதிக விற்பனை செய்பவர்களை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டபோதிலும் இந்த நடவடிக்கைகள் கறுப்பு சந்தை விற்பனையையோ - அல்லது கறுப்பு சந்தைகளுக்கு எரிவாயு சிலிண்டர்கள் கடத்தப்படுவதையோ கட்டுப்படுத்தவில்லை.

சாதாரண மக்களுக்கு இலகுவாகக் கிட்டிய எரிவாயு இன்று அவர்களுக்கு எட்டாக்கனியாக மாறியுள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் நிலவரம் தொடர்பாக இங்கு சிலர் மனம் திறக்கின்றனர்.

நீண்ட வரிசைகளும் - காத்திருப்புகளும் யாழ்ப்பாண மக்களுக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனால், அதிவேக வாழ்க்கைக்கு பழகிவிட்ட இன்றைய சமூகத்தில் ஒவ்வொரு பொருட்களையும் பெற வரிசையில் நீண்ட நேரம் காத்திருப்பது என்பது ஏற்க முடியாதாக மாறிவிட்டது.

பொருளாதார நெருக்கடி இன்றைய மக்களின் வாழ்க்கையை மறுபடியும் ஓர் இருண்ட யுகம் நோக்கி அழைத்துச் செல்கிறது. இதில் எரிவாயு பிரச்னை முதன்மையானது. இது, யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாடுமுழுவதும் பற்றியெரியும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

## சிலிண்டரை பெற ஒருவருக்கு சம்பளம் கொடுக்கும் நிலைமை!



**தம்பிராசா**
உரிமையாளர், தம்பி தேநீர் கடை, யாழ்ப்பாண மாநகரம்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இருந்து இன்றுவரை மண்ணெண்ணெய் அடுப்பில் தான் எமது தேவைகளை நிறைவேற்றி வந்தோம். வேலை சுகம் சுகாதார பிரச்னை மற்றும் கட்ட டங்கள், பாத்திரங்களின் சுத்தம் கருதி எரிவாயு அடுப்பை பயன்படுத்தினோம். அதுவும் ஒரு குறுகிய காலம்தான் மாற்றினேன். அந்த நேரத்தில் எரிவாயுவை இலகுவாகப் பெறக் கூடியதாக இருந்தது. இலகுவாக எமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடியதாக இருந்தது. இப்போது எரிவாயுவை பெற பல இன்னல்களை எதிர்கொள்கிறோம்.

எரிவாயு சிலிண்டரை பெற வீதிவீதியாக அலைய வேண்டி யுள்ளது. அத்துடன், சிலிண்டரை பெறுவதற்கும் ஒருவரை சம்பளத்துக்கு அனுப்பி பெறும் நிலையை எதிர்கொள்கி றோம். "இந்தா வருது... அந்தா வருது... எனக் கூறுவார்கள் ஆனால் எரிவாயுவை பெற பலத்த இன்னலை எதிர் கொள்கிறோம்."

மண்ணெண்ய் அடுப்புக்கு மாறுவோம் என்றால் அதற்கும் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. ஆயிரம் ரூபாய்க்கு வழங்குகிறார்கள். நாம் வரிசையில் காத்திருந்து போனால் 500 ரூபாய்க்கு மட்டுமே வழங்குகிறார்கள். இந்த நிலையில் வியாபா ரத்தை எப்படி நடத்துவது? எமது வியாபாரத்தில் 90 வீதத்தை நாம் இழந்துள்ளோம்.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## அதிக பாதிப்பு எனக்குத்தான்

**அடையாளம் வெளியிடவிரும்பாத பெண் ஒருவர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு என்பது பெரும் பிரச்னை. குடும்பத் தலைவி என்ற ரீதியில் நானே அதிக பாதிப்புக்களையும் பிரச்னைகளையும் எதிர்கொள்கிறேன். நீண்ட காலமாக எரிவாயு அடுப்புத்தான் எனது வீட்டில் சமையலுக்கு பயன்படுத்தினேன். விலையேற்றம் - தட்டுப்பாட்டால் மண்ணெண்ணெய் குக்கருக்கு பயன்படுத்த மாற வேண்டியிருந்தது. நானும் வேலைக்கு செல்வதால் பாத்திரங்களை தேய்ப்பது தொடங்கி சமையலை செய்வது வரை அதிக நேரம் பிடிக்கிறது. இதனால், வீட்டிலும் பிரச்னைகள், வேலையிடத்திலும் பிரச்னைகள்.

வீட்டின் தூய்மை கருதி விறகு அடுப்பையும் அமைக்கவில்லை. ஒரு குக்கரில் நின்றவாறு எத்தனை சமையல் செய்வது. நேரமும் தாமதமாகிறது. இதனால், அதிக பணம் கொடுத்து எரிவாயுவை ஒருமுறை வாங்கினோம். இப்போதைய செலவுக்கு அது கட்டுப்படியாகவில்லை. எரிவாயு தட்டுப்பாடு விரைவில் நீங்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

## வெயிலில் வீதிவீதியாக அலைகிறோம்!



**கடற்றொழிலாளி,** குருநகர்.

நீண்டகாலமாக எரிவாயு அடுப்பையே சமையலுக்காக பயன்படுத்தி வருகிறோம். கடந்த ஆறு மாதமாக மண்ணெண்ணெய் குக்கரை பயன்படுத்த ஆரம்பித்துள்ளேன். எரிவாயு வாங்க முடியாமல் போனதே இதற்கு காரணம். ஆனால், இப்போது மண்ணெண்ணெய் வாங்குவதற்கும் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது.

கடற்றொழில் எனது வாழ்வாதாரம். இரவில் கடற்தொழிலுக்கு சென்று விட்டு பின்னர் சமைப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நிற்க வேண்டியிருக்கிறது. கூட்டுறவுசங்கத்தில் ஒரு குடும்பத்திற்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய் தருகிறார்கள். நீண்ட வரிசையில் நிற்கும்போது சில வேளைகளில் கடைசியாக வந்தால் மண்ணெண்ணெய் இல்லை, நாளை வருமாறு கூறுவார்கள். எரிவாயு இல்லை, மண்ணெண்ணெய்காக இந்த கடும் வெயிலில் வீதியில் அலைந்து தவிக்க வேண்டிக்கிடக்கிறது.

## அம்மாவான நயன்தரா!




நயன்தாரா அம்மாவாக நடிக்கவுள்ளார். இந்தப் படத்துக்கு “02“ என்று பெயர் வைத்துள்ளனர். விக்னேஷ் ஜி.எஸ் இயக்கியுள்ளார்.

ஒரு தாய், தன் 8 வயது மகனுடன், விபத்தில் சிக்கும் பேருந்தில் மாட்டிக்கொள்கிறாள். நுரையீரல் பிரச்னைக்காக, எப்போதும் தன் மகனிடம் இருக்கும் ஒட்சிசன் சிலிண்டரை, சகபயணிகள் குறிவைக்க, மகனை, தாய் எப்படி காப்பாற்றுகிறாள் என்பதைச் சொல்லும் படம் இது.

இதில், தாய் பார்வதியாக நயன்தாராவும் மகனாக ரித்விக்கும் நடித்துள்ளனர்.

## 5 மொழிகளில் விஜய்



இயக்குநர் சுசீந்திரன் இயக்கவுள்ள படம் வள்ளிமயில். இந்த படத்தில் விஜய் அன்ரனி, பிரியா அப்துல்லா நடிக்கவுள்ளனர். இவர்களுடன் பாரதிராஜா, சத்யராஜ், சுனில், தம்பி ராமைய்யா, சிங்கம்புலி, ரெடின் கிங்ஸ்லி உள்பட பலர் நடிக்கிறார்கள்.

இந்தப் படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி உள்ளிட்ட 5 மொழிகளில் தயாராகிறது. 1980களில் நடக்கிற மாதிரியான கதை. முதல்கட்ட படப்பிடிப்புகள் திண்டுக்கல்லில் தொடங்குகிறது.

## மிரட்டும் யாஷிகா

தமிழ் திரையுலகில் சமீபகாலத்தில் ஒரே கவர்ச்சி கன்னியாக உருவெடுத்துள்ளார் யாஷிகா ஆனந்த்.

பிக்பாஸ் மூலம் சின்னத்திரையிலும் அறிமுகமாகி தனக்கான களத்தை பெரிதாக்கிக் கொண்ட அவருக்கு ஏகப்பட்ட ரசிகர்கள் பட்டாளம் உருவாகிவிட்டது. விபத்துக்கு பிறகு மீண்டுவந்த அவர் தற்போதெல்லாம் சமூகவலைதளத்தில் தடையே இல்லாமல் கவர்ச்சி சூறாவளியாக சுற்றி வருகிறார். இந்நிலையில் கோடை அவர் வெளியிட்ட படங்கள் அவரை இன்னொரு உயரத்துக்கு கொண்டு சென்றுள்ளன.



## 4 மொழி படத்தில் ஸ்ரத்தா



தூய்மை பணியாளர்களின் வாழ்வைப் பேசும் படமாக உருவாகி இருக்கும் “விட்னஸ்” நான்கு மொழிகளில் வெளியாக இருப்பதாக படக்குழு தெரிவித்துள்ளது.

தெலுங்கு மற்றும் கன்னட திரைத் துறைகளில் பல படங்களைத் தயாரித்து வெளியிட்ட ‘தி பீப்பிள் மீடியா பக்டரி’ நிறுவனம் தமிழில் தயாரித்துள்ள படம், ‘விட்னஸ்’. அழுத்தமான, உணர்வுபூர்வமான இந்தத் திரைப்படத்தின் வாயிலாக தமிழில் இந்நிறுவனம் காலடி எடுத்து வைக்கிறது. டி.ஜி.விஷ்வபிரசாத்துடன் இணைந்து, விவேக் குச்சிபோட்லா இதை தயாரித்துள்ளார்.

தமிழில் உருவாகி இருக்கும் இத்திரைப் படம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி மொழிகளிலும் வெளியாக இருக்கிறது.

## அஜித்தின் புதிய நாயகி!

நேர்கொண்ட பார்வை, வலிமை படங்களைத் தொடர்ந்து மீண்டும் வினோத் இயக்கும் தனது 61 ஆவது படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் அஜித் குமார்.

வங்கிக் கொள்ளை சம்பந்தப்பட்ட கதையில் உருவாகும் இந்த படத்தில் அஜித் குமார் நாயகன் - வில்லன் என இரட்டை வேடத்தில் நடிக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தப் படத்தில் அஜித் நடித்து வரும் புதிய தோற்றங்கள் இணையத்தில் வெளியாகி ரசிகர்களை பெரியளவில் ஈர்த்து வருகின்றன.



இந்த நிலையில் அஜித் 61வது படத்தில் நாயகியாக மலையாள நடிகை மஞ்சு வாரியர் நடிக்கிறாரென தகவல்கள் வெளியாகி உள்ளன. இவர் ஏற்கனவே வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடித்த அசுரன் படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நிழல் இணை நிஜத்திலும் இணைகிறது!



யாகவராயினும் நாகாக்க, மரகதநாணயம் படங்களில் நடித்த போது நடிகர் ஆதி, நடிகை நிக்கி கல்ராணி நட்பாகி பின்னர் காதலிக்க தொடங்கினர்.

இவர்களின் காதலுக்கு இருவரது வீட்டில் பச்சைக் கொடி காட்ட கடந்த மார்ச் மாதம் நிச்சயதார்த்தம் நடந்தது. திருமண திகதி பின்னர் அறிவிக்கப்படும் என இருவரும் கூறியிருந்தனர்.

இந்நிலையில், எதிர்வரும்18ஆம் திகதி சென்னையில் ஹோட்டல் ஒன்றில் இருவரின் திருமண நிகழ்வு நடைபெறவுள்ளது. நெருங்கிய உறவுகள் மட்டுமே இதில் பங்கேற்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.




## திரைப்படம் - விசித்திரன்

**இயக்கம் - பத்மகுமார்**

**நடிப்பு - ஆர். கே. சுரேஷ், பூர்ணா**

**இசை - ஜீ. வி. பிரகாஷ்**




மலையாளத்தில் 2018ஆம் ஆண்டு வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்ற “ஜோசப்” படத்தின் தமிழ் மீளுருவாக்கமே இந்த “விசித்திரன்”. மலையாளத்தில் படத்தை இயக்கிய பத்மகுமார் இதையும் இயக்கியுள்ளார்.

பொதுவாக மலையாள படங்களின் திரைக்கதை கொஞ்சம் மெதுவாக நகரும். அது மலையாள ரசிகர்களுக்கு பழகிப் போன ஒன்று. ஆனால், தமிழ் ரசிகர்கள் இன்னும் அந்த மாதிரியான திரைப்படங்களுக்கு அதிகம் பழகவில்லை. இந்தப் படத்தைப் பார்க்கும் போது நமக்கு குறையாகத் தெரிவது மெதுவாக நகரும் அந்தத் திரைக்கதைதான். மற்றபடி ஒரு த்ரில்லர் படத்தில் உணர்ச்சி, காதல் கலந்து கொடுத்து ரசிக்க வைத்திருக்கிறார் இயக்குநர் பத்மகுமார்.

விருப்ப ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியான ஆர். கே. சுரேஷ். பிரிந்து போன மனைவி பூர்ணா, விபத்தில் இறந்து போன மகள் என தன்னுடைய வாழ்க்கையை தனிமையில் கடத்துகிறார். சுரேஷ் எந்த ஒரு வழக்கையும் தீர விசாரிப்பதில் வல்லவர். சுரேஷின் பிரிந்து போன மனைவி பூர்ணாவும் ஒரு விபத்தில் சிக்கி இறந்து போகிறார். ஆனால், அது ஒரு கொலை எனச் சொல்கிறார் சுரேஷ். அதற்கான காரணத்தை தனது பொலிஸ் நண்பர்கள் மாரிமுத்து, இளவரசு ஆகியோரின் உதவியுடன் கண்டுபிடிக்க முயல்கிறார். அது ஒரு மருத்துவ மாபியா என்பதை அறிந்திருந்தும் தன் உயிரை துச்சமென மதித்து களமிறங்குகிறார். முன்னாள் மனைவியின் மரணத்துக்கு காரணமானவர்களை அவர் கண்டுபிடித்தாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

சுரேஷ் தன்னை தனித்துவதமான கதாநாயகனாக முன்னிறுத்திக் கொள்ளும் முயற்சியாக இந்த படத்தை மீளுருவாக்கி நடித்திருக்கிறார். நடுத்தர வயது கதாபாத்திரத்தில் பொருத்தமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். இழந்த மகள், பிரிந்த மனைவி என ஒருவரது வாழ்க்கையில் எவ்வளவு பெரிய சோகம் இருக்கும். அவ்வளவு சோகத்தையும் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். இருப்பினும் அந்த சோகத்துக்காக எப்போதும், புகைப்பதையும், குடிப்பதையும் தவிர்த்திருக்கலாம்.

சுரேஷின் முன்னாள் மனைவியாக பூர்ணா. முன்னாள் காதலியாக மது ஷாலினி. இருவருக்கும் சிறிய காட்சிகள்தான் என்றாலும் முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரங்கள். சுரேஷின் ஆத்மார்த்தமான நண்பர்களாக இளவரசு, மாரிமுத்து. எந்நேரமும் நண்பன் கூடவே இருக்கும் இவ்வாறான நண்பர்களைப் பார்ப்பது அரிது.

படத்தில் தனித்து வில்லன் என்று யாரும் கிடையாது. ஒரு மருத்துவமனையை மட்டும் “மருத்துவ மாபியா மையம்” என்று குறிப்பிட்டுக் காட்டுகிறார்கள். இதற்கு முன்பு இம்மாதிரியான திரைப்படங்கள் சில வந்திருக்கின்றன. அவை அதிரடி சண்டை கதைக்களத்தில் அமைந்த படங்கள். இப்படம் உணர்வுபூர்வமான ஒரு படம்.

இந்தப் படத்திற்கு பாடல்கள் அவசியமில்லை, இருந்தாலும் ஒரு சில பாடல்கள் உள்ளன. பின்னணி இசையில் பரபரப்பை கூட்டியிருக்கிறார் ஜீ. வி.

படத்தின் உச்சக்கட்டம் யாருமே ஊகிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. இப்படியான உச்சக்கட்டக் காட்சிகள் மிகவும் அபூர்வமாகவே அமையும். அந்த கடைசி கட்ட காட்சிகள் மிகவும் உருக வைக்கும்.




# பீனிக்ஸாய் மீண்டெழுந்த ரியல் மட்ரிட்!

கடந்த வாரம் நடந்த சம்பியன்ஸ் லீக் அரையிறுதி முழுமையாக மன்செஸ்டர் சிற்றியின் கட்டுப்பாட்டில் இருந்தது. முதல் பகுதி போட்டியில் 4-3 என வெற்றி பெற்றிருந்த அந்த அணி, இரண்டாவது பாதியின் 90ஆவது நிமிடத்தில் 1-0 என முன்னிலை பெற்றிருந்தது. 2 கோல்கள் முன்னிலை. ஆட்ட நிறுத்த நேரத்தைக் கடத்தினால் போதும். இதையெல்லாவற்றையும் விட, அந்த 90 நிமிடங்களில் ரியல் மட்ரிட் ஒரு ஷொட் ஒன் இலக்கைகக்கூட வைத்திருக்கவில்லை. ஆனால், அடுத்த ஒரு நிமிடத்தில் இரண்டு ஷொட்கள், இரண்டு கோல்கள். போட்டி சமனாகி கூடுதல் நேரத்துக்குச் செல்ல, அதிலும் மூன்றாவது நிமிடத்திலேயே ஒரு கோல். 11 நிமிட இடைவெளியில் 3 கோல்கள் அடித்து மீண்டும் தன்னை நிரூபித்தது.



இந்தப் போட்டியில் மட்டுமல்ல. செல்சீக்கு எதிரான காலிறுதியின் 80ஆவது நிமிடம் வரை ஒரு கோல் பின்தங்கியிருந்தது ரியல் மட்ரிட். ஆனால், அடுத்த 16 நிமிடங்களில் 2 கோல்கள் அடித்து அரையிறுதிக்குள் நுழைந்தது. சொல்லப்போனால், காலிறுதிக்குள் நுழைந்த கதையுமே இப்படித்தான். பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்கெதிரான 16 அணிகள் சுற்று போட்டியில், கடைசி 30 நிமிடத்துக்கு முன்பு வரை 2 கோல்கள் பின்தங்கியிருந்தது அந்த அணி. ஆனால், 18 நிமிட இடைவெளியில் 3 கோல்கள் அடித்து மெஸ்ஸியின் அணியை வெளியேற்றியது.

இப்படி இந்தத் தொடரின் ஒவ்வொரு சுற்றிலும் அட்டகாசமான மீளெழுச்சிகளை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது ரியல் மட்ரிட். ஒவ்வொரு போட்டியின் போதும் அந்த அணி அவ்வளவுதான் என்று நினைத்தால், பீனிக்ஸ் பறவையைப்போல் நெருப்பிலிருந்து எழுந்து வந்துவிடுகிறது.

மற்றவர்களுக்கு வேண்டுமானால் இது எதிர்பாராதது போலத் தெரியலாம். ஆனால், ரியல் மட்ரிட் அணிக்கு இதுவொன்றும் புதிய விடயமில்லை. சம்பி யன்ஸ் லீக் அரங்கில் இப்படி பல முறை வெற்றி பெற்றிருக்கிறார்கள். வெற்றியின் உச்சிப் படியில் நின்றிருந்த எதிரணிகளை, ஒரே நொடியில் கீழே தள்ளியிருக்கிறார்கள்.

2014 - அத்லெடிகோ மட்ரிட்டுக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டி. ஆட்டம் நிறுத்தப்பட்ட மேலதிக நேரத்துக்கு செல்லும்போது ஒரு கோல் பின்தங்கியிருந்தது ரியல் மட்ரிட். எல்லாம் முடிந்துவிட்டது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். அதுவும் அரணாய் நிற்கும் சிமியோனின் அணிக்கெதிராக கடைசி நொடிகளில் மட்டும் முடிந்திடுமா என்ன? ஆனால், ரியல் மட்ரிட் அதை முடித்துக் காட்டியது. நிறுத்தப்பட்ட ஆட்டத்தின் மேலதிக நேரத்தின் மூன்றாவது நிமிடத்தில் ரமோஸ் கோலடித்து ஆட்டத்தை மேல திக நேரத்துக்கு எடுத்துச் செல்ல, அந்த 30 நிமிடங் களில் 3 கோல்கள் அடித்து அசத்தலாக ஆட்டத்தை முடிந்தது ரியல்!

இப்படி எத்தனையோ போட்டிகளில் ஆட்டத்தை மாற்றியிருக்கிறது அந்த அணி. ஆனால், இந்த வெற்றி கொண்டாடப்பட வேண்டியதற்கான முக்கிய காரணம், இப்போது இருக்கும் அணி முந்தைய அணிகளைப் போன்றது அல்ல. செர்ஜியோ ரமோஸ், கிறிஸ்ரியானோ ரொனால்டோ போன்ற ஆளுமைகள் இல்லை. மார்செலோ, மோட்ரிச் போன்றவர்களுக்கு வயதாகிவிட்டது. ஒருவரால் ஆட்டத்தைத் தொடங்கவே முடியவில்லை. ஒருவரால் முடிக்க முடியவில்லை. இப்படி ஓர் அணிதான் மில்லியன்கள், இல்லை பில்லியன்கள் மதிப்பு மிக்க... இளம் வீரர்களும், சுப்பர் ஸ்ரார்களும் நிறைந்த அணிகளை புரட்டி எடுத்திருக்கிறது.

மன்செஸ்டர் சிற்றி அணிக்கெதிரான போட்டியை முடித்த 11 வீரர்களைப் பார்த்தால், அது ரியல் மட்ரிட் அணியைப் போலவே தெரியாது. கோர்ட்வோ, லூகாஸ் வஸ்கீஸ், டேனி கர்வகால், நாசோ, ஜீசஸ் வலேஹோ, ஃபெர்லாண்ட் மெண்டி, கமவிங்கா, டேனி சபயோஸ், ஃபெடரிகோ வெல்வர்டே ராட்ரிகோ, அசான்சியோ போன்றவர்கள் தான் இந்த ஆட்டத்தை முடித்தவர்கள். கார்லோ ஆன்சலோடி இந்த அணியைச் சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

காயத்தால் டேவிட் அலாபா இந்தப் போட்டியில் ஆடவே இல்லை. எடர் மிலிடோ, கடைசி சில நிமிடங்கள் காயத்தால் ஆடவில்லை. ஆனால், அதையெல்லாம் இந்த அணி கடந்து வந்திருக்கிறது. பென்சிமா எனும் தங்க முட்டையிடும் வாத்தையும், அவருக்கு உறுதுணையாய் இருக்கும் வினி சியஸ் ஜூனியரையும் மையமாக வைத்து அவர்கள் அதிரடியை வடிவமைத்தார்டான் கார்லோ. கிடைக்கும் ஒரு சில வாய்ப்புகளையும் பக்காவாக இவர்கள் கோலாக்க, எதிரணிகள் என்ன செய்வது என்று தெரியாமல் தடமாறுகின்றன.

இந்த இரண்டாவது அரையிறுதிப் போட்டிக்கு முன்பு முன்னாள் ஆர்சனல் பயிற்சியாள ஆர்சென் வெங்கர் அதைத்தான் கூறியிருந்தார்: "இந்த ரியல் மட்ரிட் அணி குறைந்த வாய்ப்புகளைத்தான் உருவாக்குகிறது. ஆனால், அதை அவர்களால் கோலாக்க முடிகிறது. அதைத்தான் அவர்கள் சிற்றிக்கு எதிராக செய்யவேண்டும்" என்றார். அதைப் போலவே, கிடைத்த கிடைத்த முதல் 3 வாய்ப்புகளையும் கோலாக்கி ஆட்டத்தை மாற்றியது அந்த அணி.

இந்தப் போட்டிக்குப் பின்பு வெங்கர் சொன்ன விஷயம் இது: "ஒவ்வொரு போட்டிக்குப் பின்பும், என்ன பிரச்னை நடந்தது என்று நாங்கள் நிறைய ஆராய்வோம். ஆனால், இந்த மட்ரிட் அணிக்கு ஒவ்வொரு பிரச்னைக்குமான பதில் உடனே கிடைத்துவிடுகிறது" என்றார்.

அதனால்தான் 13 முறை சம்பியன்ஸ் லீக்கை வென்றிருக்கிறது ரியல் மட்ரிட். அந்தப் பதில் கிடைப்பதால், இது சாத்தியம் ஆகியிருக்கலாம். இல்லையெனில், இதுவே பதிலாகவும் இருக்கலாம்!

# மும்பையின் மீளெழுச்சி!

விடியற்காலை 6 மணிக்கு வர வேண்டிய பந்தயத்திற்கு சாவகாசமாக சாயங்காலம் 6 மணிக்கு வந்த கதையை மீண்டும் நிகழ்த்திக் காட்டியிருக்கிறது மும்பை இந்தியன்ஸ். எப்போது வந்தால் என்ன, ஆட்டத்திற்கு வருகிறார்களே அதுவே போதும் என்ற மனநிலைக்கு ரசிகர்கள் வந்துவிட்டதால் குஜராத்துக்கு எதிரான மும்பையின் இந்த வெற்றி கொண்டாடத்தக்கதாகவே மாறியிருக்கிறது.

போட்டியை மும்பை வென்றாலும் போட்டிக்கு முன்பான நாணயச்சுழற்சியை குஜராத்தான் வென்றிருந்தது. இலக்கைத் துரத்தப்போவதாக ஹார்திக் பாண்ட்யா அறிவித்தார். இதன்படி, மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அடுத்தடுத்த தோல்விகளும் ஏமாற்றங்களும் சேர்ந்து மும்பை அணியை ரொம்பவே துவண்டு போகச் செய்திருந்தது. இந்நிலையில் கடைசியாக ராஜஸ்தானுக்கு எதிராக மும்பை அணி பதிவு செய்த அந்த முதல் வெற்றி, அணிக்குள் ஒரு பயங்கரமான நேர்மறையான தாக்கத்தை பரவ செய்கிறது. மும்பை அணி தலைவரான ரோஹித் சர்மாவின் ஆட்டத்திலேயே இதை உணர முடிந்தது. எந்தச் சுமையுமின்றி ரொம்பவே இலகுவாக காற்றில் பறப்பதை போன்று சிறப்பாக ஆடியிருந்தார். 28 பந்துகளில் 43 ரன்களை அடித்திருந்தார்.




அல்சாரி ஜோசப் வீசிய இரண்டாவது ஓவரிலிருந்தே அதிரடியைத் தொடங்கிவிட்டார் ரோஹித். அந்த ஓவரில் மட்டும் 2 பௌண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 16 ஓட்டங்கள் வந்திருந்தன. ஆனாலும், ரோஹித் நீண்ட நேரம் நிற்க வில்லை. 43 ரன்களில் ரஷீத்கானின் பந்தில் ஆட்டமிழந்தார்.

7-15 மத்திய ஓவர்களில் மும்பை கொஞ்சம் கடுமையாகவே தடுமாறியது. இந்த 9 ஓவர்களில் மும்பை அணியால் 57 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. 4 விக்கெட்களையும் இழந்திருந்தனர். ரோஹித் சர்மாவுடன் நன்றாக தொடங்கி கூடுதலாக கொஞ்ச நேரம் நின்ற இஷன் கிஷன் 45 ஓட்டங்களில் அல்சாரி ஜோசப்பின் பந்தில் ஆட்டமிழந்தார்.இறுதியில் மும்பை அணி 20 ஓவர்களில் 177 ஓட்டங் களை அடித்திருந்தது.

குஜராத்துக்கு இலக்கு 178. அந்த அணி துரத்தலை தொடங்கியது. 13ஆவது ஓவர் வரைக்குமே மும்பைக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் எதுவும் நடக்கவில்லை. எல்லாமே குஜராத் பக்கமாகத்தான் சாதகமாக நடந்திருந்தது. குஜராத்தின் தொடக்க வீரர்களான ஷப்மன் கில்லும் ரித்திமான் சஹாவும் இணைந்தே முதல் விக்கெட்டுக்கு 106 ஓட்டங்களைச் சேர்த்துவிட்டனர். பவர்ப்ளேயில் பும்ரா, மெரிடித், முருகன் அஷ்வின் என அத்தனை பேரையும் சஹா தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு அடித்து வெளுத்தார்.

கொஞ்சம் தாமதமானாலும் கிலும் பின்னர் அதிரடி காட்டினார். இந்த சூழலில் முருகன் அஷ்வின் உள்ளே வந்து ஆட்டத்தை மாற்றினார். அவர் வீசிய 13வது ஓவரில் கில், சஹா இருவருமேஆட்டமிழந்தனர். இதைத் தொடர்ந்து விக்கெட்கள் தொடர்ந்து சரியத் தொடங்கின.

இப்படியாக நகர்ந்து கடைசி ஓவரில் குஜராத்தின் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆடுகளத்தில் மில்லரும் திவேதியாவும் இருந்தனர். அரங்கத்தில் ரஷீத்கான் இருந்தார். மூன்று பேருமே அபாயகரமானவர்கள். அசாத்தியங்களை நிகழ்த்தக் கூடியவர்கள். இவர்களுக்கு எதிராக பந்தை வீச வந்தவர் டேனியல் சாம்ஸ். ஏற்கெனவே, இந்தத் தொடரில் பட் கம்மின்ஸால் அடித்து நொறுக்கப்பட்டவர். இப்போதும் போட்டி குஜராத் பக்கமாக இருப்பதாகவே தோன்றியது. ஆனால், டேனியல் சாம்ஸ் ஒரு சரியான பாடத்தைக் கற்பித்தார். வீழ்ந்தவன் எப்போதும் அப்படியே வீழ்ந்து கிடக்கமாட்டான் என்பதை நிரூபித்தார்.

இந்த ஓவரில் ஒரு பௌண்ட்ரி கூட கொடுக்காமல் மூன்றே ஓட்டங்களை மட்டும் கொடுத்து 9 ஓட்டங்களை வெற்றிகரமாக தடுத்தார். வீசியது அத்தனையும் 120 கி.மீ க்கும் குறைவான ஸ்லோவர் ஒன்கள். நினைத்த நீளத்தில் ஒரு உதிரி கூட வழங்காமல் சரியாக இந்த ஓவரை வீசி முடித்தார். மும்பை அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

ரோஹித், சாம்ஸ் உட்பட மும்பை அணி வீரர்கள் அத்தனை பேரும் சம்பியன் பட்டத்தை வென்றதை போல துள்ளிக்குதித்தார்கள். முந்தைய போட்டிகளில் வாங்கிய அடியையும் பெற்ற ஏமாற்றத்தையும் கொண்டாட்டத்தில் கரைக்க முனைந்தனர்.

# பெருமாள் முருகனின் கதையுலகு பாரிஸில் ஒரு இலக்கிய பகிர்வு !




**என்.கே.துரைசிங்கம்**

பாரிஸ் நகரில் நடைபெறும் புத்தக திருவிழா பன்னாட்டு அறிஞர்களும் கலந்து கொள்ளும் விழா என்பது டன் பிரான்ஸ் நாட்டு கலை கலாசார பண் பாட்டு விழுமிங்களுடன் நடைபெறும் ஒரு தேசிய விழாவாகும்.2022 நிகழ்வானது இந்தியாவை முன்னிலை படுத்திய விழாவாக பிரகடனம் செய்யப்பட்டது.இந்திய எழுத்தாளர் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

பிரான்ஸ் அழைப்பில் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த பிரபல எழுத்தாளர் பெருமாள் முருகன் மற்றும் காலச்சுவடு கண்ணன் ஆகியோர் அரச நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் பாரிஸ் தமிழர்களின் இலக்கிய சந்திப்புகளில் கலந்து கொண்டனர்.

கடந்த வார சனிக்கிழமை “பெருமாள் முருகனுடன் சந்திப்பு ” என்ற தலைப்பிட்டு நிகழ்வு நடைபெற்றது. மண்டபம் நிறைந்த ஆர்வலர்கள் இலக்கிய விருந்து உண்டு களித்தனர்.

பாரிஸ் தமிழ் இலக்கிய பயணத்தில் சலிக்காது பயணிக்கும் லட்சுமி நிகழ்வை நெறிப்படுத்தினார்.

பெருமாள் முருகனின் கதையுலகு - நாகரத்தினம் கிருஷ்ணா, இலக்கியமும் உலகமயமாதலும் -க.வாசுதேவன்,இலக்கியமும் சகிப்பின்மையும்-ந.சுசீந்திரன் ஆகியோர் தலைப்பு இடப்பட்டு உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தனர்.நாகரத்தினம் கிருஷ்ணா தவிர்க்க முடியாத காரணமாக நிகழ்வில் நேரிலே கலந்து கொள்ள முடியாது போனாலும் தனது உரையை அனுப்பியிருந்தார் லட்சுமி அதனை வாசித்து உயிர்ப்பித்தார். தொடர்ந்து ஏனைய இருவரும் தங்கள் பணியை செய்தனர்.நிகழ்வு களைகட்டியது.இடைவேளைக்கு பின் பெருமாள் முருகனின் மனந்திறந்த உரையாடல் இடம்பெற்றது.

பெருமாள் முருகனின் “பூக்குழி” நாவல் பிரெஞ்சில் மொழிபெயர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.புத்தக திருவிழாவில் இந்த புத்தகம் பிரெஞ்சு மொழி இலக்கியர்களை கவர்ந்தது.

பெருமாள் முருகன் அரசு கல்லூரி முதல்வர்.கவிதை, கட்டுரை,சிறுகதை,நாவல் என தமிழ் இலக்கிய உலகில் பிரம்மாவாக வலம் வருகிறார்.இளமுருகு என்னும் பெயரில் நிறைய கவிதைகள் எழுதியுள்ளார். காலச்சுவடு ஆசிரியர் குழுவில் இருந்தவர்,மனோசை,குதிரைவீரன் பயணம் ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர்.இவரது ஒன்பது நாவல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க பட்டுள்ளன.நிலாமுற்றம் நாவல் போலிஷ் மொழியிலும் மாதொருபாகன் ஜெர்மன் மொழியிலும் செக் மொழியிலும் வெளியாகியுள்ளன.

மலையாளம் ,கன்னடம் ,தெலுங்கு,மராத்தி,இந்தி உட்பட இந்திய மொழிகளில் மாதொருபாகன் நாவல் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இவரது பல நூல்கள் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.அகராதியியல்,பதிப்பியல் துறைகளிலும் ஆர்வமுடையவர்.

எழுத்துலகின் இமயம் என்று வர்ணிக்கப்படும் பெருமாள் முருகன் தனது கதையுலகு மற்றும் அனுபவங்கள்,கதைகளங்கள் குறித்து இலக்கிய ஆர்வலர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்து மனந்திறந்து பேசினார்.

அவரது மாதொருபாகன் வெளியான போது அதற்கெதிராக பெரும் கிளர்ச்சியும் ஏற்பட்டது. கொந்தளிப்பான சூழலை அடுத்து இனி எதையும் தான் எழுதுவதில்லை என்றும் மாதொருபாகன் மற்றும் அவர் எழுதிய எந்த நாவலையும் வெளியிடவேண்டாம் என்றும் விற்காமல் உள்ள நாவல்களை பதிப்பகத்தார் தன்னிடம் கொடுத்தால் உரிய தொகையை கொடுத்து விடுவதாகவும் ,பெருமாள் முருகன் என்பவன் இறந்து விட்டதாகவும் தமிழ் ஆசிரியரான பெ.முருகன் மட்டும் இருப்பதாகவும் முகநூலில் பதிவிட்டார்.

ஒரு சாதியை சார்ந்த குழந்தையில்லாத தம்பதிகள் பற்றிய கதைதான் மாதொருபாகன்.குழந்தையில்லாததால் தேர்த்திருவிழாவில் அடுத்த ஆணுடன் உறவு கொண்டு குழந்தை பெற முயல்வது போல் கதை எழுதப்பட்டுள்ளது.இதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அவரது இலக்கிய பயணம் நின்று போகும் வகையில் அவதூறுக்கு ஆளானார், அவமதிக்கப்பட்டார்.நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கலானது.

பெருமாள் முருகன் சார்பாக எழுத்தாளர்,கலைஞர் அமைப்புகள் நீதிமன்றத்தில் அந்த புத்தகம் குறித்த நியாயங்களை ஆவணங்களுடன் சமர்ப்பித்தனர். எல்லாத்தரப்பு கருத்துகளையும் கவனத்திலெடுத்த நீதிமன்றம் “இலக்கிய பிரதிக்கு எதிர்ப்பு தெரி விப்பது கருத்துரிமைக்கு எதிரானது பெருமாள் முருகன் மீண்டும் எழுதவேண்டும்”என்று தீர்ப்பு வழங்கியிருந்தது.

இதை தொடர்ந்து பெருமாள் முருகன் தடைகளிருந்து மீண்டுவந்தார்.சாம்பல் மேட்டிலிருந்து எழுந்த பீனிக்ஸ் பறவையாக மீண்டு வந்து இலக்கிய வானில் சிறகடித்து பறக்கிறார்.

பாரிஸ் இலக்கிய பகிர்வில் அவர் பகிர்ந்து கொண்ட விடயங்கள் பாரிஸ் நகருக்கு வந்தது சந்தோசம் தருகிறது.பிரான்ஸ் அரசின் அழைப்பின் பேரில் இங்கு வருகை தந்தோம்.ஐந்து நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோம். புத்தக கண்காட்சி, பல்கலைக்கழகம், புத்தக கடை கலந்துரையாடல் உடன் தமிழ் மக்கள் சந்திப்புகள் என கலந்து கொண்டது மகிழ்ச்சி தருகிறது.

சிறு வயதில் மரபுக்கவிதைகள் எழுத் தொடங்கினேன்.பிறந்த நாள் வாழ்த்துகள், திருமண வாழ்த்துகள் செய்யுள், விருத்தம், சந்தம், வெண்பா முறைப்படி எழுதினேன் என்றார்.மாதொரு பாகன் நூலுக்கு ஏற்பட்ட தடை குறித்து கேள்வி எழுந்த போது அதனை பற்றி விரிவாக கூறினார்.

“மாதொருபாகன்”விவகாரத்தில் எனக்கு பெரும் அழுத்தம்,நிர்ப்பந்தம் ஏற்பட்டது கொலை பயமுறுத்தல் எச்சரிக்கை விடுக்கப்பட்டது ஊரை விட்டு வெளியேற முயன்றேன்.ஒன்றரை வருடம் எழுதாமல் இருந்தேன்.கவிதைகள் மட்டும் எழுதினேன்.கருத்துரிமை தொடர்பாக இந்த வழக்கில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு புத்தகமாக வெளியிடப்பட்டது.

இதற்கு பின்னர் புதிதாக எழுத தொடங்கினேன். முதலில் சிறுகதை எழுத புறப்பட்டேன். ஆடுகளை பற்றி எழுதவேண்டும் என்ற எண்ணத்தில் வெள்ளாடு பற்றி எழுத தொடங்கினேன். பூனாச்சி நாவலாக உருவானது.நாவல் வாசகர்களுக்கு நம்பகத்தன் மையை உருவாக்க வேண்டும். ஊரைப்பற்றியதாகவே எனது படைப்புகள் வெளிவந்துள்ளன.

பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை-(2016), மாதொருபாகன் ஆகிய நாவல்கள் அமெரிக்கா வில் தேசிய விருது பெற்றன.இரண்டையும் ஆங்கிலத் தில் அங்குள்ள வெளியீட்டாளர் வெளியிட்டார். இதனால் அமெரிக்க அரசின் விருந்தாளியாக அந்த நாட்டிற்கு அழைக்கப்பட்டேன்.ஒரு மாதம் அங்கு தங்க வைக்கப்பட்டேன்.எழுத்தாளர்கள் தங்கும் விடுதியில் பல நாட்டு எழுத்தாளர்களுடன் இருந்தேன்.அவர்கள் எழுதுவதற்கான சூழலை ஏற்படுத்தி தந்தார்கள்.அங்கேயும் ஒரு புத்தகம் எழுதிமுடித்தேன்.


திரைப்படங்களுக்கு கதை எழுதுவதற்கான அழைப்புகள் வந்தன.அறைபோட்டு உட்கார்ந்து எழுதிக் கொடுப்பேன் . படம் வரவில்லை இறுதியாக ஒரு இயக்குனர் வந்தார் கதையெல்லாம் தயார்செய்து கொடுத்தேன். பலரை கண்டுபடம் வராமல் ஏமாந்துபோன எனக்கு இவர் நம்பிக்கை தந்தார்

படம் எடுக்கப்பட்டது.திரைப்பட விழாக்களுக்கு மட்டும் சென்றது.இது வரைக்கும் தியேட்டர்களில் திரைகளுக்கு வரவில்லை .“இவ்வாறு தனது கதையுலகு அனுபவங்களை அவர் பகிர்ந்து கொண்டார்.

காலச்சுவடு கண்ணன் மாதொருபாகன் தடை நீக்கத்திற்காக தாம் எடுத்த முயற்சிகளையும் அதற்கு கிடைத்த நீதியையும் வரலாற்று தகவல்களோடு கூறினார்.இவரது கருத்துகளை எல்லோரும் ஆர்வமாக செவிகளில் உள்வாங்கிகொண்டனர். இந்த நிகழ்விற்கு தலைமை வகித்த லட்சுமி நிதான மாக, உற்சாகமாக சோர்வில்லாமல் நிகழ்வை நடத்தி னார்.பார்வையாளர்கள் பலர் பெருமாள் முருகன் மற்றும் காலச்சுவடு கண்ணன் ஆகியோரோடு படம் எடுத்து மகிழ்ந்தனர்.நிறைவான இலக்கிய சந்திப்பில் கலந்துகொண்ட தருணத்துக்கு விடைகொடுத்து எல்லோரும் விடைபெற்றனர்.



---



## வியுக்தியார் பதில்கள்

**ஆர். உதயகுமார்,**
**களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு**

### கேள்வி:

நாடுமுழுவதும் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு போங்கள் என்று போராட்டங்கள் நடக்கின்றன. எல்லா அரசியல் தலைவர்களும் ஆங்காங்கே போராட்டங்கள் நடாத்துகின்றார்கள். ஆனால் எங்கள் எம்.பி. சாணக்கியன் அவ்வாறு போராட்டம் நடாத்துவதை தடுக்க நீதிமன்றில் உத்தரவு பெறுகின்றார்களே ஏன்?

### வியுக்தியார்:

யுத்தம் முடிந்த பின்னர் அரசியல்வாதியான ஒரு வரை அடிக்கடி விசாரணைக்கு அழைப்பார்கள். அவரும் அதுபற்றிய செய்தியை முன்கூட்டியே பத்திரிகைகளுக்கெல்லாம் கொடுத்தும் விடுவார். ஆனால் அவர் அங்கு போவது எஞ்சியிருக்கும் புலிகள் பற்றிய தகவல்களைக் கொடுப்பதற்காக. அதுபோலத்தான் இதுகும். தங்களுக்கு தேவையான ஒருவரை பிரபல்யப் படுத்தி அவரை ஹீரோ ஆக்குவதும் பின்னர் அவரை தங்களுக்காக பயன்படுத்துவதும் அரசு பல ஆண்டுகளாக பின்பற்றும் ஒரு நடைமுறைதான்.

---

**ச. கணேசபாலன்,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

### கேள்வி:

இதுவரை வரலாற்றில் இல்லாததுபோல, அமெரிக்காவின் புதிய தூதுவர் ஒருவார காலம் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு இருந்தாரே. அவரது இந்த விஜயத்தின் நோக்கம் என்னவாக இருக்கும்?

### வியுக்தியார்:

அதிலென்ன விசேஷம் இருக்கப்போகின்றது. புதிதாக வந்தவர், அதைவிட கொழும்பில் வேறு போராட்டங்களால் கொந்தளித்து இருக்கின்றது. கொழும்பு வீதிகளில் நடமாட முடியவில்லை. கொஞ்சம் “றெஸ்ற்” எடுக்க வந்திருப்பார். தூதரகத்தில் இருப்பவர்களும் தமக்குத் தெரிந்தவர்களை சந்திக்க ஏற்பாடு செய்திருப்பார்கள். இவரும் அவர்கள்தான் யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் என்று நினைத்துக்கொண்டு சந்தித்துவிட்டு கொழும்பு திரும்பியிருப்பார்.

ஒரு வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தால், அவர்கள் சாப்பாடு சுவையாக இல்லாவிட்டாலும், அருமையாக இருக்கின் றது என்றுதானே சொல்வோம். அதுபோல அவரும் நமது தேவைகளை நிறைவேற்ற உதவுவோம் என்று தான் சொல்லியிருப்பார். அதனை நம்பிக் கொண்டு நாமும் அமெரிக்கா எமக்கு தீர்வை தரும் என்று நம்பிக்கொண்டு காலத்தை கடத்தவேண்டியது தான்.

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

ஈழநாடு



- சப்னாஸ் ஹாசிம் -

# வெண்ணிறக்கால்கள்!

காலைச் சூரியன் பொட்டெனச்சுடுகிற இலையிடுக்கில் மாமரத்து நிழலில் பெண்கள் பண்பாயோடு குந்திவிட்டனர். மௌலானாவின் மன்சிலுக்கு வருகிற பெண்களுக்கு தாயத்தும் ஓதிய தண்ணீர் பிடிக்க கலனும் விற்கவென மன்சிலை ஒட்டிய செய்யதுவின் கடைச் சாம்புராணி, மன்சிலின் பெரிய கிணற்றடிக்கு பின்னால் செத்துக்கிடந்த பூனை நெடியிடம் தோற்றுப் போயிருந்தது. லெவ்வை கிணற்றுக்கு கிழக்கால் பாத்தி பிடித்து மரவள்ளிக்கிழங்கை செவ்வென நட்டியிருந்த வரிசை இடையில் பூனையை புதைக்க குழி வெட்டிக் கொண்டிருந்தார். லெவ்வை தான் மன் சிலின் பேஷ் இமாம். தொழுவிப்பது, ஓதுவிப்பது, மையத்து வீடு, கத்தம்பாத்திஹா கோழி அறுக்க தக்பீர் சொல்லுவதென மாதம் ஐயாயிரம் தேத்திக் கொண்டிருந்தார்.

மௌலானா வரும் மாதங்களில் சதகா மட்டும் பத்து பதினையாயிரம் தேறும். பார்க்க தடித்த தேகம். பெனியன் இறக்கிய பச்சைவாரில் மண்ணடி நண்டு மார்க் சாரன் பிடிபட்டிருக்கும். தங்க முலாம் கைக்கடிகாரமும் அதை மூடும் கைரோமங்களுமென திடும் என்று இருப்பார். நெற்றியில் தொழுகை வடுவும் முகத்தில் தோய்ந்த கறார் பாவமுமாக மஜ்லிஸை துவக்கினாலே எல்லோரும் கமுக்கமாக பாத்திஹா ஓதத் தொடங்கிவிடுவர்.

காலையில் எட்டு மணிக்கெல்லாம் மௌலானா மருந்து கொடுக்க வருவார். பாய் விரித்த மன்சிலின் வெளிப்பள்ளியில் வெள்ளை விரித்த தலையணைப் பஞ்சில் முஸல்லாவைக் கிடத்தி பானா வடிவில் விரிப்பு போடப்பட்டிருக்கும். ஒரே மாதிரியான பச்சை முசல்லாவுக்கு நடுவில் கொஞ்சம் உயரமான தலைய ணைக்கு மேல் சிவப்பு காஷ்மீர் முசல்லாவிலேதான் மௌலானா உட்காருவார். தீர்க்க முடியாத நோய்களை, மனநிலை பிறழ்ந்த பெண்களை, விசம் கொட்டுண்டு வீங்கிய பிள்ளைகளை, சைத்தான் பிடித்த குமருகளை தவிர அவசரத்திற்கு வேறு யாரும் மௌலானா வை தரிசிக்க முடியாது. வரிசையில் நான்கு நான்காக பெண்களும் இரண்டு இரண்டாக ஆண்களும் இருக்க வேண்டும். ஊரின் பெரிய பள்ளிகளின் மரைக்காயர்களோ பட்டின சபை மெம்பர்களோ யாராகினும் வரிசையிலே நிற்கவேண்டும்.

காலையிலிருந்து ழுஹர் அதான் வரைக்கும் மௌலானா மருந்து கொடுப்பார். ஒரு சிறு போத்தலில் சீரகப்பாணியும் இசிமும் கொடுப்பார். பகல் உணவுக்கு பின்னர் மௌலானா ஓத ஆரம்பிப்பதாக மன்சிலின் இமாம் காளைக்கு போய்விடுவார். இமாம் காளை தொடர்ச்சியான நான்கு அறைகளும் ஒரு பின்வாசலோடு வெளித்திறக்கும் குசினியையும் கொண்டிருக்கும். இமாம் அறைக்கு வெளிச்சுவரிலிருந்து இரும்பு கேத் வழியாக பின்னால் சென்றால் தான் இமாம் அறைக்கு செல்ல முடியும். லெவ்வையும் மௌலானாக்கு கித்மத் (சேவகம்) செய்யும் முகைதீனும் அன்சாரும் மட்டும் தான் இமாம் காளைக்கு செல்ல முடியும். காளை வாசலில் மயிலும் வான்கோழிகளும் மேய்கின்ற குவாக் கியூழ் சத்தங்கள் மாமரத்து தண்ணீர் குழாய் வரை கேட்கும்.

அன்சாரும் முகைதீனும் மௌலானா வுக்கு விசுவாசிகள். மௌலானா சொன்னால் மன்சிலின் பெரிய கிணத்துள் தலைப்பாட்டில் பாய்வார்கள். மௌலானாவிடம் வரும் நோயாளிகள், பரிசாரிகளிடம் மௌலானாவை தொடவோ கிட்ட சென்று முஸாபாஹ் செய்யவோ இவர்கள் அனுமதிப்பதில்லை. மௌலானாக்கு தினமும் ஜமாஅத்தார் வீட்டிலிருந்து கெரியலில் வரும் பகலுணவை மௌலானாவுடன் உச்சிக்கொட்டி சாப்பிடுவது வழக்கம்.

முகைதீன் பள்ளி கொடியேற்றத்திற்கு மௌலானாவை அழைக்கிற முஸ்தீபுகளும் தோல்வி.

“எங்கட கடமைய நான் செய்யனும்”

மௌலானா மறுத்துவிட்டார்.

மௌலானா வெண்ணிற நெய் போல மினுமினுக்கி இருப்பார். மோவாயின் கீழே மச்சமிருக்கும். சதுர நாடியை சுற்றி ரெண்டு அங்குல தாடி மழித்த மீசைக்கு வந்து சேரும் வாயின் இருபக்கமும் நேர்த்தியாயிருக்கும். மௌலானா தூங்கப்போகும் போது அத்தர் பூசுவார். கன்னூஜ் அத்தர் மௌலானாக்கு பிடித்ததால் ஊராரும் மௌலானா அத்தரென்றே பின்னர் சொல்லும் வழக்குண்டு.

நான் சிறுவயதில் மௌலானாவைப் பார்த்திருக்கிறேன். மன்சிலில் ஓதப்போகும் போது அதிகாலையில் நான் இகாமத் (தொழுகையழைப்பு) சொல்ல மௌலானா தொழுவித்திருக்கிறார். எனக்கு பாம்பு கடித்த அன்றும் விசக்கல்லை ஒற்ற மன்சிலுக்குள் அவர் தான் தூக்கிப் போனார். மௌலானா வின் அத்தர் பாதி நம்மை



குணப்படுத்தி விடும். காயத்தில் மௌலானா வின் பறக்கத்தை (உமிழ் நீர்) தடவி விடுவார்.

காலையிலே வந்த பெண்களின் பேச்சு மன்சிலைப் பரவியிருந்தது. முழுப்பேச்சும் மௌலானா வின் வயது பற்றித்தான். சிலர் முப்பதென்றும் இருபத்தாறென்றும் பேசிக் கொண்டனர். முஹ்சினா அடித்து சொன்னாள்.

“முப்பது தான் வயது. மதீனா க்கு ஓதப்போகக் கொல்ல எட்டு வயசாம். பன்னெண்டு வருசமோதி வந்தாமெண்டு வாப்பா செல்லி எம்பெட்டு காலம் பெய்த்து. அதுக்குள்ள ரெண்டு கந்தூரியும் வந்திட்டு”

மௌலானாவைப்பார்ப்பதற்கென்றே இங்கே ஒரு கூட்டம் வரும். அவர்களை மரவள்ளிப்பாத்திக்கு ஆளுக்கு ரெண்டு வாளி தண்ணீர் ஊற்றச் சொல்வார் லெவ்வை. முஹ்சினாவின் கைபட்டு தண்ணீர் வாளி நைந்து போனதாக முகைதீன் சிரிப்பான். அசட்டுத்தனமாக மௌலானா வையே பார்த்துக்கொண்டிருப்பாள். வீட்டிலும் மன்சிலுக்கு போகிறேன் என்று காலையிலேயே வந்து விடுவாள்.

பேச்சு கலைந்து போகும் அறிகுறி. இமாம் காளை கேத்தை திறந்து மௌலானா மன்சிலுக்கு வருகிறார். முகம்மது பின் துக்ளக் காலத்தில் மதுரையில் நிலவிய சுல்தான் ஆட்சியில் மௌலானாவின் வம்சத்தினர் தோன்றினர். அந்த மிடுக்கோடு தலைப்பாகை நீண்ட ஜ/ப்பா, கழுத்தில் ஈரான் கல்லுமாலை, லெதர் பாதணி என மௌலானா முஹ்சினாவுக்கு ஜொலித்தார். சிறிது நேரத்தில் முஹ்சினா பதறிப் போனாள். மன்சிலுக்கு வரும் மௌலானாவுக்கு கால் கழுவி விட முகைதீனும் அன்சாரும் இல்லை.

மௌலானா குனிந்து வாளியை எடுப்பதற்குள் முஹ்சினா முந்திக் கொண்டாள். வாளியிலிருந்து மெதுவாக தண்ணீரை ஊற்ற மௌலானா கழுவினார். மௌலானாவின் கால்கள் வெளிர்ந்து சிவந்து போயிருந்தன. “ராவெல்லாம் நின்று கால் கடுக்க தொழுதார் மௌலானா”. முஹ்சினா நினைத்துக் கொண்டாள். நகங்கள் வெட்டி துப்பரவாயிருந்தன. விரல்களில் கரும் உரோமங்கள் சீராக விரவியிருந்தன. மௌலானா உள்ளே போய்விட்டார். குனிந்த போது விழுந்த மௌலானா வின் மிஸ்வாக் குச்சியை பொறுக்கிக் கொண்டாள்.

அவளுக்கு உடம்பு குளிர்ந்திருந்தது. மௌலானாவின் கால்களை தள்ளியிருந்து ஒற்றிக் கொண்டாள். கை வியர்த்தது. கையை மரவள்ளி தண்டின் நெட்டியில் வழித்து விட்டாள். ஹஜ் க்கு பிறை தெரிந்தால் மௌலானா ஊருக்கு போய்விடுவார். மௌலானா முஹ்சினாவின் எல்லாக் கனவுகளையும் ஆக்கிரமித்தார். அவள் திரும்ப மௌலானா முன்னே நின்றார். கிணற்றடியில் வாளிக்குள் மௌலானா மிதந்தார். செய்யது கடையில் அத்தர் லாக்கை கண்ணாடியில் மௌலானா தெரிந்தார். முஹ்சினாவுக்கு மௌலானாவின் கால்கள் உதைக்க தொடங்கின.

ழுஹர் தொழுது முடிந்ததும் மௌலானா இமாம் காளைக்கு திரும்பிக் கொண்டிருந்தார். கேத்தில் சாய்ந்தபடி முஹ்சினா சாப்பாட்டு கெரியலோடு நின்றிருந்தாள். முகைதீனும் அன்சாரும் கொடியேற்றத்திற்கு போய் விட்டார்கள். சதகத்து மாமியின் முறை இன்றைக்கு. புளியாண வாசம் மௌலானா வை சுண்டி இழுத்தது. சைகை காட்டினார் மௌலானா.

இமாம் காளைக்குள் ஒரு பெண் நுழைகிறாள். வான்கோழிகள் வீறிட்டு கத்தின. வாழைக்குலை பழுத்து மரம் விழப்பார்த்தது. இமாம் காளை வாசல் கூட்டாமல் குப்பை மொண்டிக் கிடந்தது. விறாந்தையில் சாய்மனை. பக்கத்தில் வெள்ளிப்படிக்கம். வெள்ளித் தாம்புலத்தில் பாக்குச் சீவல்கள். சுண்ணாம்பு டப்பா மேல் வெற்றிலைக் கட்டு. புகையிலை கந்தொன்று பேப்பர் சுருட்டி பாதி திறந்திருந்தது.

லாந்தர் சிமிழ் கழுவாமல் கருகியிருந்த மேஜையில் சில புத்தகங்கள். சுண்ணாம்பு சுவரில் மௌலானாவின் ஆடைகள் கொழுவுமிடத்தில் தஸ்பைக்கோர்வை. முதிரை லாக்கையினுள் துருக்கிப் பாத்திரங்கள், புழுதி மண்டிக்கிடந்த பழைய வெடித்துப்பாக்கி. முஹ்சினா கெரியலை பிரித்து மௌலானாவுக்கு பரிமாறினாள்.

வாசலைக் கூட்டி குப்பைக்கு நெருப்பு வைத்தாள். வாழைக்குலை வெட்டி உரப்பையிலிட்டு பழுக்கப் புகை காட்டினாள். லாந்தர் சிமிழைக் கழுவி திரிக்கு பழந்துணி மாற்றினாள். லாக்கையை அடுக்கி புழுதி துடைத்தாள். அடுப்பங்கரைப் பழங்கொள்ளித் துண்டுகளை அப்புறப்படுத்தினாள். ஒதுங்குமிடம் கழுவி கலனில் தண்ணீர் விட்டாள்.

லெவ்வையிடம் சொல்லி வியாழன் தோறும் இமாம் காளைக்கு சேவகம் புரிந்தாள்.

இமாம் காளைக்கு ராத்தீபு முடிந்து வந்தார் மௌலானா. அன்றும் வேலை முடித்து வெற்றிலை மடித்துக் கொடுத்தாள்.

“முஹ்சினே, இந்த வானத்தோட ஹக் என்ன சொல்லு.?”.

“எனக்கென்ன தெரியும். நீங்கானே மௌலானா”. சொல்லியபடி சுண்ணாம்பு தடவினாள் முஹ்சினா.

“வானத்துல கோடான கோடி நட்சத்திரம் சூரியன் சந்திரன் அது அதுட வேலைகள தவறாம பாக்குறது தான் வானத்தோட ஹக்”.

“அப்போ பூமியோட ஹக் மௌலானா?”.

மழை கெட்டியாக பெய்ந்தது. வான்கோழிகள் கூட்டுக்குள் கொக்கரித்தன. மயில் விறாந்தையில் படுத்திருந்தது.

“பூமியில இருக்கிற காடு மலை மரம் செடி கொடி பிராணிக மனிசன் எண்டு எல்லாத்துக்கும் சாப்பாடும் இருக்க ஊடும் அந்த அந்த இடத்திற்கேத்தமாதிரி எல்லாம் அமைச்சிருக்கெலவா. அது தான் பூமிட ஹக்”.

பேசிக்கொண்டிருந்த மௌலானா பாக்குத் தாம்புலத்தை உதைத்து விட்டார். அது அவள் வாழ்க்கையை உதைக்குமென்று அவள் நினைக்கவில்லை. மௌலானாவின் கண்ணும் வாயும் கோணியது. கால்கள் துடிப்பெடுத்து உடல் சுரங்காய்ந்தது. குமரக்கண்ட வலிப்பு. மௌலானாவுக்கு அடிக்கடி வரும். மௌலானா வை இழுத்து மெத்தையில் போட்டாள் முஹ்சினா.

கொய்யா இலை கொய்ந்து சாறு பருக்கினாள். திரிகடுகு, கடுக்காய் தோல், வசம்பு, பெருங்காயம் அதிவிடயம் கருமண் உப்பு சேர்த்து பிசைந்து ஊட்டினாள். சுரந்தணிந்தாலும் துடிப்படங்கவில்லை. கால்மடக்க கை துடித்தது. கை பொத்த கால் விசிறி காயம் வந்தது. முஹ்சினா ஏறி கால்களை அமத்தினாள். கைகளை உள்ளங்கை பற்றி சூடு காட்டினாள்.

மழை கெட்டியாக பெய்ந்தது. மறுநாளும் மௌலானா மன்சிலுக்கு வரவில்லை. கொஞ்சம் தேறியிருந்தார். முகைதீனும் அன்சாரும் பணிவிடை செய்தனர். மறுநாளும் முஹ்சினா வரவில்லை. தாமதமாகி மௌ லானா மன்சிலுக்கு வந்தார். நடை தளர்ந்திருந்தது. மரவள்ளிப் பாத்திகளைப் பிடுங்கி கிழங்கவித்து லெவ்வை மிளகாய் வெங்காயத்தோடு தின்னக் கொடுத்தார். முஹ்சினா அங்கில்லை. பரிசாரம் பார்க்க பெண்கள் வந்திருந்தனர்.

மௌலானா விசாரித்தார். முஹ்சினாவின் வாப்பா படுத்த படுக்கையாம். முகைதீன் காதுவெச்சபடி சொன்னான். மௌலானா வீடு போய் பார்த்தார். தாயத்துக் கட்டினார். இசிம் கொடுத்தார். முஹ்சினா முகத்தில் தெளிவில்லை. எதிலும் கண்ட மௌலானா வின் பிரமை அவளை உருவழிய வைத்தது. மரவள்ளி பாத்திகளைப் போல அவள் பிடுங்கி எறிந்த கிழங்கு அவியுமா.? அச்சத்தில் கூனியிருந்தாள். அவளுக்கு தலை சுற்றலாகி இருந்தது.

மௌலானா போகும் நாளும் வந்தது. முஹ்சினா வரவில்லை. இது தான் தான் கடைசியாக வரும் வருஷமென மௌலானா சொல்லியிருந்தார். ஊர்திரண்டு வந்தது. பைத் பாடி சிறுமிகள் மலர் தூவினர். ஊர் தலைவர்கள் பரிசும் பொதிகளும் கொடுத்தனர்.

“எங்கள உட்டுப்போட்டு போறேளா” பெண்கள் கதறியழுதனர். மௌலானா முஹ்சினாவைத் தேடினார். வண்டிலில் துருக்கி சிவப்பு முசல்லாவில் மௌலானா அமர மாடுகள் நகர்ந்தன. மழை கெட்டியாக பெய்ந்தது. பாராயணம் விண்ணைப் பிளந்தது. இம்முறை வெண்ணிறக் கால்கள் முஹ்சினாவின் வயிற்றில் உதைத்தன.

# பாலர் பைந்தமிழ்ப் பாடல்கள் நூல் சாவகச்சேரி இந்துவில் வெளியீடு








வயலூரன் செ.சுதாகரன் எழுதிய பாலர் பைந்தமிழ்ப் பாடல்கள் என்ற நூலின் வெளியீட்டு விழா (03.05.2022 செவ்வாய்க் கிழமை) சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

அண்மையில் புதிதாக மீசாலையில் திறக்கப்பட்ட கயல்விழி அறிவொளி முன் பள்ளி சார்பில் வெளியிடப்பட்ட இந்நூலின் வெளியீட்டுரையை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையப் பணிப்பாளர் கி. கந்தவேளும் நூல் நயப்புரையை செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் நிகழ்த்தினர்

நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ பாலகுமாரக் குருக்களும் வரவேற்புரையை புலஸ்திபுர தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் மங்கலகல்யாணி சிவனேசனும் இறை வணக்கத்தை தெ. திருவேரகனும் நிகழ்த்தினர். நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் தம்பதியரிடமிருந்து தேவகி ஜெயக்குமார் பெற்றுக்கொண்டார். சிறப்பு பிரதிகளை ஓய்வு நிலை அதிபர் க. அருந்தவபாலன் வழங்கினார் . திருக்கணிதம் க. சிவஞானம் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

# நிறைவேற்று அதிகார • • •

**(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவினதும் தலைமையிலான “நல்லாட்சி” அரசாங்கத்தின் காலத்தில் நிறைவேற்றப்பட்ட 19வது அரசியலமைப்பு திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களை ஓரளவுக்கு குறைத்து பிரதமரையும் பாராளுமன்றத்தையும் வலுப்படுத்தும் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தபோதிலும், அன்றைய ஆட்சி நிருவாகத்தின் அரசியல் மாச்சரியங்களினால் பயனுறுதியுடைய விளைவுகள் கிட்டவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளின்போது ஜனாதிபதி சிறிசேன தலைமையிலான சுதந்திர கட்சி சார்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படக் கூடாது என்றே வலியுறுத்தின என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அதாவது, ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட நாளில் இருந்து அதை ஒழிக்கவேண் டும் என்று வலியுறுத்திவந்த ஒரு கட்சி ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதே தனது பிரதான குறிக்கோள் என்று கூறிக்கொண்டு ஆட்சியதிகாரத்துக்கு வந்தவரின் தலைமையின் கீழ் அதே ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு எதிரான யோசனையை முன்வைத்த விசித்திரத்தை நாம் கண்டோம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிமுறையின் இலட்சணம் காரணமாக ராஜபக்சாக்கள் மீண்டும் முன்னரைவிடவும் கூடுதல் பலத்துடன் ஆட்சியதிகாரத்துக்கு வரக்கூடியதாக இருந்தது.

ராஜபக்சாக்கள் தங்களுக்கென்றே பிரத்தியேகமாக உருவாக்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக கோதாபய ராஜபக்ச 2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார்.சுமார் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக வாக்குறுதியைக் கொடுக்கவில்லை.அவரை எதிர்த்து போட்டியிட்ட சஜித் பிரேமதாசவும் கூட அத்தகைய வாக்குறுதியை மக்களுக்கு வழங்கவில்லை.அந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கோரிக்கை ஒரு உறங்கநிலையிலேயே இருந்தது. தென்னிலங்கைமக்களும் அதை பொருட்படுத்தாமல் அதிகாரங்கள் தனது கையிலேயே குவிந்திருக்கவேண்டும் என்ற சுபாவமுடைய ஒருவரையே தங்கள் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்தார்கள்.

2020 ஆகஸ்ட் பாராளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்ற பொதுஜன பெரமுன ஆட்சிப்பொறுப்பை ஏற்றதன் பின்னர் முதல் செய்த காரியங்களில் முக்கியமானது நல்லாட்சி அரசாங்கம் கொண்டுவந்த 19வது திருத்தத்தை இல்லாமல்செய்து 20 திருத்தத்தை கொண்டுவந்ததுதான். அதன் மூலமாக ஜனாதிபதி கோதாபய முன்னைய ஜனாதிபதிகள் சகலரையும் விட மட்டுமீறிய கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட ஒரு ஆட்சியாளராக விளங்குகிறார்.ஆனால், அவரது இரண்டரை வருடகால ஆட்சியின் இலட்சணத்தை இன்று நாம் நாட்டின் சகல பாகங்களிலும் வீதிகளில் காண்கிறோம்.தவறான கொள்கைகளை கடைப்பிடித்த காரணத்தினால் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த ஜனாதிபதியும் அவரது சகோதரர் பிரதமர் மகிந்தவும் பதவிகளில் இருந்து இறங்கமுடியாது என்று அடம் பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள்.ஆனால் அவர்களை வீட்டுக்கு போகுமாறு மக்கள் நடத்தும் வீதிப்போராட்டங்கள் தினமும் தீவிரமடைந்துகொண்டிருப்பதையே காண்கிறோம்.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வீட்டுக்கு போகுமாறு கேட்கும் மக்கள் போராட்டங்களின்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையையும் ஒழிக்க வேண்டும் என்ற முழக்கங்களும் ஓங்கி ஒலிக்கின்றன. மட்டுமீறிய அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியொருவரின் தவறான ஆட்சிமுறையினால் இலங்கை அதன் சுதந்திரத்துக்கு பின்னரான வரலாற்றில் படுமோசமான பொருளாதார அனர்த்தத்தில் சிக்கித்தவிக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் மக்கள் நிச்சயமாக ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு முழுமையான ஆதரவைத் தருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவும் சர்வஜனவாக்கெடுப்பில் மக்களின் அங்கீகாரமும் தேவை.சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது இன்றைய சூழ்நிலையில் உசிதமில்லை என்ற தொனியில் பிரதமர் மகிந்த உட்பட பல அரசியல்வாதிகள் கருத்தை வெளியிட்டதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை அரசியல் வர்க்கத்தினால் உறுதி செய்யமுடியுமாக இருந்தால், சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அமோகமாக வாக்களித்து அங்கீகாரத்தை வழங்குவார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இதைவிட சிறந்த சந்தர்ப்பம் கிடைக்கப்போவதுமில்லை.ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கோரிக்கை முன்னரைப் போல அல்லாமல் இப்போது ஒரு வெகுஜனக்கோரிக்கையாக மாறியிருக்கிறது. பல அபிப்பிராய வாக்கெடுப்புக்களும் அதை தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

அரசியல் சமுதாயம் இந்த அருமையான வாய்ப்பை உறுதியாகப் பற்றிக்கொள்ளுமா அல்லது தவறவிடுமா என்பதே விடை வேண்டி நிற்கும் கேள்வி.

# லண்டனின் செ. வே. காசிநாதனின் நூல் வெளியீடு நிஜக் கதவு பின்னால் இருக்கிறது திரும்பிப் பார்!




மு. நித்தியானந்தன், இ.பத்மநாப ஐயர்


ராகவன், யோ. நவஜோதி

“இலங்கையின் மெய்யியல் துறையில் ஈடிணையற்ற சிந்தனையாளராகத் திகழ்பவர் செ. வே. காசிநாதன். அவர் ஆக்கி அளித்திருக்கும் விற்கன்ஸ்ரைன் பற்றிய நூல் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷமாகும். தமிழகத்தில் இந்த நூல், ஆய்வாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது” என்று திரு மு. நித்தியானந்தன், செ. வே. காசிநாதனின் ‘விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம்’ என்ற நூலை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

நூல் பற்றி சிறப்புரையாற்றிய திரு. எஸ். ராகவன், “ நாம் இதுவரையும் மொழியில் அதன் சொற்களில் அர்த்தங்கள் பொதிந்திருப்பதாக பார்த்து வந்த பழக்கம் எம்மை தவறான பார்வைக்கு இட்டு சென்றிருக்கிறது. அதற்கான வழிகளை ஏற்கெனவே இருக்கும் மெய்யியல் வழிமுறைகளில் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கிறோம். போலிக்கதவுகளை திறக்க முயல்கின்றோம். நிஜக் கதவு பின்னால் இருக்கிறது. திரும்பிப்பார் என்கிறார் விட்கன்ஸ்டைன். இந்த தரிசனத்தில் காசிநாதன் தனது பார்வைகளை முன்வைக்கிறார்” என்று குறிப்பிட்டார்.

மார்க்சிய செயற்பாட்டாளர் தோழர் வேலு, நவாஜோதி, உடப்ட பலர் உரையாற்றினர். விம்பம் கலை, இலக்கிய அமைப்பின் பதினெட்டாம் ஆண்டின் சிறப்பு நிகழ்வாக அமைந்த இவ்விழாவில் நூலினை மு. நித்தியானந்தனிடமிருந்து இ. பத்மநாப ஐயர் பெற்றுக்கொண்டார். கொரோனாத் தொற்றின் நீண்ட முடக்கத்தின்பின் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டோருக்கு விம்பத்தின் சார்பில் ஓவியர் கே. கே. ராஜா நன்றி தெரிவித்தார்.

# வாழ்வதற்கான போராட்டமும் ஆள்வதற்கான போராட்டமும்!

**பனங்காட்டான்**



இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராகவும், அவரது தலைமையிலான ஆட்சிக்கு எதிராக வும் தொடுக்கப்பட்ட மக்கள் போராட்டம் விசை குறையாமலும், திசை மாறாமலும் தொடருகிறது.

இதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. முதலாவது, எந்தவொரு அரசியல் கட்சியும் இதற்குத் தலைமை தாங்கவில்லை என்பது மட்டுமன்றி, அரசியல்வாதிகளை போராட்டக் களம் பக்கம் கால் வைக்கவும் அனுமதிக்கவில்லை.

இரண்டாவது, முழுக்க முழுக்க இளம் சமூகத்தினரால் இது முன்னெடுக்கப்படுவது. இப்போது மாணவர்கள் - முக்கியமாக பல்கலைக்கழக மாணவர்கள் முக்கிய களங்களைத் திறந்து போராட்டத்தை வியாபிக்கின்றனர்.

கோட்டே ஜெயவர்த்தனபுரவிலுள்ள நாடாளுமன்ற வளாகத்தை முற்றுகையிட்டு நடத்தப்படும் போராட்டத்தை பல்கலைக்கழக மாணவர்களே தனித்து நடத்துகின்றனர். இதனால் நாடாளுமன்ற அமர்வுகளுக்கு உட்செல்ல வேண்டிய உறுப்பினர்கள் படையினரின் பாதுகாப்புடன் பின்வழியால் செல்ல வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

மாணவர் முன்னெடுப்பைக் கலைக்க கண்ணீர் புகை வீச்சு, ஒரு டசினுக்கும் அதிகமான மாணவர்கள் கைதாகி பிணையில் விடுதலை என்பவை தொடர் சம்பவங்களாகியுள்ள நிலையில், தொழிற்சங்கங்கள் இன்னொரு முழுநாள் கர்த்தாலை ஆறாம் திகதி நடத்தியுள்ளன. அடுத்த வாரத்தில் இதனைத் தொடர்ச்சியாக நடத்த ஆயிரத்துக்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

வடிவம் மாறாது, புதியவர்களை உள்வாங்கும் வகையில் ஒரு மாதத்தைத் தாண்டியும் தொடரும் தன்னெழுச்சிப் போராட்டத்துக்கு இற்றைவரை அரசியலாளர்களுக்கு கதவடைப்பு என்பது இலங்கையின் வரலாற்றில் முக்கிய பதிவுக்குரியது.

வாழ்வுக்கான மக்கள் போராட்டம் வீதிகளிலும் முச்சந்திகளிலும் சந்தைகளிலும் பிரதான அரச அலுவலகங்கள் முன்னாலும் இடம்பெற்றுக் கொண்டிருக்க, அரசியல்வாதிகள் தங்கள் இருப்புக்கான போராட்டத்தை மறுபுறத்தில் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

கோட்டா கோ ஹோம், மகிந்த கோ ஹோம் என்ற கோசங்களுக்கு இதுநாள்வரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை. கேட்கப்படாத அமைச்சரவை மாற்றமொன்று கண்துடைப்பு நாடகமாக இடம்பெற்றது.

தம்மீது வீசப்பட்ட எறிகுண்டை லாவகமாக தமது அண்ணன் மகிந்த மீது தள்ளிவிட்டு, அவரை மெதுவாக வீட்டுக்கு அனுப்பிவிட்டால் பிரச்சனையை தீர்த்துவிடலாமென கோட்டாபய தீட்டிய திட்டம் குரங்கு வாலாகியுள்ளது.

இலங்கையின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பவர்களும், அரசியல் தலைமைகளை மாற்றி ஏற்றி இறக்குபவர்களும், அரசியலமைப்பை வரையறை செய்பவர்களுமாக இயங்கும் பௌத்த பீட மகாநாயக்கர்கள் ஒன்று சேர்ந்து விடுத்த பரபரப்பான அரசியல் பிரகடனமும் செல்லாக்காசாகி விட்டது.

மகிந்த ராஜபக்ச பதவி விலக வேண்டும், சகல அரசியல் கட்சிகளும் இணைந்த இடைக்கால அரசொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதுவே மகாநாயக்கர்களின் மகாசங்க பிரகடனமாக அறிவிக்கப்பட்டது. இதனை மீறுபவர்களை தாங்கள் அங்கீகரிக்கப் போவதில்லையென்ற வெருட்டலும் இவர்களின் பிரகடனத்தில் கூறப்பட்டது.

ஆயிரம் பௌத்த பிக்குகள் கொழும்பு வீதிகளில் ஊர்வலமாகச் சென்று, சுதந்திர சதுக்கத்தில் கூடி, மகாசங்க பிரகடனத்தை ஒவ்வொரு வரியாக வாசித்து ஒரு வாரமாகியும் எதுவுமே நடைபெறவில்லை. அதேசமயம், மகாசங்கப் பிரகடனத்தை எவரும் எதிர்க்கவுமில்லை. சொல்லப்போனால் இரண்டும் கெட்டான் நிலைதான்.

இப்போதைய அரசாட்சி என்பது அரசியல் கொள்கை சார்ந்தது எனக் கூறமுடியாது. ஒரு கட்சியின் பெயரிலான - ஒரு குடும்பத்தின் ஆட்சி. நேர்த்தியாகச் சொன்னால் அண்ணன் - தம்பியின் (சகோதரர்கள் அவர்களின் பிள்ளைகள் உட்பட) இறுக்கமான அன்புப் பிணைப்பைக் கொண்ட ஆட்சி இது.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த ஒரு தசாப்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் கோட்டாபய. கொடிய யுத்தமொன்றை பத்தாண்டுகள் நடத்தி அதில் ருசி கண்டவர். இலங்கையில் இன அழிப்பு என்பதை யதார்த்தமாக்கியவர். இதற்கான வெகுமதியாகவே ஜனாதிபதி பதவி இவருக்கு வழங்கப்பட்டது.

**சாம, பேத, தான, தண்டம் என்ற நால்வகை உத்திகளைக் கைக்கொள்ளும் கோதபாய தரப்பு, படிப்படியாக நான்காம் வகைக்குள் கால் பதிக்க ஆரம்பித்துள்ளது. அடுத்து வரும் நாட்களும் வாரங்களும் அனைத்தையும் நின்று வெளிப்படுத்தலாம். நாளாந்த வாழ்வுக்காக மக்கள் போராடுகிறார்கள். ஆட்சியாளர்கள் ஆள்பவர்களாக தொடர்வதற்கு போராடுகிறார்கள். வெல்லப் போவது யார்?**

ஜனாதிபதித் தேர்தலில் இவரை வேட்பாளராக்கி, வெற்றியைப் பெற்றுக் கொடுத்து, குடும்பத்துக்கான தலைமைக் கதிரையை நிலைபெறச் செய்தவர் மகிந்த.

இதனையடுத்து இடம்பெற்ற பொதுத்தேர்தலின்போது முக்கியமான ஒரு முடிவு எடுக்கப்பட்டதாம். அந்த பரம ரகசியத்தை சில நாட்களுக்கு முன்னரே பசில் ராஜபக்ச பகிரங்கப்படுத்தினார்.



பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்றால் பிரதமர் பதவி மகிந்தவுக்கு. வேறு எவருக்கும் அந்தப் பதவி வழங்கப்படாது. கட்சியில் வேறு எவரும் அந்தப் பதவியை கேட்கவும் முடியாது. இந்த உத்தரவாதத்தின் அடிப்படையில்தான் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு மகிந்த அயராது உழைத்து வெற்றியைப் பெற்றுக் கொடுத்து - அதற்கான பரிசாக பிரதமர் பதவியையும் எடுத்துக் கொண்டார் என்பது பசிலின் வாக்குமூலம்.

மகாசங்கத்தின் பிரகடனத்தை ஏற்று பிரதமர் பதவியிலிருந்து மகிந்த விலகினால் அல்லது தவிர்க்க முடியாத சூழலில் விலக்கப்பட்டால், பொதுஜன பெரமுனவிலிருந்து வேறு எவரும் பிரதமர் பதவியை பெற முடியாது, பெறவும் மாட்டார்களென்று தேர்தலுக்கு முன்னர் வழங்கப்பட்ட உத்தரவாதத்தை பசில் இப்போது ஞாபகப் படுத்தியுள்ளார்.

மகிந்தவை பதவி விலகுமாறு எவரும் கேட்கக் கூடாது என்பதை நேரடியாக மகாசங்கத்தினருக்குச் சொல்லாமல், இதுதான் தங்களின் நிலையான நிலைப்பாடு என்பதை தெரிவிக்கவே பசில் ராஜபக்ச இவ்வேளையில் அதனை வெளிப்படுத்தினார் என்பது ஒரு வகை அரசியல் சாணக்கியம்.

இதன் தொடராக கோதபாய தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். தமது அண்ணனை பிரதமர் பதவியிலிருந்து தாம் ஒருபோதும் நீக்கப்போவதில்லை என்ற அவரது அறிவித்தல், இரத்தம் நீரிலும் தடிப்பானது என்ற பழமொழியை ஞாபகப்படுத்துவது.

மறுதரப்பில், மகிந்த எப்போதும் ஒரே கருத்தை மீள மீள ஒப்புவித்து வருகிறார். தம்மைப் பதவி விலகக் கோருபவர்கள் அதற்கான பெரும்பான்மையை நாடாளுமன்ற வாக்குப் பலத்தினூடாக நிரூபித்தால் அதனைத் தாம் ஏற்றுக் கொள்ளத் தயார் என்று சொல்கின்ற அதேசமயம், அப்படியாக நிலைமை மாறுமானால் அடுத்த எதிர்கட்சித் தலைவராக தாமே இருப்பாரென்ற தகவலையும் நாசூக்காக வெளியிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாசவின் பதவிக்கு ஆப்பு வைக்கப்படும் என்ற அச்சத்தை ஏற்படுத்துவதே இதன் உள் நோக்கம்.

இவை அனைத்துக்கும் முற்றுப் புள்ளி வைப்பது போன்று மே மாதம் 5ம் திகதி பலப்பரீட்சை ஒன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. சபையின் உபசபாநாயகர் தெரிவு இது.

இதுவரை இப்பதவியில் இருந்தவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான கேகாலை மாவட்ட எம்.பி. ரஞ்சித் சியம்பலபிட்டிய. சுதந்திரக் கட்சி அரச கூட்டிலிருந்து வெளியேறியதை அடுத்து இவர் தமது உபசபாநாயகர் பதவியைத் துறந்தார். இதனால் புதியவர் ஒருவரைத் தெரிவதற்கான நிகழ்வு 5ம் திகதி இடம்பெற்றது.

எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு அரச எதிர்ப்பு கட்சிகளின் சார்பில் சியம்பலபிட்டியவையே மீண்டும் உபசபாநாயகர் பதவிக்கு சுதந்திரக் கட்சி பிரேரித்தது. இதற்கு சஜித்தின் பிரதான எதிர்க்கட்சி ஆதரவைத் தெரிவித்திருந்தது. மகிந்த தலைமையிலான ஆளும் தரப்பில் ஒருவரை போட்டிக்கு இறக்கி வெற்றி பெற முடியாது போனால் என்ற கேள்வி எழுந்த காரணத்தால் சியம்பலப்பிட்டியவையே ஆளும் தரப்பு ஆதரிக்கத் தீர்மானித்தது. இப்படியொரு சூழ்நிலை உருவாகுமென்பதை எதிர்பார்த்திருந்த சஜித் அணி, தங்களின் முன்னைய முடிவை மாற்றி - தங்கள் தரப்பில் இம்தியாஸ் பாக்கிர் மாக்கரை போட்டிக்கு நிறுத்தியது. இதிலுள்ள விசித்திரம் என்னவென்றால் இரண்டு வேட்பாளர்களும் எதிரணியைச் சார்ந்தவர்கள்.

மகிந்த தரப்பு தங்கள் ஆதரவை சியம்பலபிட்டியவுக்கு வழங்கி 148 வாக்குகள் ஊடாக அவரை தெரிவு செய்ய வழிவகுத்தது. இது மிக மோசமான ஓர் அரசியல் சூழ்ச்சி. இம்தியாசுக்கு 65 வாக்குகள் மட்டுமே கிடைத்தது. இதனை ஒரு மினி நம்பிக்கையில்லாத் தீர்மானமாக மகிந்த தரப்பு பார்த்ததால் தங்கள் தரப்பிலிருந்து ஒருவரை போட்டிக்கு இறக்காமல், எதிரணியினரை பிளவுபடுத்தியது.

ஏற்கனவே சஜித் தலைமையிலான எதிர்க்கட்சி தங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எழுத்து மூலம் சபாநாயகரிடம் கையளித்துள்ள நிலையில், உபசபாநாயகர் தெரிவில் தாங்கள் போட்டியிட்டுத் தோல்வியடைந்தால் என்ற அச்சத்தினாலேயே மகிந்த தரப்பு உபசபா நாயகர் போட்டியிலிருந்து தவிர்த்துக் கொண்டது என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

இவ்வாறான அரசியல் சூறாவளி எதிர்கொள்ளப்படும் இவ்வேளையில் கதிரை மாற்றத்துக்கோ, ஆட்சி மாற்றத்துக்கோ சாத்தியம் காணப்படவில்லை. மாறாக, போராட்டத்தின் வீரியத்தை எவ்வாறு குறைக்கலாம் என்பதிலேயே கோதா தரப்பு ஈடுபட்டுள்ளது.

சாம, பேத, தான, தண்டம் என்ற நால்வகை உத்திகளைக் கைக்கொள்ளும் கோதா தரப்பு, படிப்படியாக நான்காம் வகைக்குள் கால் பதிக்க ஆரம்பித்துள்ளது. அடுத்து வரும் நாட்களும் வாரங்களும் அனைத்தையும் நின்று வெளிப்படுத்தலாம்.

வறுமைக்கோட்டின் கீழ் நாளாந்த வாழ்வுக்கு மக்கள் போராடுகிறார்கள். ஆனால், ஆட்சிக் கதிரையில் இருப்பவர்கள் அதிலிருந்து அகலாது தொடர்ந்து ஆள்பவர்களாக இருப்பதற்கு போராடுகிறார்கள். வெல்லப் போவது யார்?

# இடைக்கால அரசுக்கு இடமளித்து அரசாங்கம் பதவி விலகவேண்டும்



## சந்திரிகா வலியுறுத்தல்

கொழும்பு, மே. 08

இடைக்கால அரசாங்கத் துக்கு இடமளித்து அரசாங்கம் பதவி விலகவேண்டும் அல்லது அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைக்கால அரசாங்கத்துக்கு தயாராக இல்லை என்றால் பாராளுமன்ற தேர்தலுக்கு செல்லவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் ஆணை இருக்கும் வரை மக்கள் பிரதிநிதிகள் ஆட்சியில் இருக்க முடியும் என்றும், மக்கள் நிராகரித்ததை அடுத்து அவர்கள் விரைவில் அதிகாரத்தை கைவிட தயாராக இருக்கவேண்டும் என்றும் அவர் சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் தங்கள் அபிலாஷை களை நிறைவேற்றுவதற்காக மக்கள் பிரதிநிதிகளுக்கு அதி காரம் வழங்குகிறார்கள். மக்கள் கொடுக்கும் அதிகாரம் வாழ் நாள் முழுவதும் அல்ல தற்காலி கமானது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

மகாசங்கத்தினர், சிவில் சமூகம் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைத்து மதத் தலைவர்களின் பலத்த அழுத் தங்களுக்கு செவிசாய்க்காமல் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த நேரத்தில் அரசாங்கத் திற்கு இரண்டு வழிகள் மட் டுமே உள்ளன.

முதலாவது ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை இராஜி னாமா செய்து, இடைக்கால அரசாங்கத்தின் மூலம் உள் நாட்டு பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டில் நிலை யான நிர்வாகத்தை உருவாக்கு வது.

இரண்டாவது, அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க் கள் அதற்கு தயாராக இல்லை என்றால், பாராளுமன்றத்திற்கு செல்லுங்கள். தேர்தல் மற்றும் நிலையான அரசாங்கத்தை அமைக்கவேண்டும்.

இறுதியாக, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் நேர்மையாக மக்களுக்காக நிற்கவேண்டும் என்றும், அவர் களின் அபிலாஷைகளை பிரதி நிதித்துவப்படுத்த முடியா விட்டால் பதவி விலகவேண் டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன் - என்றார். (அ)

# போராட்டங்களின்போது சிறுவர்கள் மீது வன்முறை

## யுனிசெப் அமைப்பு கண்டனம்

கொழும்பு, மே. 08

இலங்கையில் இடம்பெறும் போராட்டங்களின்போது சிறு வர்களுக்கு எதிராக இடம் பெறும் வன்முறைகள் தொடர் பில் ஐ.நா. சிறுவர் நிதியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சிறுவர்கள் சம்பந்தப்பட்ட போராட்டங்களின் போது வன் முறை இடம்பெறுவது குறித்த தகவல்கள் தொடர்பில் யுனி செப் அக்கறை கொண்டுள்ளது. அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கு அனைவருக்கும் உள்ள உரிமை மற்றும் சிறுவர் கள் உட்பட அனைவரினதும் கருத்துச் சுதந்திரத்துக்கு உத்தர வாதம் அளிக்க வேண்டும் என வும் யுனிசெப் தெரிவித்துள் ளது.

சிறுவர் உரிமைகள் தொடர் பான ஐ.நா. சாசனத்தின்படி சிறுவர்கள் மற்றும் இளம் பரு வத்தினர் தங்களை பாதிக்கும் பிரச்னைகள் தொடர்பான போராட்டங்களில் பங்கேற்க வும் தங்கள் கருத்துக்களை தெரி விக்கவும் உரிமை உண்டு. சிறு வர்கள் மற்றும் அவர்களின் உரி மைகளை பாதுகாப்பதற்கு அர சாங்கம், உள்ளூர் சமூகங்கள் மற்றும் குடும்பங்களுக்கு பகி ரப்பட்ட பொறுப்பு உள்ளது.

அனைத்து வன்முறைச் செயல்களும் நிறுத்தப்பட வேண்டும். ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் செயற் படவேண்டும். போராட் டங்கள் மற்றும் வன்முறைகள் நிகழும் இடங்களில் சிறுவர் களை கொண்டு செல்வதை தவிர்க்கவேண்டும். சிறுவர்க ளுக்கு எதிராக அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். சிறுவர்களின் பாது காப்பிற்கான உத்தரவாதங் களை அனைத்துச் சந்தர்ப்பங்க ளிலும் உறுதிப்படுத்துமாறு சட்ட அமுலாக்கப் பிரிவினரை நாங்கள் வலியுறுத்துகிறோம் எனவும் ஐ.நா. சிறுவர் பாது காப்பு நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# ராஜபக்ஷக்கள் இல்லாத அரசில் இணைய தயார்!

கொழும்பு, மே. 08

எந்தவொரு ராஜபக்ஷக் களையும் உள்ளடக்காத அர சாங்கத்தில் இணைந்து கொள்ள தயாராக இருப்பதாக பாராளு மன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித் தார்.

கொழும்பில் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவித்த சம் பிக்க., சில குழுக்களின் செயற்பாடுகளினால் ராஜ பக்ஷக்களுக்கு பாராளு மன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பதை நாட்டுக்கு காண் பிக்கும் சந்தர்ப்பத்தை அவர்கள் தவறவிட்டுள்ள னர்.

எதிர்காலத்திலும் ஊழல் குடும்பம் மக்களிடமிருந்து திரு டுவதை தடுக்க எதிர்க்கட்சிகள் இன்னும் தயாராக இல்லை.

ஆர்ப்பாட்டக்காரர்களை முற்றுகையிட்டு மக்களின் குரலை நசுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. எனினும் ராஜபக்ஷக்கள் உண்மையான கைதிகளாக மாறிவிட்டனர்- என்றார். (அ)



# மரண அறிவித்தல்



## திருமதி ஈஸ்வரபவானி சோமசுந்தரம்

கொக்குவில் - யாழ்ப்பாணம்

**மலர்வு** 18.08.1951 **உதிர்வு** 05.05.2022

கொக்குவில் சம்பியன் வீதியைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரபவானி சோமசுந்தரம் கடந்த (05.05.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி ஈஸ்வரபாதம் மற்றும் - வசந்தரூபா ஈஸ்வரபாதம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர் களான சிவசம்பு - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், சிந்தியா சுரேஸ்குமாரின் (கனடா) பாசமிகு தாயாரும், ஜெகதீஸ்வரன் சுரேஸ்குமாரின் (கனடா) அன்பு மாமியாரும், கனடாவைச் சேர்ந்த அட்சயன், ஆராதனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ரூபரஞ்சினி (கனடா), ஈ.சரவணபவன் (பாராளுமன்ற உறுப்பினர் 2010 - 2020, உதயன் குழுமத் தலைவர்), ஸ்ரீரஞ்சினி (UK), முகுந்தன் (UK), ஸ்ரீதரன் (UK), வசந்தினி (இந்தியா) கீதா (UK), நவநீதன் (UK). ஆகியோரின் அன்புச் சகோதரியும், ச.பாலசுப்பிரமணியம் (கனடா), ச.யசோதை (உதயன் குழுமப் பணிப்பாளர்), ம.சக்திதாசன் (UK), மு.விமலாதேவி (UK), ஸ்ரீ.பிரேமினி (UK), ந.ராஜேந்திரன் (இந்தியா) ரா.ஸ்ரீஸ்காந்தா (UK), ந.சுகந்தினி (UK) மற்றும் மேனகா, ஸ்ரீகுமார் (கனடா), காலஞ்சென்ற சி.பாலசுந்தரம், நந்தினி பிரேம்குமார், சாந்தினி குலதேவன், சி.சிவசுந்தரம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இல.105. இராச வீதி கோப்பாயில் அமைந்துள்ள அன்னாரின் சகோதரனின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கலாசாலை வீதியில் அமைந்துள்ள திருநெல்வேலி இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி :
105, இராச வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
**ஈ.சரவணபவன் (சகோதரன்)**
(பாராளுமன்ற உறுப்பினர். 2010 - 2020)

**தொடர்புகளுக்கு : 0714115002**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 20 - 05 - 1942



**மறைவு** 06 - 05 - 2022

## திரு. கனகையா சின்னத்தம்பி

(Owner, Shri Vishnu Associates 4th cross street, Colombo 11. Unibrown steel Maha vithiyalaya mawatha, Colombo 12.)

இருபாலையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திரு. கனகையா சின்னத்தம்பி அவர்கள் 06.05.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

ஆன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகம்மா அவர்களின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பொன்னையா மகேஸ்வரி அவர்களின் அன்பு மருமகனும் செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும், தர்சிகா (கொழும்பு) அவர்களின் பாசமிகு தந்தையும், சசிகுமரன் (மயூரன்) அவர்களின் பாசமிகு மாமாவும், கிருசீசன், பிரமுசீசன், மதுலக்ஷி அவர்களின் அன்பு பேரனும், காலஞ்சென்ற மகாலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரனும், கண்மணி (கிளி) அவர்களின் மைத் துனரும், காலஞ்சென்ற திவ்யகுமார், உதயகுமார் (அவுஸ்திரேலியா), ரவீந்திரகுமார் (லண்டன்), லதா (கனடா), பிறேமகுமார் (கனடா), காலஞ் சென்ற சதீஸ்னா அவர்களின் சித்தப்பாவும், பாமினி, றெஜினாதேவி, புஸ்பராஜா, சிந்துஜா அவர்களின் மாமனாரும், சர்மிளா, இர்ஸ்மிளா, கிறிஸ்மிலன், அபிராமி, அபிநான், திவ்யா, தினோஷ், சந்தோஷ், காயா, வேணுகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.05.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் No.42, mews Street Colombo - 2 என்னும் முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலி கள் நடைபெற்று, மாலை 3.00 மணியளவில் பொரளை கனத்த மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**மயூரன் (இலங்கை)**

தொடர்புகளுக்கு :
**மயூரன் (இலங்கை) - 0094777 8752**
**லதா (அவுஸ்திரேலியா) - 009056268410**
**உதயா (அவுஸ்திரேலியா) - 0061433092101**
**ரவி (லண்டன்) - 00447877978107**
**0094777179899**
**0094719875264**

## அவசரகால...

“மக்கள் போராட்டங்களை அடக்குவதற்காக அவசரகாலச் சட்டத்தை நான் அமுல்படுத்தவில்லை. போராட்டம் என்ற பெயரில் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அனைத்துச் சட்டங்களும் பாயும்” என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

“எனக்கு எதிராக எவரும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம் போராட்டங்களையும் நடத்தலாம். ஆனால், என்னைப் பதவியிலிருந்து எவரும் விரட்ட முடியாது. 5 வருட மக்கள் ஆணைக்கமைய நான் ஜனாதிபதி பதவியில் நீடிப்பேன்” என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி மீண்டும் அமுல்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராகப் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

இதற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கடும் கண்டனங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் அறவழிப் போராட்டம் மீது கைவைக்கவேண்டாம் எனவும் அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நடத்திய விசேட சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ‘மொட்டு’வின் சிரேஷ்ட உறுப்பினர்களில் சிலர் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு எதிராகக் கருத்துக்களையும் முன்வைத்தனர். எனினும், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரினதும் வாய்களையும் மூடும் வகையில் ஜனாதிபதி மேற்படி விடயங்களைத் தெரிவித்தார். (அ)

## எதற்காக...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வாரங்களாக அதிகளவிலான மக்கள் பங்காற்றுதலுடன் நாடு முழுவதும் இடம்பெற்ற அமைதியான போராட்டங்கள் இடம்பெறுகின்றன. இந்த போராட்டங்கள் அனைத்தும் நாட்டின் ஜனநாயகத்துக்கு கிடைத்த பெருமை.

இவ்வாறு அமைதியாக போராட்டங்கள் நடக்கும் போது, அவசரகாலநிலைப் பிரகடனம் ஏன் செய்யப்பட்டது என்பதை புரிந்து கொள்வது கடினம்-என்றார். (அ)

## கருத்து...

அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலை பிரகடனத்துக்கு எதிராக கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய சவால்களைத் தீர்ப்பதற்கு ஜனநாயக மற்றும் அமைதியான அணுகுமுறை அவசியம் என சாரா ஹல்டன் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

மேலும் அனைத்து அடிப்படை உரிமைகளுடன் அமைதியான போராட்டத்துக்கான உரிமைகள் மற்றும் கருத்து சுதந்திரம் மதிக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அந்த உரிமைகளைக் கட்டுப்படுத்தும் அவசரச் சட்டங்கள் ஜனநாயக கருத்து சுதந்திரம் மற்றும் தீர்வுகளுக்கு எதிராகச் செயல்படுகின்றன என்றும் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார். (அ)

## அவசரகால நிலை...

கள் தற்போது எதிர் கொள்ளும் உண்மையான சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டை மீண்டும் செழிப்பானதாக கட்டியெழுப்பவேண் டும். அவசர காலச் சட்டங்கள் போன்றவை இதற்கு உதவாது எனவும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார். (அ)

# முகநூலில் ஒளிப்படம் பதிவேற்றுவதாக அச்சுறுத்தி கப்பம் கோரிய நால்வர் கைது!

யாழ்ப்பாணம், மே. 08

இளைஞன் ஒருவரை நிர்வாணமாக ஒளிப்படம் மற்றும் காணொளி எடுத்து கப்பம் கேட்டு மிரட்டியதாக இளம் தம்பதி உள்ளிட்ட நால்வர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் செல்வபுரத்தைச் சேர்ந்த இளம் கணவன், மனைவி மற்றும் அவரது சகோதரர்கள் இருவரே நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் முகநூல் போலிக் கணக்கில் சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞருடன் நட்பாகியுள்ளனர். பின்னர் இளைஞனை கோப்பாய்க்கு அழைத்து தமது வீட்டில் அறையில் பூட்டிவைத்து நிர்வாணமாக்கி சித்திரவதை செய்ததுடன், ஒளிப்படம் மற்றும் காணொளிப் பதிவை மேற்கொண்டுள்ளனர்.

ஒளிப்படம் மற்றும் காணொளியை முகநூலில் பதிவேற்றப் போவதாக அச்சுறுத்தி இளைஞனிடம் 2 லட்சம் ரூபாய் பணத்தை கோரியுள்ளனர். அச்சமடைந்த இளைஞன் வங்கிக் கணக்கில் அந்தப் பணத்தை கடந்த வாரம் வைப்பிலிட்டுள்ளார்.

இந்த நிலையில் மீளவும் இந்த வாரம் அந்த ஒளிப்படங்கள் மற்றும் காணொலியை பதிவேற்றப் போவதாக மிரட்டி இளைஞனிடம் 5 லட்சம் ரூபாய் கோரியுள்ளனர்.

அதனால் அச்சமடைந்த இளைஞன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதனை விசாரித்த பொலிஸார் இளம் தம்பதி உள்ளிட்ட நால்வரை நேற்று கைது செய்தனர்.

இளம் குடும்பத்தலைவர் இராணுவத்தின் வேலைப் பகுதியில் இணைந்து பணியாற்றி விலகியவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (அ-03)

## இடைக்கால அரசு அமைக்க ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு

கொழும்பு, மே. 08

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆதரவை வழங்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள யோசனைகளை நிறைவேற்றும் பட்சத்தில் அதற்கு ஆதரவை வழங்குவோம் என அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்யவேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் கூறியது.

ஆகவே சட்டத்தரணிகள் சங்கம் சமர்ப்பித்த முன்மொழிவுகளின் அடிப்படையில் தற்போதைய நெருக்கடியைத் தீர்க்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. (அ)

## நம்பிக்கையில்லா...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 கட்சிகளைச் சேர்ந்த சுமார் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐரோப்பிய...

பவிக்கின்றார்கள் என்பதை ஒரு மாத கால அமைதியான ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக்காட்டியுள்ளன என்று ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அவசரகாலச் சட்டம் எதிர் விளைவை ஏற்படுத்தும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் ருவிட்டர் பதிவில் கூறியுள்ளது.

ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஐரோப்பிய ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (அ)

## அவசரகாலச் சட்டம்...

டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் மக்களின் பேச்சு சுதந்திரம் மற்றும் ஒன்று கூடும் சுதந்திரம் உறுதி செய்யப்படவேண்டும்.

அத்துடன், கைது மற்றும் தடுப்பு காவல் உடன் தொடர்புடைய உரிமைகள் மற்றும் பிற அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் அவசர காலத்தின் போது பாதிக்கப்படாது அல்லது மீறப்படாது என்று நாங்கள் நம்புகிறோம் எனவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (அ)

# கிணற்றுக்குள் தவறி விழுந்து வேலணையில் சிறுமி மரணம்

யாழ்ப்பாணம் மே.08

வேலணை, பகுதியில் கிணற்றுக்குள் விழுந்த 11 வயதுச் சிறுமி ஒருவர் நேற்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இதன்போது சரவணை பகுதியினை சேர்ந்த ரூபன் ஐதுசா என்ற 11 வயதுச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டில் இருந்தவர்கள் அயல் வீட்டுக்குச் சென்ற சமயம் சிறுமி நீராடுவதற்காக கிணற்றடிக்கு சென்றுள்ளார். இதன்போது கால் தடக்கி கிணற்றுக்குள் விழ்ந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சிறுமியை கிணற்றுக்குள் இருந்து மீட்டு ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற போது, சிறுமி ஏற்கனவே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சுயாதீன எம்.பிக்கள் ஆதரவளிப்பர்

கொழும்பு, மே. 08

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியி னால் பாராளுமன்றில் முன்வைக்கப்படும் நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந் திக்கட்சி தலைமையிலான சுயாதீன எம்.பிக்கள் குழு தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர நேற்று தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 கட்சிகளைச் சேர்ந்த சுமார் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சகல நீதிபதிகளின் பாதுகாப்பை பலப்படுத்த பிரதமர் மஹிந்த பணிப்பு



கொழும்பு, மே.08

நாடுமுழுவதிலும் உள்ள அனைத்து நீநீதிமன்றங்களின் நீதிபதிகளினதும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மா அதி பருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த தகவலை பிரதமரின் ஊடக செயலாளர் ரொஹான் வெலிவிட்ட ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

கடுவெல நீதிவானின் உத்தியோக பூர்வ இல்லத்தின் பாதுகாப்பு நீக்கம் தொடர்பில் நீதிச்சேவை சேவை ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் சட்ட மா அதிபரினால் பிரதமரின் கவனத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டது. அது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக நடவடிக்கை எடுத்தார்.

கடுவெல நீதிவான் மற்றும் நாடு முழு வதிலும் உள்ள அனைத்து நீதிமன்றங் களின் பாதுகாப்பையும் நீதிபதிகளின் பாதுகாப்பையும் உடனடியாக பலப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பிரதமர் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்று ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாதுகாப்பு படையினரின் விடுமுறைகள் இரத்து

கொழும்பு, மே. 08

நாட்டில் உள்ள அனைத்து பாதுகாப்பு படையினரினதும் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## இலங்கைக்கு...

ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட பிரதிநிதி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 11 கட்சிகளின் கூட்டணியும் ஆதரவு

கொழும்பு, மே. 08

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு 11 கட்சிகளின் கூட்டணி தீர்மானித்துள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின்போதே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், இடைக்கால அரசில் இணைவதற்கும் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. (அ)

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு சிகிச்சை அளிக்க மறுத்த மருத்துவர்

கொழும்பு, மே. 08

பொதுமக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சரான பிரசன்ன ரணதுங்கவுக்கு சிகிச்சை அளிக்க லங்கா மருத்துவமனை மறுத்தனால் பதற்றம் நிலவியதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக சிங்கள நாளேட்டின் இணையத்தளத்தில் நேற்று சனிக்கிழமை வெளியான செய்தியில் கூறப்பட்டதாவது:

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க லங்கா மருத்துவனைக்கு சிகிச்சை பெற்ற சென்றவேளையில் லங்கா மருத்துவமனையில் பதற்றமான சூழல் ஏற்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடமையில் இருந்த மருத்துவர் ஒருவர் அமைச்சருக்கு சிகிச்சை அளிக்க மறுத்து அவரை மருத்துவமனையில் இருந்து வெளியேற்றியதாக மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாக அதில் கூறப்பட்டு உள்ளது. (அ)

## எரிபொருளின் தரம் குறித்து பரிசோதனை

கொழும்பு, மே. 08

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருளின் தரம் குறித்து சோதனைகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழிகாட்டுதல்களை மீறினால் உரிமம் இரத்து செய்யப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிபொருளின் தரம் மற்றும் பெற்றோலிய பொருட்களை கலப்பது குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நாணய நிதியம் இலங்கையுடன் இணையவழிப் பேச்சுவார்த்தை

கொழும்பு, மே. 08

சர்வதேச நாணய நிதிய குழு, இலங்கை குழுவுடன் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை இணையவழி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இலங்கை தொடர்பான தமது புதுப்பிக்கப்பட்ட அறிவித்தலை வெளியிட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பிரதானி மசாயிரோ நொஸாகி இதனை அறிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியம், தமது கொள்கை எல்லைக் குள், இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)







# பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் மனித உரிமைகள் ஆணைக்குழு அவதானம்!

கொழும்பு, மே. 08

பத்தரமுல்லை - பொல்துவ சந்தி யில், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்த போராட்டத்தின்மீது, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டமை குறித்து, மனித உரிமைகள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.

இது குறித்து விசாரணைகளை நடத்த எதிர்ப்பார்ப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பொலிஸ்மா அதிபர், அடுத்த வாரம் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட உள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பொல்துவ சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், பொலிஸ் வீதித் தடைகளை அகற்றி, பாராளுமன்றத்தை நோக்கிப் பயணிக்க முற்பட்டபோது கண்ணீர்ப்புகைப் பிர யோகம் மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். இதன்போது, போராட்டத்தில் ஈடு பட்டவர்களின் கூடாரங்கள் சேதமாக்கப்பட்டதுடன், அவற்றில் சேமித்து வைக்கப்பட்டிருந்த உணவுகளும் வீணடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில், பொலிஸ்மா அதிபர், அடுத்த வாரம் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட உள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

### புலமைப்பரிசில் பரீட்சை:

## பாடசாலை வெட்டுப்புள்ளி 20ஆம் திகதிக்கு முன் வரும்

கொழும்பு,மே. 08

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பாடசாலை விவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் லலிதா எகொடவெல தெரிவித்துள்ளார்.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பிரபல பாடசாலைகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான வெட்டுப்புள்ளிகள் நிர்ணயிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் ஜனவரி 22ஆம் திகதி நடத்தப்பட்டு மார்ச் 13ஆம் திகதி பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு மொத்தம் 340,508 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்ததுடன் இம்முறை பரீட்சை 2,943 பரீட்சை நிலையங்களிலும் 108 விசேட நிலையங்களிலும் இடம்பெற்றது. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 - 03 - 1950



மறைவு 07 - 05 - 2022

### குமாரசாமி கனகசபை

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் உடுவில் தெற்கு பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கனகசபை அவர்கள் 07.05.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,சறோஜினிதேவி(மணி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பாக்கியம் மற்றும் சரஸ்வதி, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலைமகள், காலஞ்சென்ற வசந்தா, வசந்தறூபன், சகிதா, செல்வறூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன், காலஞ்சென்ற ஆனந்தகுமார், யாழினி, பிரதீபன், ஜான்சி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாரங்கன், சாம்பவி, அஜித்குமார், அபிராமி, அபிர்ணா, சபீனா, வைஷ்ணவி, பவின், அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று ந.ப 12:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மானிப்பாய் திப்பித்திடலை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**வசந்தறூபன் - மகன்**
**Mobile : +447712712096**

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 12 - 1932



மறைவு 03 - 05 - 2022

### சின்னத்தம்பி சின்னையா

யாழ். மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கோப்பாய், மானிப்பாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், கனடா Toronto Maple ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னையா அவர்கள் 03.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம், நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புனிதவதி, கிருபநாயகி, கிருபானந்தன், கலைவாணி, பாலவேணி, பிரதாபன், ஜீவானந்தன், ஜெயானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தவராஜசூரி, குணாளகாந்தா, விக்கினேஸ்வரராஜா, சிவகௌரி, கலைமதி, சாந்தி, தாட்ஷாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சின்னம்மா, தங்கமுத்து, செல்லையா, இராசம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, விசுவலிங்கம், ராசமலர் மற்றும் ராசமணி, அன்னலிங்கம், கணேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,லிஷைலா, பெருஷன், அக்ஸரா, அபிஷன், லக்ஸன், சந்தோஷ், பிரணவி, சரூன், சஜீவன், வைஷாலி, ரித்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

**பார்வைக்கு**
Sunday, 08 May 2022 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை**
Monday, 09 May 2022 1:30 PM - 3:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம்**
Monday, 09 May 2022 3:00 PM - 3:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**ஜீவானந்தன் - மகன்**
**Mobile : +14167707499**

தகவல்:
**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-பீமா
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
07.00 மணி : SPOTLIGHT
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை - செந்தில்
தொண்டமான்




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## சிவ ஒளி

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு